
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 7-8 ஜூன்—ஜூலை 1957 விலை சதம் : 30



# அட்டைப் படம்



"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்பது தமிழ் மறை. வேளாண் வாழ்வின் சிறப்பைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்திருந்தனர் என்பதை நம் இலக்கியங்கள் பகரா நிற்கின்றன. ஆதி காலந் தொட்டு பண்பை வளர்ப்பவர்களாய் வாழ்ந்த வேளாண் மக்கள் இன்று மடித்த அங்கி கலையாது வேலை பார்த்துப் பணம் சம்பாதித்துப் போலி ஆடம்பர வாழ்க்கை வாழ நினைக்கின்றார்கள். இந்த நிலையை நாம் கூடிய சீக்கிரம் மாற்றிக்கொள்ள வேண்டும். விவசாய நாட்டில் விவசாயத்தை நம்பியே நம்மக்கள் வாழக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். அரசாங்கமும் நாட்டில் விவசாயத்தை விருத்தி செய்யப் பல வழிகளிலும் உதவிவருகின்றது. கூடிய சீக்கிரம் நமது விவசாய அமைச்சர் நெல் விளைவிப்பில் பெரியதோர் புரட்சியை உண்டுபண்ணும் நோக்கத்துடன் நெல் மசோதா வொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றார். இம்மசோதா நிறைவேறியதும் நாடு முழுவதும் செந்நெல் வயல் நிலங்களைக் காணலாம். அட்டைப் படத்தில் காணப்படுவது போன்ற பல காட்சிகளை அறுவடைக் காலத்திற் காணமுடியும்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிம்மாசனப் பிரசங்கம் | 3 |
| 2. | யாழ்ப்பாணக் குடாநாட்டு நன்னீர்த் தடாகம் | 8 |
| 3. | ஆசியா அளித்த அருஞ் செல்வம் | 11 |
| 4. | சந்தியோகுமையூர் அம்மானை | 14 |
| 5. | திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள் | 17 |
| 6. | இயன்மொழி வாழ்த்து | 20 |
| 7. | கொழும்பு—சிங்கப்பூர் விமானசேவை | 23 |
| 8. | வட இலங்கையில் ஒரு வாரம் | 24 |
| 9. | உருளைக்கிழங்குச் செய்கை | 31 |
| 10. | ஸ்ரீ சங்கபோதி | 32 |
| 11. | வல்வெட்டித்துறையின் வரலாறு | 36 |
| 12. | சத்தியாக்கிரக யோசனை கைவிடப்பட்டது | 41 |
| 13. | மாதச் செய்திகள் | 42 |
| 14. | கல்லோயாவில் புதுவாழ்வு | 44 |


1——J. N. R 18770—5,508 (8/57)



சுதந்திர இலங்கையின் மூன்ருவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தைத் திறந்துவைத்து மகாதேசாதிபதி ஜூன் மாதம் 13 ந் திகதி சிம்மாசனப் பிரசங்கம் செய்தார். பிரதமர் சிம்மாசனப் பிரசங்கத்தை மகா தேசாதிபதியிடம் கையளிக்கிருர்.

# சிம்மாசனப் பிரசங்கம்

**மேன்மைதங்கிய மகாதேசாதிபதி அவர்கள் 1957 ம் ஆண்டு ஜூன் மாதம் 13ந் திகதியன்று மூன்ருவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தைத் திறந்துவைத்து நிகழ்த்திய பிரசங்கம்.**

செனெற்றுச் சபைத்தலைவர் அவர்களே ! செனெற்றுச் சபை அங்கத்தினர்களே ! சபாநாயகர் அவர்களே ! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே !

கடந்த பாராளுமன்றக் கூட்டக் காலத்தில் எனது அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட அநேக கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. உள்நாட்டில் அரசாங்க பாஷைச் சட்டத்தைக் கொண்டுவந்தமை, தொழிலாளரிடையே ஓரளவு அமைதியின்மை, அரசாங்கசேவையிலுள்ள குறித்த ஒரு பகுதியினர் சமர்ப்பித்த குறைகள் ஆகியவை கஷ்டங்களை உண்டாக்கின. வெளிநாட்டு விஷயங்களை நோக்குமிடத்து சுயெஸ் கால்வாய் சம்பந்தமான பிணக்கினுல் ஏற்பட்ட நிலைமையின்பயனுக அரசியற் பிரச்சினைகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும் கிளம்பின. இத்தகைய கஷ்டங்கள் இருந்தபோதிலும், கடந்த கூட்டத்தைத் திறந்து வைத்தபொழுது யான் நிகழ்த்திய பிரசங்கத்தில் குறிப்பிட்ட கொள்கையை எனது அரசாங்கம் உறுதியாகக் கடைப்பிடித்து வந்துள்ளது.

வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரையில் எனது அரசாங்கம் எந்த வல்லரசு கோஷ்டியுடனும் சேராது சகல நாடுகளுடனும் நேச உறவை வளர்க்கும் மனப்பான்மையுடன் நடக்கும் கொள்கையைக் கடைப்பிடித்துவந்துள்ளது. சோவியத் சோஷலிஸ்ற் குடியரசு, சீனமக்கள் குடியரசு, கனடா ஆகியவற்றுடன் ஸ்தானீகராலயத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேறுபல நாடுகளிலும் ஸ்தானீகராலயத் தொடர்புகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன.

பல்கேரியா, சீனு, செக்கோசிலவாக்கியா, எகிப்து, ஜெர்மனி, ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, ஜப்பான், மாலைதீவுகள், பாகிஸ்தான், போலந்து, உறுமேனியா, ஸ்பெயின், யுகோசிலாவியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுடன் வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகளைத் தொடர்ந்து எங்கள் வெளிநாட்டு வர்த்தகத்தை மாற்றியமைக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் என்ற முறையில் எனது பிரதமர் 1956 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பேரவைக்குச் சென்ற தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கினுர். ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைக்கேற்ப, மற்ற நாடுகளிடையே சௌஜன்யமான உறவையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதிலும், பிணக்குகளை இணக்கமுறையில் தீர்த்துக்கொள்வதிலும், அடிமைத்தளையினின்றும் விடுதலைபெருத மக்களின் சுதந்திரக் கோரிக்கையை ஆதரிப்பதிலும் இத்தூதுகோஷ்டி முக்கிய பங்கு எடுத்துக்கொண்டது.

கடந்த சில மாதங்களில் எங்கள் நாட்டுக்கு விஜயஞ்செய்த பிரமுகர்களில் சீனமக்கள் குடியரசின் பிரதமர், பாரதப் பிரதமர், ஜப்பானியப் பிரதமர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இந்நாடுகளுக்கும் எமக்கும் பொதுவான பல பிரச்சினைகளைப்பற்றி

கலந்தாலோசித்தற்கேற்ற அரிய சந்தர்ப்பமாக இவ்வரசியலறிஞர்களின் விஜயத்தை எனது பிரதமர் பயன்படுத்திக் கொண்டார். எனவே இவர்கள் ஒவ்வொருவருடனும் கலந்தாலோசித்த விஷயங்கள் சம்பந்தமாகக் கூட்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் பயனாக ஏற்பட்ட பொதுவான இணக்க முடிபுகள், குறித்த நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே நேச உறவை உண்டாக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. உலக சமாதானத்தை நிலைநாட்டவும் மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கவும் மேற்கூறிய நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பொதுக் கொள்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும்.

வெளிநாட்டு அலுவல்களில் பூரணமாகப் பங்கு பற்றுவதை மேலும் இலகுவாக்கும் பொருட்டு, வெளிநாட்டு அலுவற் பகுதியையும் வெளிநாட்டு அரசாங்க சேவையையும் திருத்தியமைக்க எனது அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும். அரசியல் துறைக்குப் போலவே வர்த்தகத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்துத்தான் திருத்தியமைக்கும்.

திருகோணமலையிலுள்ள கப்பற்றளத்தையும் கட்டுநாயக்காவிலுள்ள விமானத்தளத்தையும் ஐக்கிய ராச்சிய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு திருப்திகரமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியர், பாகிஸ்தானியர் (பிரஜா உரிமை) சட்டப்பிரகாரம் இந்தியர் அனுப்பிய விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்த வேலை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நிலவும் நல்லெண்ணமானது இவ்விஷயம் சம்பந்தமாக விரைவில் ஒரு திருப்திகரமான முடிவை ஏற்படுத்த உதவிபுரியும் என்பதில் எனது அரசாங்கத்துக்கு நம்பிக்கையுண்டு.

தேர்தற் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கு நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சபையின் பொறுக்குக் கொமிற்றி தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அது செய்துள்ள சிபாரிசுகள் சம்பந்தமாக எனது அரசாங்கம் செய்யும் முடிவுகளை அமுல் நடத்த நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

இதர விஷயங்களுடன், குறிப்பாக இலங்கையைக் குடியரசாகப் பிரகடனம் செய்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், செனெற்றுச்சபை, அரசாங்க சேவைக் கொமிஷன், நீதான சேவைக் கொமிஷன் ஆகியவற்றின் எதிர்காலம் என்பவை சம்பந்தமாக, அரசியற் சட்டத்தினைத் திருத்தி அமைப்பதைக் கவனிக்கும் பொருட்டு செனெற்றுச் சபையினதும் பிரதிநிதிகள் சபையினதும் கூட்டுக் கொமிற்றியொன்றினை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நீங்கள் அங்கீகரித்திருக்கிறீர்கள். அத்தகைய கொமிற்றியினை நியமிக்க இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்.

பரிபாலனத் துறையில் அதிக திறமை ஏற்படும்பொருட்டு, பிரதேச சபைகளை நிறுவுதல் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்த வேலை இப்பொழுது பன்முகப்படுத்தப்படும். இதற்கான மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. அது உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்க சேவையில் இப்பொழுதுள்ள பாகுபாடுகளையும் வேற்றுமைகளையும் இயன்றவரை ஒழித்து, ஒன்றாக இணைக்கப்பட்ட பரிபாலன சேவையினை அமைத்தற்கான திட்டம் ஒன்றை வெளிநாட்டு நிபுணரின் உதவியுடன் தயாரிக்க எனது அரசாங்கம் உத்தேசித்துள்ளது. 1953 ம் ஆண்டின் சம்பள, பதவி நிர்ணயக் கொமிஷனின் அறிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவந்தவிடத்து ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கொமிஷன் நிறுவப்பட்டுள்ளது. இந்தத் துறையில் இடுக்கண் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் இதன்பாற்பட்ட ஏனைய விஷயங்களும் இந்தக் கொமிஷனுக்கு அனுப்பப்படின், அது அவற்றையும் பரிசீலனை செய்யும்.

ஜனநாயகத்துக்கு விரோதமான சட்ட விதிகளால் தண்டிக்கப்பட்ட அரசாங்க் ஊழியர்களின் விஷயத்தை எனது அரசாங்கம் கவனிக்கும் என்று அது அதிகாரத்துக்கு வந்த பொழுது உறுதிகூறியது. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் மீட்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசாங்க சேவையாளரின் தொழிற் சங்கங்களுக்கு எனது அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. இத்தகைய தொழிற் சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்படுவதற்கும் சமாசங்களாக ஒன்றுசேர்வதற்கும் அனுமதியளித்து தொழிற்சங்க இயக்கம் அபிவிருத்தியடைய எனது அரசாங்கம் தொடர்ந்து உதவி செய்துவரும்.

கடந்த கூட்டக்காலத்தில் சட்டமாக இயற்றப்படத் தவறிய மசோதா, அதாவது கொலைக்குற்றத்துக்காக மரண தண்டனை விதிப்பதை நிறுத்திவைப்பதற்கான மசோதா மீண்டும் சமர்ப்பிக்கப்படும். பிணக்குகளை இணக்க முறையில் தீர்த்துவைப்பதற்கு உதவி செய்யும் பொருட்டு கிராமப் பகுதிகளில் இணக்கச் சபைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. காணிகளைப் பிரிவிடுதல், உரிமையுறுதிகளைப் பதிவுசெய்தல் என்னுமிவற்றை இலகுவிற் செய்து முடித்தற்கேற்ற நடவடிக்கைகள்பற்றி கவனம் செலுத்தப்படும். இலஞ்சச் சட்டம் இன்னும் நல்ல முறையில் இயங்கும்பொருட்டு அச்சட்டத்தில் செய்யவேண்டிய திருத்தங்கள் பரிசீலனைசெய்யப்பட்டுவருகின்றன.

இந்நாட்டின் அபிவிருத்திக்கான முழுத் திட்டங்களையும் தயாரிக்கும் பொறுப்புள்ள தேசீய திட்டச் சபை ஒன்று சட்டப்படி நிறுவப்பட்டுள்ளது. அது தனது பொறுப்பில் விடப்பட்ட வேலையில் ஈடுபட்டுள்ளது. வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டுத் திட்டம் விவாதிக்கப்படும்பொழுது பூர்வாங்க அறிக்கையொன்று உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும். நிதி வருவாய்களை வகுக்குமிடத்து, மின்சக்தி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், விவசாயம், பெரிய கைத்தொழில்கள், சிறிய கைத்தொழில்கள் ஆகியவை குறிப்பாகக் கவனிக்கப்படும். தேசீய வளத்தைப் பெருக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் இத்தகைய திட்டங்கள் அத்தியாவசியமானவை எனவும், அவற்றிற்கு முதன்மையளிக்கவேண்டுமெனவும் எனது அரசாங்கம் கருதுகிறது.

தகுந்த நிபந்தனைகளுக்கியைய வெளிநாட்டு மூலதனம் இந்நாட்டில் இடப்படுவதையும் எனது அரசாங்கம் வரவேற்கின்றது.

சபாநாயகர் அவர்களே ! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே !

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும்.

தலைவர் அவர்களே ! செனெற்றுச சபை அங்கத்தினர்களே !
சபாநாயகர் அவர்களே ! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே !

நீர்வளங்களைப்பற்றி ஆராயும் சபையொன்றினை நிறுவுதற்கும், கூடியவிரைவில் நீர்வளங்களைப் பரிசீலனை செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வெள்ளத்தடுப்பு, நீர்ப்பாசனம், நீர்மின்சக்தியபிவிருத்தி ஆகியவற்றின் பொருட்டு மாவலிகங்கை, வளவகங்கை, களனி கங்கை ஆகியவற்றின் பள்ளத்தாக்குகளைப் பரிசீலனை செய்தற்கு நிதி ஏற்பாடு செய்யப்

பட்டுள்ளது. மாவலிகங்கைப் பள்ளத்தாக்கில் மினிப்பே விஸ்
தரிப்புத் திட்டமும் வளவகங்கைப் பள்ளத்தாக்கில் ஹூலந்த
ஓயாத் தேக்கமும் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.
பயிர்கள் அடிக்கடி கருகி அழிந்துபோவதால் சில பிரதேசங்கள்
பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்பது கடந்த வரட்சிக் காலத்
தின்போது நன்கு புலனாயிற்று. உடனடியாக நிவாரணம்
அளிக்கும் வழிவகையாகவும், எதிர்காலத்தில் இன்னல் ஏற்
படாது தடுத்தற்காகவும் இந்தப் பிரதேசங்களில் நீர்த் தேக்
கங்கள் அமைக்கப்படும்.

குடியானவர்கள் நிலமின்றித் தவிக்கின்றார்கள் என்பதை
எனது அரசாங்கம் உணராமல் இருக்கவில்லை. எனவே
முடிக்குரிய நிலம் பராதீனப்படுத்தப்படுவதையும் கிராம
விஸ்தரிப்புக்காக நிலம் வாங்குவதையும் துரிதப்படுத்தற்
கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நிலம் நற்
பயனளிக்குமுறையில் உபயோகிக்கப்படும். இது இயன்றவரை
கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு பரிபாலிக்கப்
படும். ஈரலிப்பு மண்டலத்தில் இறப்பர் உற்பத்தியின் பொருட்டு
விவசாயிகளுக்கு குறித்த அளவு நிலம் பராதீனப்படுத்தப்
படுகின்றது. அரசாங்கத்துக்குச் சொந்தமான தேயிலை, கரும்புத்
தோட்டங்கள் அமைக்கப்படும். தோட்டங்களைச் சிறு சிறு துண்டுக்
காணிகளாகத் துண்டாடுவதைத் தடைசெய்வதற்கான நடவடிக்
கைகள்பற்றி ஆலோசனை செய்யப்பட்டுவருகின்றது.

எனது அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததும், அரிசியின்
விலையையும் சீனியின் விலையையும் அது குறைத்ததை நீங்கள்
அறிவீர்கள். இதன்பயனாக இவ்விரு பொருட்களும் அதிகமாக
உபயோகிக்கப்படுகின்றன. உப உணவுப்பொருட்களின் வியாபார
த்தை விஸ்தரித்துக்கொள்வதில் கூட்டுறவு மொத்த விற்பனைத்
தாபனத்துக்கு உதவி செய்தபடியால், இந்தப் பொருட்கள்
நியாயமான விலையிலேயே போதிய அளவு கிடைக்கத்தக்கன
வாக எனது அரசாங்கம் செய்துள்ளது. எனது அரசாங்கத்தின்
அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட அம்சங்கள் அநேக இறக்குமதிப்
பொருட்களின் விலைவாசிகளில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி
வருகின்றன. எனவே உணவுப் பொருட்களை உள்நாட்டிலே
உண்டாக்குவதன் அத்தியாவசியத்தை முன்னரிலும் பார்க்க
இந்நிலைமை நன்கு வற்புறுத்திக் காட்டுகின்றது. உணவுப்
பொருட்கள் விஷயத்திலும் உள்ளூர்க் கைத்தொழில்களிற்
பயன் படுத்தக்கூடிய மூலப் பொருட்கள் விஷயத்திலும் சுய
தேவைப்பூர்த்தி என்பதே எனது அரசாங்கத்தின் அசையாத
கொள்கையாக இருந்துவருகிறது. திட்டமிட்ட உற்பத்தியின் பொ
ருட்டு பிரதான உணவுப் பொருட்களைக் கட்டுப்படுத்தி விநியோ
கஞ்செய்தல் இன்றியமையாததாதலின், அரிசி, சீனி, மா
என்பவற்றையும் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும்
ஏனைய உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் ஏகபோக
உரிமையை எனது அரசாங்கம் நிரந்தரமாகக் கையேற்றுக்
கொண்டது.

விவசாய உணவுப் பொருள் அபிவிருத்தி முயற்சிகளைப் புனர
மைப்புச் செய்தற்கான திட்டமொன்று கடந்த கூட்டத்தின்போது
பூரணமாக்கப்பட்டது. எனவே இத்திட்டத்தின் பிரகாரம் அபி
விருத்தியைத் துரிதப்படுத்தல் இப்பொழுது சாத்தியமாகும்.
உணவுப் பயிர்ச் செய்கையைப் போலவே ஏற்றுமதிப் பொருட்
பயிர்ச்செய்கையையும் விருத்தி செய்யவேண்டும் என்பதை
எனது அரசாங்கம் வற்புறுத்துகின்றது. எனவே இதன் பொரு
ட்டு ஆராய்ச்சிகளுக்கும் விஸ்தரிப்பு முயற்சிகளுக்கும் ஊக்கம்
அளிக்கப்படும்.

கமக்காரர் உத்தரவாத விலை என்ற முறையில் தங்கள்
விளைபொருட்களுக்குப் பெறும் உதவி தொடர்ந்து அளிக்கப்
பட்டுவரும். இப்பொழுது இரண்டு முக்கிய விஷயங்கள் ஆலோ
சனை செய்யப்படுகின்றன. கமக்காரர் தங்கள் தொழிலில் அதிக
கரிசனைகொள்ள இவை துணைபுரிவனவாகும். அவையாவன:
தற்போதுள்ள நெற்காணி உரிமை முறையை முற்றாக மாற்றி
யமைத்தலும் நெற்பயிர் இன்சூரன்ஸ் திட்டம் வகுத்தலும்
ஆகும்.

கால்நடை வளர்ப்பை விருத்திசெய்யும் பொருட்டு மிருக
வைத்திய ஆராய்ச்சிக்கும் இதர வேலைகளுக்கும் இந்தக்
கூட்டக்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும்.

சமுதாய பொருளாதார புனரமைப்புக்கு ஏற்ற சாதனமாக
கூட்டுறவு இயக்கத்தை மேன்மேலும் பயன்படுத்த எனது அர
சாங்கம் கருதுகின்றது. இதற்காகக் கூட்டுறவுத் தாபனங்களின்
அமைப்பு, கணக்கணிப்பு, கடமைகள் ஆகியவை சம்பந்தமாக
மாற்றங்கள் செய்யப்படும். அரசாங்க நிதியில் கூட்டுறவு இயக்
கம் தங்கியிருக்கும் நிலைமையைப் படிப்படியாக குறைத்து
விடும் நோக்கமாக கூட்டுறவு நிதியமைப்பு மாற்றியமைக்கப்
படும்.

நாட்டினைக் கைத்தொழில் மயமாக்குவது பொதுவாகப் பொரு
ளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமான அம்சமாகும்
என்று எனது அரசாங்கம் கருதுகிறது. கைத்தொழில் அபி
விருத்திக்கு அதிக கவனம் செலுத்தவேண்டுமென்ற அர
சாங்கக் கொள்கையைப் பின்பற்றி, புதிய கைத்தொழில் திட்
டங்களை அமைத்தற்கான பூர்வாங்கப் பரிசீலனைகள் நடைபெற்
றுள்ளன. உப்பு, அதன் உபபொருட்கள், சீனி, பருத்திநூல்
புடவை, சீமெந்து, உரம் முதலியவற்றை உற்பத்திசெய்தல்,
இல்மனைட்டை செப்பமாக்குதல் ஆதியன இவற்றுள் அடங்கும்.
சில கைத்தொழில்களின் விஷயத்தில் பரிசீலனைகள் நடை
பெற்று அமைப்புப் படங்களும் தயாரித்து முடிக்கப்பெற்றுள்
ளன. அவை இந்தக் கூட்டக்காலத்தில் நிறைவேற்றப்படும்.
இந்தத் திட்டங்களைப் பரிபாலிக்க அரசாங்க கூட்டுச் சமாசங்கள்
அமைப்பதற்கான சட்டம் தயாரிக்கப்படும். உப்புத் தொழிலை
அபிவிருத்திசெய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய
அளவுக்கு உப்பினைப் பெறுவதற்கும் உள்ளூர் உபயோகத்துக்
காக உப உப்புப்பொருள்களைப் பெறுவதற்குமான திட்டங்கள்
இப்பொழுது பூர்த்தியாகிவருகின்றன.

கைத்தொழில் மயமாக்குவதிலும் வேலை கொடுப்பதை அதி
கரிக்கச் செய்வதிலும் சிறு சிறு கைத்தொழில்களும் குடிசைக்
கைத்தொழில்களும் முக்கிய அங்கம் வகிக்குமென எனது
அரசாங்கம் கருதுகின்றது. அத்தகைய கைத்தொழில்களைப் பெறு
மளவில் நிறுவுதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பாது
காப்பு வரி விதித்தல், இறக்குமதிக்கட்டுப்பாடு, மூலதன உதவி,
கடன் உதவி, வரிச்சலுகைகள், தொழில் நுட்ப ஆலோசனை
ஆதியன மூலம் கைத்தொழில் அபிவிருத்திக்கு அதிக கரிசனை
காட்டப்பட்டது. அவ்வாறே தொடர்ந்து விசேட கரிசனை காட்டப்
படும். அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் ஒத்துழைப்பு முறையில்
மூலதனம் இட்டுள்ள அநேக கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்
பட்டுள்ளன.

கைத்தொழில் துறையில் பொருட்களின் தரம் தகுதிவாய்ந்த
தாக இருப்பதைக் கவனித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்
படுகின்றது. கைத்தொழில்களைப் பொதுவாகப் பதிவு செய்
வதற்கும் அவற்றை ஒழுங்காக நடத்துதற்குமான சட்டம்
தயாரிக்கப்படுகின்றது. இந்நாட்டின் தாதுப் பொருள்வளங்கள்
முறையாகப் பரிசீலனை செய்யப்படும். இரும்பு உருக்குத் தொழிற்
சாலை நிறுவுதல் சாத்தியமா என்பதைத் தீர்மானிப்பதற்கு
சுத்திகரிக்கப்படாத இரும்புத் தாதுவளங்கள்பற்றி விரிவான
பரிசீலனை செய்யப்படும்.

மீன்பிடி தொழிலில் மீன்பிடி நாவாய்களை இயந்திரமயமாக்கி, நவீன மீன்பிடி கருவிகளை உபயோகிப்பது பற்றியும், கடல்நீர், நன்னீர் வாழ் மீன்களைக் கூடியளவுக்குப் பிடித்தல் பற்றியும், மீன்களைத் தகரங்களில் அடைத்தலையும் இதர உப பொருட்களை உற்பத்திசெய்தலையும் அபிவிருத்தி செய்வதுபற்றியும் எனது அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்கும். கடற்றொழிலாளர்கட்குக் கடன் கொடுத்தல், கடலில் இறந்த அல்லது விபத்துக்குள்ளான கடற்றொழிலாளரின் குடும்பங்கட்டு நன்கொடையும் நட்ட ஈடும் அளித்தல், கடற்றொழிலாளருக்குச் சகாயநிதி யொன்றை நிறுவுதல் ஆகிய திட்டங்கள் இப்பொழுது தீவிரமாக ஆராயப்படுகின்றன.

எனது அரசாங்கத்தின் சர்வ தேச வர்த்தகக் கொள்கை அதன் வெளிநாட்டுக் கொள்கையுடன் நெருங்கிய தொடர்பு பூண்டதாய் இருக்கும். எங்களிடமிருந்து நெடுங்காலம் வாடிக்கையாக வாங்கிவந்தவர்களுடன் வர்த்தகத்தை விருத்தி செய்வதோடு எங்கள் பொருட்களுக்குப் புதிய சந்தைகளைப் பெறவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு நாங்கள் வர்த்தகத் தொடர்பு வைத்திராத தேசங்களுடன் வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். தேயிலைப் பிரசாரச் சபைமூலமாகவும் இதர தாபனங்கள் மூலமாகவும் ஐரோப்பாக் கண்டத்திலே எங்கள் தேயிலை விற்பனையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

தெங்குப் பொருட்களை வாங்குபவர்களிடையே போட்டியை உண்டுபண்ணுவதன்மூலம் எங்கள் தெங்குப் பொருட்களுக்கு ஆகக் கூடுதலான விலையினைப் பெறும் நோக்கத்துடன் தெங்குப் பொருட் சபையின் விற்பனைப் பகுதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அநேக நாடுகளுடன் நடாத்தப்படும் வர்த்தகம் இலங்கையர் மயமாக்கப்படும்.

கடன் எடுக்கும் வசதி இலங்கையில் மிக மிகக் குறைவாதலால், கடன் எடுப்பதற்குக் கூடுதலான வசதிகள் அளிக்கும் பொருட்டு, வளர் பயிர்களை ஈடாகக் கொடுத்து கடன் எடுக்க வசதியளிக்கும் பயிர் ஈட்டுமசோதா ஒன்று தயாரித்தல் பற்றி பரிசீலனை செய்யப்படுகின்றது.

ஏற்றுமதிப் பொருள்களுக்காக பொருட்கள் தராதர அலுவலகம் நிறுவப்படும். வியாபாரத்தில் ஈடுபட்ட இலங்கையருக்குக் கடன் எடுக்க கூடுதலான வசதிகள் அளிக்கக்கூடிய திட்டமொன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். திரிகோணமலையை வரிக்கட்டுப்பாடற்ற சுதந்திர துறைமுகமாக மாற்றியமைக்கும் யோசனை ஒன்று கவனிக்கப்பட்டு வருகின்றது.

தனிப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் அபிவிருத்திக்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கு அரசாங்கக் கொள்வனவுத் தாபனம் ஒன்று நிறுவுவது விரும்பத்தக்கதா என்பதை எனது அரசாங்கம் பரிசீலனை செய்யும். ஊர் சுற்றுப் பிரயாணிகள் அபிவிருத்திச் சபை ஒன்று நிறுவுதலும் ஆலோசிக்கப்பட்டுவருகின்றது.

இந்நாட்டின் பொதுநலப் பிரயோசன சேவைகளை விருத்தி செய்வதற்காக இக் கூட்டக் காலத்தில் அநேக நடவடிக்கைகளைக் கையாள எனது அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. தற்போதுள்ள பெருந் தெருக்களை நன்னிலையில் வைத்துப் பாதுகாப்பதுடன் பொதுவேலைப் பகுதி அண்மையில் பொறுப்பேற்ற தெருக்களைத் திருத்துவதிலும் புதிய தெருக்களைக் கையேற்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படும். தலத்தாபனங்கள், இனிமேல் நிறுவப்படவிருக்கும் பிரதேச சபைகள், மத்திய அரசாங்கம் ஆகிய இவற்றிடையே போக்குவரவுத் தொடர்புச் சாதனம், சம்பந்தமாகவுள்ள கொள்கையை ஒருமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

படிப்படியாக இயந்திர மயமாக்குதல் மூலம் கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தில் மேலும் முன்னேற்றம் ஏற்படும். காலித் துறைமுகம் விரைவில் விருத்தி செய்யப்படும். காங்கேசன்துறை, திரிகோணமலைத் துறைமுகங்களை விருத்திசெய்வது சம்பந்தமான பரிசீலனைகள் நடைபெறுகின்றன. கிரேஷியன் அறிக்கைபற்றி செய்யப்படும் முடிபுகள் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

புகையிரதச் சேவையிலும் திருத்தம் செய்யப்படும். திறமான நகர்புறச் சேவை, மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு நல்ல வசதிகள் ஆதியன மேற்கூறிய திருத்தத்தில் அடங்கும். பஸ் வண்டிச் சேவையைத் தேசீயமயமாக்குதல் சம்பந்தமான பூர்வாங்க வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான மசோதா ஒன்று விரைவில் கொண்டுவரப்படும். இதற்கிடையில் போக்குவரவுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தேசீயமயமாக்குதல் சம்பந்தமாக தேவையானவையும் விரும்பத்தக்கவையுமான பிற திட்டங்களையும் இக்கூட்டக் காலத்தில் எனது அரசாங்கம் பரிசீலனைசெய்யும்.

தபால், தெலிபோன், தந்திச் சேவைகளை விஸ்தரித்துத் திருத்தும் வேலை தொடர்ந்து செய்யப்படும். வானொலி, தகவற் சேவைகளுக்கும் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன.

தாபன வசதிகளைத் திருத்தி ஒருமுகப்படுத்தியமைத்தல், சூழ்நிலைச் சுகாதாரத்தில் விசேஷ கவனஞ் செலுத்துதல், யானைக்கால் நோய்த் தடுப்பு இயக்கத்தை நடாத்தல், மலேரியா ஒழிப்பு, வைத்தியர்களுக்கும் அத்தொழிலின் பாற்பட்டவர்களுக்கும் பயிற்சியளிக்கும் வசதிகளை விஸ்தரித்தல் முதலியனவே இந்தக் கூட்டக் காலத்தில் எனது அரசாங்கத்தினது சுகாதாரக் கொள்கையின் முக்கிய கருமங்களாகவிருக்கும். அரசாங்க வைத்திய உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையில் வைத்தியஞ் செய்வது என்ற மிகவும் சிக்கலான பிரச்சினை திருப்திகரமாக இணக்கமுறையில் தீர்க்கப்பட்டுள்ளது.

ஆயுள்வேத விருத்திக்காக பிறிதொரு அரசாங்கப் பகுதியை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. நவீன ஆயுள்வேத மருந்து தயாரிப்பு ஆய்கூடம் ஒன்று திறக்கப்படும்.

இலவச மத்தியான போசனம் அளித்தல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளிலுள்ள சகல வகுப்பினருக்கும் பயன்படுமாறு இது விஸ்தரிக்கப்படும். சுயபாஷைகள் மூலம் கல்வியூட்டும் முறையில் மேலும் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும். அதாவது உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திர முதல் வருட வகுப்புவரை சுயபாஷைகள் மூலம் கல்வியூட்டப்படும். ஆரம்பப் பாடசாலைகளில் செய்கை முறைக் கல்வியும், சகல பாடசாலைகளிலும் தொழிற்றுறைக் கல்வியும் அளிக்கப்படும். கிராமப் பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞான ஆய்கூடங்கள் நிறுவி விஞ்ஞானம் கற்பிப்பதில் விசேட கவனம் செலுத்தப்படும். விஞ்ஞான மாணவர்களுக்கு வித்தியா விருத்திப் பணம் அளிக்கும் முறை யொன்று கையாளப்படுகின்றது. வித்தியோதய பிரிவேனைக்கும் வித்தியாலங்கார பிரிவேனைக்கும் பல்கலைக் கழக அந்தஸ்து அளிக்கப்படும். ஏனைய தகுதி வாய்ந்த பிரிவேனைகளுக்கும் அவ்வித அந்தஸ்து அளிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

நுண்தொழிற் கல்வி விஸ்தரிக்கப்படுதல் அத்தியாவசியம் என்று எனது அரசாங்கம் கருதுகின்றது. எனவே அநேக கனிஷ்ட நுண்தொழிற் பாடசாலைகளை இந்நாட்டின் பல்வேறு இடங்களிலும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

தர்மச் சம்பளம், கயரோக உதவிப்படி போன்ற பொது நலச் சேவைகள் குறிப்பிடத்தக்க அளவு விஸ்தரிக்கப்படும்.

தொழிலாளர் வகுப்பினருக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் வீடுகள் கட்டுவதில் எனது அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தும். நிலம் வாங்க இயலாத பிரதேசங்களில் வீடு கட்டுபவர்களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதில் உதவிசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வீடுகட்டுபவர்களுக்குக் கடன் கொடுத்தல் தொடர்ந்து நடைபெறும்.

எனது அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததுமுதல் தொழிற்சங்க இயக்கத்துக்கு ஒரு புதிய ஊக்கம் பிறந்துள்ளது. இந்நாட்டிலுள்ள கைத்தொழிற்றொடர்புகளில் கைத்தொழில் நீதித்தலங்கள் ஓர் அம்சமாக விளங்குகின்றன. கைத்தொழில் விவாதச் சட்டத்தில் இன்னும் திருத்தங்கள் செய்வதுபற்றி கவனஞ் செலுத்தப்படுகின்றது. சம்பள தீர்ப்புச் சபைகளுக்கும் தொழிற்பகுதிக்கும் கூடுதலான அதிகாரங்களை அளிக்கும் பொருட்டு சம்பளத் தீர்ப்புச் சபைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. புதிய சம்பளத் தீர்ப்புச் சபைகள் நிறுவப்பட்டுள்ளன. வேறு தொழில்களும் இச்சட்டத்தின் அதிகார எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. உள்ளேயிருந்து வேலை நிறுத்தம் செய்வது சம்பந்தமான சட்டம் நீக்கப்படும் தொழில் தகராறுகளை விரைவில் தீர்க்கும் பொருட்டு தொழிற் பகுதியில் இணக்கக் கிளையொன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் தொழிலாளருக்கு விரைவில் நேர்மையான முறையில் நற்பலன் கிடைக்கும் பொருட்டு தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் திருத்தப்படும். தேசீய சகாய நிதியொன்றை அமைக்கும் மசோதா ஒன்று உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அரசாங்கம் அதன் கொள்கைப்படி, சிங்களமே இந்நாட்டின் அரசாங்க மொழியென வெளிப்படுத்திச் சட்டம் ஒன்று நிறைவேற்றியுள்ளது. அரசாங்க பாஷைப் பகுதி என்றொரு தனிப்பகுதியும் இதற்கென அமைக்கப்பட்டுள்ளது. இது இச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஆரம்பித்துள்ளது. தமிழ் மொழியின் உபயோகத்துக்கு நியாயமான ஸ்தானம் வழங்கவேண்டுமென்ற எனது அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க இப்படிப்பட்ட உபயோகத்துக்கான சில பொதுவான குறிப்புகளைக் காட்டி எனது பிரதமர் அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டார். இது சம்பந்தப்பட்ட நுணுக்கமான விபரங்களைத் தயாரித்து இந்த யோசனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு சீக்கிரத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். நெருக்கடியான பொருளாதாரப் பிரச்சினைகளை அநுகூலமாகத் தீர்ப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் எல்லாவற்றிற்கும் மேலானவை என்ற முறையில் நோக்குமிடத்து, இந்தச் சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அநுபவசாத்தியமான ஒரேயொரு வழி இதுதான் என்பதில் எனது அரசாங்கம் உறுதியான நம்பிக்கைகொண்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளினாலும் ஆகஸ்டில் அது நடாத்த உத்தேசித்திருக்கும் சத்தியாக்கிரக இயகத்தினாலும் நாட்டின் சமாதானம், சட்டம், ஒழுங்கு ஆதியனவும் சமூகங்களிடையே நிலவும் நட்புறவும் பாதிக்கப்படுமென்பதைக் குறித்து எனது அரசாங்கம் அதிகக் கவலையடைந்திருக்கிறது. விசேஷமாக, பாராளுமன்றக் கூட்டம் கலைக்கப்படுவதற்குமுன் எனது பிரதம மந்திரி அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நோக்குமிடத்து மேற்படி கட்சி இந்நடவடிக்கைகளில் இறங்க எவ்வித நியாயமும் இல்லை என்பதே எனது அரசாங்கத்தின் உறுதியான நம்பிக்கை. சிநேக பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலமாக மட்டுமே இப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளமுடியும். அவ்வாறே அவை தீர்த்துக் கொள்ளப்படவும் வேண்டும். எனது அரசாங்கம் சிறுபான்மையினரின் நியாயமான குறைகளைத் தீர்த்துவைப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கும் அதே நேரத்தில், நாட்டு மக்களின் நலனை முன்னிட்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் நாட்டைப் பாதுகாப்பதற்கும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவும் உறுதி கொண்டிருக்கிறது.

எனது அரசாங்கம் கலாசாரப்பகுதி ஒன்றினை அமைத்துள்ளது. மக்களின் கலைகளையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கும் அவற்றிற்குப் புத்துயிர் அளிப்பதற்கும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்குமான திட்டமொன்றை இப்பகுதி தயாரிக்கும்.

பௌத்த விஷயங்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கொமிற்றியின் சிபார்சுகளின் பிரகாரம் சாசன மண்டலம் ஒன்று அமைப்பதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கொமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த கொமிற்றி செய்துள்ள இதர சிபார்சுகளும் கவனிக்கப்படுகின்றன. மதபோதனைக்குரிய ஞாயிற்றுக் கிழமைப் பாடசாலைகள் போன்ற தாபனங்களுக்கு உதவி அளிக்கப்படும்.

மதஸ்தாபனங்கள் தற்போது பூரணமாக வரிவிதிப்பிலிருந்து நிவாரணம் பெறும் முறையை அகற்றும் நோக்கத்தோடு, வருமான வரிச்சட்டத்தைத் திருத்த எனது அரசாங்கம் மிகவும் விரைவில் ஒரு மசோதாவைச் சமர்ப்பிக்கும்.

மேற்கூறிய எல்லா விஷயங்களையும் உங்கள் ஆலோசனைக்கு விடுகிறேன். இவை உங்களால் கவனமாகப் பரிசீலனை செய்யப்படும் என நம்புகிறேன்.

---


## காணிக்கொள்கை மாற்றங்கள்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. சீ. பீ. டி. சில்வா அவர்கள் ஜனப்பிரதிநிதிகள் சபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பங்குபற்றிப் பேசியபோது, அரசாங்கத்தின் காணிக்கொள்கையில் ஏற்படுத்தப்படவிருக்கும் பெரிய மாற்றங்களை வெளிப்படுத்தினார்.

துப்புரவாக்கப்பட்ட காட்டுக் காணிகளில் தேயிலை பயிரிடும் விஷயம் பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறதென அமைச்சர் சொன்னார். இந்தத் திட்டத்துக்கு வழிகாட்டியாக நிபுணர்கள் சமர்ப்பிக்க விருக்கும் அறிக்கை பெரிது முதவுமென்றும், வரட்சி மண்டலத்தில் ஏறக்குறைய 500,000 எக்கர் காணியில் தென்னை நடுவதற்கான திட்டம் பற்றிய அறிக்கை ஏற்கெனவே தயாராக இருக்கிறதென்றும் அமைச்சர் கூறினார்.

அதிகப்படியான நெல் விவசாயத்துக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்குவது பற்றிக் குறிப்பிடுகையில், பிரதேச சபைகள் நிறுவப்படுவதைத் தொடர்ந்து, சிறந்த நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கூறினார். வளவை கங்கை, மகாவலிகங்கை, கிரிந்தி ஓயா, மல்வத்து ஓயா, கலா ஓயா ஆதியநதிகள் நீர்ப்பாசனத்துக்கு ஏற்றதாக அணையிடப்படும்போது 660,000 எக்கர்களுக்கு அதிகமான காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரட்சி மண்டலத்திலுள்ள பெரிய நதிகளை நீர்ப்பாசன நோக்கங்களுக்காக மறித்துக்கட்ட அரசாங்கம் கருதியுள்ளதென்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

சிங்கள மன்னரின் ஆட்சிக் காலத்தில், பயிரிடப்பட்ட சகல காணிகளிலும் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதே அரசாங்கத்தின் இறுதி இலட்சியமென்றும் அமைச்சர் ஈற்றில் கூறினார்.




யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடலேரியையும் அணைக்கட்டுகளையும் காட்டும் படம்.

# யாழ்ப்பாணக் குடாநாட்டு நன்னீர்த் தடாகம்

(எஸ். ஆறுமுகம் அவர்கள்; நீர்ப்பாய்ச்சற் பகுதி பிரதி அதிபர்)

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கில் உள்ள வரண்ட சம தரைக் குடாநாடு. இங்கு ஆறுகளாவது மலைகளாவது இல்லை. ஆனால் இயற்கையன்னை செழிப்பான மண்ணை அளித்துள்ளாள். மக்கள் அரும்பாடுபட்டு ஆழமான கிணறுகளைத் தோண்டி, துலா அமைத்துப் பயிர் செய்வார்கள். குடியானவனின் கதி பருவமழையைப் பொறுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உணவுப்பஞ்சம் காலத்திற்குக் காலம் ஏற்பட்டது எனச்சரித்திரம் கூறுகிறது. மழை குறைந்த வருடங்களில் தான் நீர்ப்பாசன வசதிகள் அமைத்தல் அத்தியா வசியம் என்பது பலருக்குப் புலப்படுகின்றது. ஒரு சிலர் முன் எச்சரிக்கையாக ஆகவேண்டியவற்றைச் செய்ய முற்படுவர்.

**கனகராய முதலியாரின் அரிய செய்கை**

கனகராயன் ஆறு கனகராய முதலியாரால் வெட்டப்பட்ட தென்றும், யானையிறவு—யாழ்ப்பாணம் இலங்கையுடன் பொருந் தும் பூசந்தியாக இருந்ததென்றும், அது வழியாக ஆற்றைக் கொணர்ந்து யாழ்ப்பாண விளை நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்ச எண்ணினர் என்றும் "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்னும் நூலில் திரு. முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள் கூறியிருக் கின்றனர்கள்.

**ஒல்லாந்தர்** ஆட்சி புரிந்த காலத்தில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தத்திட்ட மிட்டு நிறை வேற்றப் பல முயற்சிகள் செய்யப் பட்டன. ஆனால் அரசியற் கலகங்கள் காரணமாக அவை தடைப்பட்டன.

**1784 ம் ஆண்டில் முதலியார் சபையின் தீர்மானம்**

1784 ம் ஆண்டில், அதாவது ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரியுங்காலத்தில் மழை குறைந்ததன் காரணமாக உண் டாய உணவுப் பஞ்சத்தால் நாடு மிக வருந்தியதென்றும், "அவ்வருஷம் முத்துக்குளிப்பும் வைப்பாகவில்லை அது கண்டு தேசாதிபதி—சுழிபுரம் செல்வநாயக முதலியார் சரவணமுத்து முதலியார், புலோலிப் பெரிய சிங்கநாயக முதலியார், வேலப்ப முதலியார் முதலியவர்களையும் யாழ்ப்பாணத்துள்ள பிரபுக்களை யும் வரவழைத்து, அவர்களோடு யோசித்து, நெல் விலையை

இறக்கி விற்கவும், அற்பகூலி கொடுத்து இராச காரியமாகக் கனகராயன் ஆற்றை யானையிறவுக் கடலைத் தூர்த்து, அணையிட்டு அதன் வழியாகக் கொணர்ந்து யாழ்ப்பாணத்து விளைநிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் தீர்மானம் பண்ணினர்" என்றும் கூறுகிறார் சரித்திராசிரியர் முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.

**திரு. க. பாலசிங்கம் அவர்கள் கழறியது**

சற்றேறக்குறைய 35 ஆண்டுகட்கு முன் இலங்கையில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டது. இலங்கைச் சட்ட நிரூபணசபை அங்கத்தவர் கௌரவ திரு. க. பாலசிங்கம் அவர்கள் சிறந்த அறிவாளி. ...த்திரத்தை அலசி ஆய்ந்தார். "ஒரு சிறு மழைத்துளியாவது மனிதனுக்குப்பயன் கொடுக்காமல் சமுத்திரத்தை அடைய விடக்கூடாது" என்னும் பராக்கிரமவாகு மன்னனின் திருவாக்கை கருத்திலுன்னினர். கடலேரிகளை யெல்லாம் நன்னீர்த்தடாகங்களாக மாற்ற வேண்டுமென வற்புறுத்தினர். வட மாகாணத்தின் முதன்மையான நதியான கனகராயன் ஆற்றின் வெள்ளத் தண்ணீரை உபயோகிப்பதற்கான உபாயங்களில் மேலும் கவனம் செலுத்தப்பட்டது.

**திரு. F. R. G. வெப் அவர்களின் அறிக்கை**

நீர்ப்பாசன முதல்வரின் வேண்டுகோளின்படி வடபெரும்பாக நீர்ப்பாசன அதிகாரியும் நிபுணருமான திரு. F. R. G., வெப் (Webb) அவர்கள் "யாழ்ப்பாணக் குடா நாட்டுக் கடலேரித்திட்டம் பற்றிய அறிக்கை" ஒன்றை 1942 ம் ஆண்டில் எழுதினர். அதில் குடாக் கடலுக்குள் உப்புத்தண்ணீர் புகாமல் தடுக்கும் முறைகளையும் அதனல் சேரும் நன்மைகளையும் விவரித்துக்காட்டியுள்ளார்.

**1949 ல் ஒரு சிறு தம்பி கண்ட உண்மையும் கூறிய உபாயமும்**

ஒரு நாட்காலை, மாசிமாதம், 1949 ம் ஆண்டு, தென்னுட்டிலிருந்து இரவு முழுவதும் பிரயாணம் செய்த ஒரு குடும்பத்தினர் யானையிறவுப் பாலத்தின் மருங்கில் சிறிது இளைப்பாறிக் கொண்டிருந்தனர். கைகளை அலம்பினர்கள். பாலத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள நீர் நன்னீராக இருந்தது. ஆனல் மேற்குப் பக்கத்தில் நீர் கசப்பாக் இருப்பதை அச்சிறுவன் பரீட்சையில் கண்டான். காரணம் வினவ தந்தை விளக்கினர். "அப்பா எங்கள் மோட்டார் வண்டியில் மணலை ஏற்றி வந்து இப்பாலத்தை அடைப்போம். அப்போது இது எப்பொழுதும் நல்ல நீராகவே இருக்கும்" என்றான் தம்பி.

அவ்வருடம் கனகராயன் ஆற்றில் பெரும் வெள்ளப் பெருக்கு. இரணமடுக்குளமுந் தள்ளிப்போட்டது. நல்ல நீர் பாலத்திற்கு கிழக்குத் திசையிலுள்ள குடாவில் பயன்படாது வீணே கழிந்தது. தைமாதத்தில் இப்பாய்ச்சல் நின்றுவிட்டது. எனினும் அப்பகுதியில் உவர்ப்புத் தென்படவில்லை.


பாலத்தினூடாக கடல் நீரை கிழக்குப் பக்கத்தினுட்புகாதவாறு தடுத்து வருடம் முழுதும் நல்ல நீராக வைத்துக் கொள்ளுதல் தான் "ஆனையிறவு நன்னீர்த் தடாகத்திட்டத்தின் அடிப்படைச் சாத்திர நுட்பம்.


### சாஸ்திரக் குறிப்புகள்

**கனகராயன் ஆறு**

கனகராயன் ஆறு வவுனியாப் பிரிவில் உற்பத்தியாகி, புளியங்குள—மாங்குளப் பகுதி வழியாகச் சென்று இரணமடுக் குளத்தை நிரப்புகின்றது. இதன் மிகுதி நீர் யானையிறவுக்

அரியாலை அணைக்கட்டு.





தொண்டமானாற்று அணைக்கட்டு.

குடாக்கடலை, அதாவது யானையிறவிற்குக் கிழக்கேயுள்ள குடாக் கடலைச் சேர்ந்து ஆனையிறவுப் பாலத்தினூடாகச் சமுத்திரத்தை அடைகின்றது. 350 சதுரமைல் வட்டார வடிதரையிலிருந்து மழை வெள்ளம் இந்த ஆற்றைச் சேருகின்றது. இத்துடன் மேலும் 120 சதுரமைல் வடிதரை வெள்ளம் ஆனையிறவுக் கடலை அடையும்.

**யானையிறவுக் கடலேரி**—பிரதம தடாகம்

யானையிறவு முதல் சுண்டிக்குளம் வரை பரந்து கிடக்கும் இந் நீர்ப்பரப்பு 11,400 ஏக்கர் கொண்டது. கனகராயன் ஆறு, நெத்தலி ஆறு, பரமெந்தல் ஆறு, தொவிலாறு முதலிய ஆறுகளிலிருந்து பிரதம தடாகம் நீர் பெறும். இதன் வடக்கெல்லை வண்ணான்குளம், தெற்கில் கரைச்சி நிலங்கள் உள்ளன. பாலத்தடியில் அணையும், சுண்டிக் குளத்தின் அருகாமையில் மிகுதி நீர் பாய்தற்கு கட்டும், ஏற்படுத்துவதால் குடாக்கடல் வெள்ள நீர்ப்பெருக்கு யானையிறவு நன்னீர்த் தடாகமாக அமையும். இத்தடாகம் இரணமடு நீர்பாசனக் குளத்தினும் இரு மடங்கு பெரிதாகும். நாலரை அடி மட்டம் தண்ணீர் தங்கும்.

ஆனையிறவுத் திட்ட வேலை மூன்று பிரிவினுள் அடங்கும். முதலாவதாகப் பாலத்திற்குப் பக்கத்தில் கட்டும் அணை கனகராயனாற்று வெள்ள நீரைச் சேகரித்தற்கும், மேற்குக் கடலினின்று உப்பு நீர் புகாமல் தடுப்பதற்கும் உதவும். குடாக்கடலின் மறு நுனியில் உள்ள, $1\frac{1}{4}$ மைல் நீளமுள்ள அணைக்கட்டு அதிகப்படியான வெள்ளப் பெருக்கு வழிந்து போகவும், சமுத்திரம் வழியாக உப்புநீர் உட்புகாமல் காக்கவும் பயன்படும். மேற்றிசையிலும் கீழ்த்திசையிலும் உள்ள கட்டுகள் நன்னீர் சேகரிப்பதற்குத்வும்.

**தொடர்புக் கால்வாய்**

பிரதம தடாகத்தில் சேகரித்த நன்னீர்ப் பெருக்கை யாழ்ப்பாணக் குடா நாட்டுள் செலுத்துவதற்கு ஒரு தொடர்புக் கால்வாய் அமைத்தாகிவிட்டது. இது 40 அடி அகலமும் 3 மைல் நீளமும் உள்ளது. இக் கால்வாய், மான்பாய்ந்த வாய்க்கால் வழியாக மண்டலாய் பிள்ளையார் கோவில் பக்கத்தால் சென்று, பெரிய பச்சிராப்பள்ளியில் வடமராட்சித் துணைத் தடாகத்தை அடையும்.

**வடமராட்சித் துணைநீர்த்தடாகம்**

வடமராட்சிக் குடாக்கடல், பச்சிலைப் பள்ளியைச்சேர்ந்த முல்லியன் பகுதி, செம்பியன்பற்று, எழுதுமட்டுவாள், வரணி, கரவெட்டி, வல்லைவெளி ஆகிய பகுதிகளினூடே பரந்திருக்கின்றது. இக் குடாக்கடல், வல்வெட்டித்துறையை அடுத்த தொண்டைமானாற்றில் சமுத்திரத்தோடு தொடர்புறுகின்றது. மேலும், இதன் வேறொரு பாகம் சரசாலையிற் பிரிந்து யாழ்ப்பாண நகர்ப்பக்கமாகச் சென்று அரியாலையில் கடலுடன் சேருகின்றது. இக்குடாக்கடல் ஏறக்குறைய ஒரு மைல் அகலமுடையது. இது குடா நாட்டினூடே உள்ளதனால் மக்கள் வாழ்க்கையை ஒருவாறு இயக்கும் தன்மையுடையது.

தொண்டைமானாற்றில் சமீபத்தில் கட்டி முடித்த அறுநூறு அடி நீளமுடைய அணை, வடக்கிலிருந்து கடல் நீர் குடாக்கடலுள் புகாமல் தடுக்கின்றது. இதன் அடிப்பாகம் கற்களால் அமைக்கப்பட்டது. 200 அடி மட்டத்தில் இரும்புக் கதவுகள் உள்ளன. கதவுகளை இயக்குவதற்கு இயந்திரங்கள் பால மேடையில் பூட்டப்பட்டிருக்கின்றன.

(13 ம் பக்கம் பார்க்க)

# ஆசியா அளித்த அருஞ்செல்வம்

(கலைப் புலவர் க. நவரத்தினம்)

அண்மையிற் புதுதில்லியில் நடைபெற்ற ஆசிய எழுத்தாளர் மகா நாட்டில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியாகச் சென்று கலந்துகொண்ட கலைப்புலவர் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற் பொழிவின் தமிழ்ச்சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

### ஐரோப்பாவில் கிரேக்க-உரோம பண்பாடு

ஒரு நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி, அந்நாட்டின் பாரம்பரிய கலாச்சார சாதனை என்ற உறுதியான அத்தி வாரத்திலேயே கட்டியெழுப்பப்பட வேண்டும். ஐரோப்பாவில் கிரேக்க-உரோம கலாச்சார அடிப்படையிலேயே கல்விமுறை உரு வாக்கப்படவேண்டுமென்று அங்குள்ள சகல வித்தியா பீடங் களும் முடிவு செய்துள்ளன. மத்திய சகாப்தத்தின் போது கிறிஸ்தவ வேத சாத்திரம் உரோம, கிரேக்க சிந்தனைகளைக் கருவாகக்கொண்டு உருவாகியது. மறுமலர்ச்சிக் காலத்திலும் மத்திய கால அறிஞர்களைப் பயில்வதற்குப் பதில், கிரேக்கமும் லத்தீனுமே மீண்டும் பயிலப்பட்டன. இப்பொழுதுங்கூட, சகல வித்தியா, கலாசாரத் திட்டங்களும் இதே கலாச்சார அடிப்படையி லேதான், விஞ்ஞான அறிவு விருத்திக்கும் போதிய இடம் வைத்து, உருவாக்கப்படுகின்றன. ஐரோப்பாவெங்கும் அகன்று பரந்த அரசியல் பொருளாதாரப் புரட்சிகளின் பின்னருங்கூட, மூலாதாரமான கிரேக்க ரோம நாகரிகத்திலிருந்து ஐரோப்பா முற்றாகப் பிறழவில்லை.

### இந்தியாவில் இஸ்லாமிய கலாச்சாரம்

இதே ரீதியில் கடந்த மூவாயிரம் வருடங்களுக்கு மேலாக ஆசிய மக்களின் வாழ்க்கை முறைகளை உருவாக்கியும் மாற்றியும் ஒழுங்குபடுத்தி வந்த பாரம்பரிய பண்பாடுகளின் ஊற்றுக்களை நாம் ஆராய வேண்டும். இந்த ஆராய்ச்சியின் போது, ஆசிய மக்களின் வாழ்வோடு வந்து கலந்துவிட்ட வெளி நாட்டுப் பண்பாடுகளைக் கவனிக்க நாம் தவறிவிடக்கூடாது. அரசியல் ரீதியில் அடிமைப்பட்டிருந்ததால் ஏற்பட்ட பண்பாட்டு மயக்கங் களின் விளைவாக உண்டான பிரச்சினைகளே ஆசிய தேசத்தலை வர்களைத் தற்போது எதிர்நோக்கியிருப்பவை என்பதும் கவனிக் கத்தக்கது.

இந்தியாவில் கலாச்சார மயக்கம், இஸ்லாமிய பண்பாட்டு வருகையுடன் ஆரம்பமாயிற்று. இலங்கையில் போர்த்துக்கேய ரின் ஆட்சியுடன் கலாச்சார கலப்பு தொடங்கியது. சீனாவும் ஜப்பானும் அரசியல் ரீதியில் சுதந்திரமாக இருந்தபோதினும் மேற்கு நாடுகளின் பொருளாதார அரசியல் முன்னேற்றத்துக் குத் தக்கபடி விருத்தி பெறும் நோக்கத்துடன் இருநாடுகளும் கலாசார ரீதியில் வெளிதேசக் கலை அம்சங்களைத் தமதாக்கிக் கொண்டன. இந்தியாவில் இஸ்லாமிய பண்பாடு இன்று இந் திய கலாசாரத்தின் தேசிய ஊற்றுக்களில் ஒன்றாக மிளிர்கிறது.

### அசோகன் ஆரம்பித்த இயக்கம்

சைவம், பௌத்தம், ஆகிய சமயங்கள் மூலமாக தென் கிழக்காசிய நாடுகளில் இந்திய கலாசாரம் பரவியிருப்பதை அந்நாடுகளின் சமூக பொருளாதார முறைகள், சமயத்தாபனங் கள், கலைச்சின்னங்கள் முதலியன மூலம் காணமுடிகிறது. அசோகன் ஆரம்பித்துவைத்த கலாசார சமய விஸ்தரிப்பு இயக்கம் சகல ஆசிய நாடுகளிலும் பரவி, இன்று, ஒரு பொது கலாசார வாழ்வின் வாரிசுகளாய் ஆசிய நாடுகள் விளங்கக் காண்கிறோம். மேற்கு வல்லரசுகள் ஆசியாவை நேரடியா கவோ, மறைமுகமாகவோ ஆக்கிரமித்த பிறகு, யுகம் யுகமாக ஆசியாவெங்கும் காணப்பட்டு வந்த கலாசார ஐக்கியம் குலைந்து விட்டது. ஒவ்வொரு ஆசிய நாடும் தன்தன் அரசியல், பொருளா தார நலனை முன்னிட்டுத் தனித்தனியான ஒரு வாழ்வு முறையைப் படிப்படியாகக் கைப்பற்றத் தொடங்கியது. ஐக்கிய ஆசியா ஒன்று மீண்டும் உருவாக வேண்டுமானால் ஆசியாவின் பல நாடுகளி லும் பரவியுள்ள பொதுவான பண்பாட்டு அம்சங்களின் உறுதி யான அடிப்படையிலேயே அந்த ஐக்கியத்தைச் சமைக்க முடியு மென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

### பொருளாதார சூழ்நிலைச் சிக்கல்

வருங்காலத்தைக் கடந்த கால பாரம்பரியத்துக்கு இணங்க உரு வாக்கும் முயற்சியிலும், மேற்கு நாடுகளின் செல்வாக்கால் நமது மக்களின் பொருளாதார சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனத்திற்கு எடுக்கத் தவறக் கூடாது. நவீன விஞ்ஞான முறையான அறிவு பரந்ததால், ஆசிய பாரம் பரியப் பிரகாரம் ஆத்மார்த்த முறையில் இலட்சிய புருஷர்களாக தலையெடுக்காமல், தனிப்பட்டவர்கள், சில குறிப்பிட்ட அறிவுத் துறைகளில் விசேஷமாக முன்னேறச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கி றது.

புதிய பொருளாதார அமைப்பால் எழுந்துள்ள சில பிரச்சினைகளைப், பாரம்பரிய பழக்க வழக்கங்களைக் கைநெகிழா மல் தீர்ப்பது அசாத்தியம். இன்று பொருளாதார ஸ்திர மின்மை காரணமாக சமூக அரசியல் பிரச்சினைகள் எழுந்து மக்கள் வாழ்வை ஆக்கிரமித்து நிற்கின்றன. இதன் காரண மாக மனிதனின் சகல சக்தியும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதி லேயே வியர்த்தமாகிறது.

மேற்குத் தேசங்களின் அபிவிருத்திக்கு ஈடாக முன்னேற வேண்டுமென்ற ஆவல் காரணமாக ஆசிய மக்களிடையே பழைய பாரம்பரிய கலாசாரத்தை விட்டொழிக்கும், அல்லது தட்டிக் கழிக்கும் ஒரு மனோபாவம் வேரூன்றி வருகிறது. ஆசிய மக்கள் பெற்றுள்ள புதிய சுதந்தரம், தங்களை யறியாமலே அவர்கள் தங்களின் புராதன பண்பாடுகளைக் கைநெகிழ்ந்து மேலைத் தேசக்கொள்கைகளைக் கைப்பிடிக்கச் செய்கிறது.

### ஆசிய மக்கள் என்ன செய்வது ?

இந்த மனோபாவங்கள் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். அந்தந்தத் தேசத்துப் பண்டைப் பண்பாட்டுக் கியைந்த வகை யில் தேச எழுச்சிக்கான ஆக்கத்திட்டத்தில் இம்மனோபாவமுடை யவர்களின் சக்தி செலுத்தப்பட வேண்டும். சூழ்நிலைக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொண்டு ஒழுகும் திறமை ஆசிய மக்களுக்கு அதிகம் உண்டு. மெதுவாகச் சென்றாலும், நெடுங் காலம் நிலை நின்று முடிவில் வெற்றிபெறும் வலிமையும் அவர்களுக்கு உண்டு. மகாத்மா காந்தியின் தலைமையில் இந் திய மக்கள் சாதித்ததை பிற ஆசிய நாட்டு மக்களும் சாதிக்க லாம். இதற்குத் தேவைப்படுவதெல்லாம் சரியான தலைவர் களும் விவேகமுள்ள வழிகாட்டிகளுமே !

ஆசிய நாடுகளின் நீண்ட சரித்திரத்தில் இது ஒரு சோதனைக் காலம். சமய சாத்திரங்களிலும், இலக்கியங்களிலும், கலைச் சின்னங்களிலும் பொதிந்துள்ள பரம்பரைக் கலாசாரம் இந் நாட்டு மக்களிடம் இருக்கிறது. பெருஞ் சாதனைகளை நிலை நாட்ட மக்களுக்கு ஊக்கமளித்த சமூக, சமய ஸ்தாபனங்கள் வலிவற்ற நிலைமையிலும் கூட இன்றும் இருக்கின்றன. ஆனால் மறுபக்கம் உலகைத் தங்கள் பணத்தாலும் படைப் பலத்தாலும், ஆக்கிரமித்து நின்று, அரைப்பட்டினியாக வாழும் ஆசிய மக்க ளின் மனதில் ஆவலை மூட்டியவண்ணம் பொருளாதார வளம் பெற்று பளபளப்புடன் திகழும் மேற்குத் தேசங்கள் இருக் கின்றன. இந்த நிலையில் ஆசிய மக்கள் என்ன செய்வது ?

### எழுத்தாளர்களின் புனித கடமை

தங்கள் கடந்த காலத்தை நோக்கி, பண்டைய சாதனைகளை மட்டும் எண்ணி இறுமாப்பு எய்தித் திருப்தி கொள்வதா ? அல்லது மேற்குலகத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி, ஐரோப் பாவின் முகத்தையே அவலட்சணப் படுத்திவிட்டயுத்தங்கள் நிறைந்த கரடு முரடான பாதையில் செல்வதா ? ஆசியாவின் கலாசாரத் தலைவர்கள் இந்தக் கேள்விகளுக்குத் திட்டவட்ட மாகப் பதிலளிக்கவேண்டியதவசியம்.

புனர் வாழ்வு பெறத் துடிக்கும் ஆசியா, தனது சமய, சமூக கலாசாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி அவற்றை மாற்ற வழி வகை தேடவேண்டியதவசியமாகும். கலாசார முறையில் பொறுப் புணர்ச்சி கொண்டு விழிப்படைந்துவிட்ட ஒரு தேசம், குழப்பங் கள் எவையுமின்றித் தன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளத் தகுதி பெற்று விடுகிறது. தேசத்தை விழிப்படையச் செய்யும் புனித கடமைதான் எழுத்தாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக் கும் உரியது. எழுச்சி பெற்றுவரும் ஆசியா தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் வெகு அதிகம் ; அவை அத்தனையும் அடிப்படை யான பிரச்சினைகள்.

### சமய ரீதியில் அமைந்த நாகரிகம்

யுகயுகாந்திரமாக ஆசிய தேசங்களின் கலாசார வாழ்வு, சமய பாரம்பரியங்களையும் வேத சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கிறது. இந்த அடிப்படையான நிலை தற்போது ஈடாடுகின்றது. சிறந்த வாழ்வுக்குச் சமயம் இன்றி யமையாததுதானா என்ற சந்தேகம் தற்சமயம் மக்கள் மனதில் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. கடந்த காலத்தில், சகுனம், மந்திரம், சாதிமுறை, குருசிஷ்ய பரம்பரை, நம்பமுடியாத வைபவங்கள், சாத்திரங்கள் இவற்றோடு சமயம் பின்னிப் பிணைந்திருந்தது. இந்த அம்சங்கள் தற்கால விஞ்ஞான அடிப்படையில் அமைந்த கலாசாரத்தைக் கடைப்பிடிக்க விரும் பும் கற்றுத் தேறிய மனிதனைக் கவர்வதில்லை. எனவே சமயம் நிலைத்து நிற்கவேண்டுமானால் நவீன கலாசாரத்துக்குத் தக்க படி அதில் மாற்றங்கள் தேவை. மனிதனுக்கும் தெய்வத் துக்கும் சமயம் பாலமமைக்கு முன்பு, மனித குல சகோதரத்து வத்தை ஏற்படுத்தவும், மானிடர்கள் மத்தியில் நல்லெண்ணத் தைப் பரப்பவும் சமயம் உதவவேண்டும். தாபன முறையாக அமைத்து நிர்வகிக்கப்படும் சமயம் இன்று மனிதர் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நல்லெண்ணம் பூணத் தடையாக விளங்குகிறது. நவீன வாழ்க்கையில் சமயம் ஒரு இடத்தைப் பெறுவ தெனில், தனிப்பட்ட தாபன ரீதியான சமயானுட்டான முறைகளை அது வற்புறுத்துவதை விடுத்து, சர்வதேசப் பொது வான ஆத்மார்த்த உண்மைகளை அது போதிக்கவேண்டும்.

### மதத்தின் நோக்கம்

மனித உருவத்தை தெய்வீக குணங்கள் இடம் பெறத்தகுதி யுடையதாக்குவதே சமயத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். செல்லரித்துப் போன பழைய சாத்திரங்களைக் கட்டியழுவதை விட்டு, புதிய ஞான ஒளியையும் பரஸ்பரம் புரிந்து கொள்ளும் தன்மையையும் சமயம் எங்கும் பரப்பவேண்டும். பகுத்தறி வுக்குப் பொருத்தமான சமயக் கொள்கைகள் ஆசியாவெங்கு முள்ள ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்க்கையினும் புதிய எழுச்சியை ஊட்டவேண்டும். வாழ்க்கையின் சகல பிரச்னைகளும் இந்தக் கோணத்திலிருந்தே நோக்கப்பட வேண் டும்.

சுதந்திரமும் விடுதலை மோகமும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமின்றிச் சகலருக்கும் புதிய நம்பிக்கைகளையும் ஆர்வத்தையும் ஊட்டியுள்ளன. இந்திய கலாச்சாரம், சமத்துவ வேத சாத்திரங்களைப் போதித்த போதிலும் நடை முறையில் சமய முறையிற்கூட சமூக உயர்வு தாழ்வுகள் கற்பித்து, சமய சாத்திர போதனைகளைப் புறக்கணித்தது. சமய அடிப்படையில் எழுந்த சாதிபேதம், அநேகமாக ஆசிய நாடுகள் எல்லாவற்றி லும் ஏராளமான மக்களை அடிமைத்தனத்திலும் அறியாமையி லும், நோய் நொடியிலும் ஆழ்த்தி வைத்தது. இந்தப் பழக்கம் எப்படி முளைத்தது என்பதை ஆராய்வதிலோ, இது நியாயமானது என்பதற்கு ஆதாரங்கள் கண்டு பிடித்து வருங் காலத்திலும் வேறு உருவத்தில் இந்தப் பழக்கத்தை வைத் திருக்க முயல்வதிலோ காலத்தையும் கருத்தையும் நாம் செல விட வேண்டியதில்லை.

### காலத்துக்கொவ்வாத கருத்துகள்

பிறப்பால் தீண்டத்தகாதவன் என்று ஒதுக்குவதும், சில சாதி மக்களுக்குப் பரம்பரை வழக்கமென்பதால் குறிப்பிட்ட தொழில் களை ஒதுக்குவதும் காலத்துக்கொவ்வாத கருத்துகள். இவை ஒழிந்துபோகவேண்டும். எங்கள் கலாச்சாரத்தின் புனிதகொள் கைகளை வீசிவிடக்கூடாதென்பது உண்மையே ! எனினும் உத வாத பழங்கொள்கைகளைக் கட்டியழுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமற்ற, நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாதகமான செயல். ஒவ்வொரு இனத்தையும் அதனதன் பண்பாட்டை யும் பாதுகாத்து காலத்தால் சாகாது நிலைநின்றுவரும் தாபனங் களைமட்டும் பாதுகாத்து வருங்காலத்திட்டங்களில் பிணைத்துக் கொள்ளலாம். வர்ண, சாதி சமய பேதமின்றிச் சகலருக்கும் பொதுவான உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஒரு மனிதன் அனுபவிக்கலாமென்னும் அடிப்படை உரிமையை மறுக்கும் எந்த சமய தாபனமோ, சமூகத்தாபனமோ நிலைத்திருப்பதை அனுமதிக்கக் கூடாது. சகல மனிதரின் ஆத்மார்த்த ஒற்றுமை யில் பிறந்த கூட்டுறவு வாழ்க்கையாக சமூக வாழ்க்கை அமைய வேண்டும். ஆசியா சரித்திரகாலந்தொட்டு, மனிதனின் ஆத் மார்த்த கௌரவத்தை உலகுக்கு எடுத்து விளக்கிவந்திருக்கிறது. உலக சமயங்களின் தாபகர்கள் யாவரும் ஆசியாவில் அவதரித்த வர்கள். இந்த மகான்களின் வாழ்வில் திகழ்ந்த ஆத்மார்த்த கொள்கைகளை மீண்டும் உலகுக்கு எடுத்து விளக்குவது எழுச்சி பெற்றுவரும் ஆசியாவின் புனித கடமைகளில் ஒன்று.

### இந்திய பண்பாட்டில் பெண்ணின் இடம்

புராதன இந்திய கலாச்சாரத்தில் பெண் ஒரு தனியிடம் பெற்றி ருந்தாள். தாய்மையே பெண்ணின் இலட்சியமாயிருந்தது. தாய் வணக்கத்துக்கும் வந்தனைக்கும் உரியவளாய் விளங்கினாள்

அவளைச் சுற்றியே குடும்பம் வளர்ந்து ஆசிகளுடன் சீர் பெற்றுச் சிறந்தது. உடற் கூற்று சாத்திர முறையாகப் பெண் படைக்கப் பட்டநோக்கம் எது என்று மதிக்கப்பட்ட போதிலும், ஆத்மார்த்த முறையில் கணவன்-மனைவி உறவை உயர்த்தி உடலுறவு இரண்டாந்தர தானத்துக்குப் பின் தள்ளப்பட்டது. உடலுறவு புனிதப்படுத்தப்பட்டு, ஒரு தெய்விககடமை என்னுமளவுக்கு உயர்த்தப்பட்டது. திருமணம் உடலுறவுக்கான ஒரு அனுமதி யாகக் கருதப்படாமல், தர்மத்தின் விருத்திக்கான ஒரு சமூக-சமய புனிதக் கூட்டுறவாகக் கருதப்பட்டது. மனிதனின் ஆத்மார்த்த சிறப்புக்காக திருமணத்தில் ஒழுக்க, உடற்கட்டுப் பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன.

மேற்கத்திய கலாச்சார செல்வாக்கு, பெண்மட்டிலும் திரு மணம்பற்றியும் பரம்பரையாக நமக்கிருந்துவந்த கொள்கைகளை மாற்றியிருக்கிறது.

### பெண்ணின் சுதந்திர ஆவல்

பெண்கள் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு, பொருளாதார முறையில் ஒரு சுதந்திர மான தனி வாழ்க்கையை நடத்துவதில் ஆவல் கொண்டுவரக் காண்கிறோம். பொருளாதார, தேகவிடுதலைத் திருப்திக்காக வீடும் குடும்பமும் தியாகம் செய்யப்படுகின்றன. இந்திய கலாச் சாரம் சமூக நல்லமைப்புக்கு இல்லக் கிழத்தியையே இன்றி யமையாத முதற் தேவையாகக் கருதியது. இல்லக் கிழத்தி, இல்லத்திலிருந்து அகன்றுவிடுவதால் அவளது தாய்மை உணர்ச்சி கொல்லப்படுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவை யான அன்பும் பாசமும் குன்றி, திருமணமே வெறும் வம்ச விருத்தியாகிவிடுகிறது.

எழுச்சி பெறும் ஆசியா, பெண்ணை அவளுக்குரிய ஸ்தானத் துக்கு மீண்டும் அழைத்து வந்து, இல்லத்தின் ஜோதியாகவும் பெருமையாகவும் அவளைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். நிலை யான, திருப்தியுள்ள குடும்பமே இன்றைய சகல சமூகப் பிரச்சி னைகளுக்கும் மருந்து.

### ஆசிய கலாச்சாரம் வற்புறுத்தும் வாழ்க்கை

"ஒரு தேசம் அதன் கிராமங்களில் வாழ்கிறது" என்றார் மகாத்மா காந்தி. கிராமங்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறை ந்த வீடுகளில் வாழ்கின்றன. வாழ்க்கை என்பது, பெண் ணுக்கும் ஆணுக்கும் இயந்திரமயமான சமத்துவம் காணு வதோ, செயற்கையாக வரவு செலவைச் சமன்படுத்தும் திட்ட மோ அல்ல. நாய் பூனைபோல் வெற்றுடம்பு வளர்ப்பதல்ல வாழ்க்கை. அதைவிட ஆழமான நோக்கம் வாழ்க்கையில் உண்டு. ஆணும் பெண்ணும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்து இலட்சியத்தை அடையவேண்டும். பண்டைய ஆசிய கலாசாரம் இந்த வாழ்க்கை முறையையே வற்புறுத்தியது. எழுச்சி பெறும் ஆசியா இந்த அடிப்படைக் கொள்கையைப் பார்வையிலிருந்து அகற்றி விட்டு, அழியும் இயல்புடைய இலட்சி யங்களையும் நோக்கங்களையும் தேடி ஓடக்கூடாது.

## யாழ்ப்பாணக் குடாநாட்டு நன்னீர்த் தடாகம்

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

### அரியாலைப் பாலத்து அணைக்கட்டு

யாழ்ப்பாணக் குடாக்கடல் அரியாலையில் கடலுடன் சேரு கின்றது. ஆகையால் உப்பு நீர் உட்புகாவண்ணம் அங்கு 200 அடி நீளமுடைய அணை கட்டப்பட்டுள்ளது. நன்னீரைச் சேகரிப் பதற்கும் அணை உதவும். இப்பொழுது சோழகக் காற்று வீசினாலும் உப்பு நீர் உட்புகமாட்டாது.

### உவர்ப்பு நீக்குதல்

கனகராயன் ஆற்று நீர் பிரதம தடாகமாகிய யானையிறவுத் தடாகத்திற்கும் துணைத்தடாகமாகிய வடமராட்சித் தடாகத்திற் கும் செல்லுதலால் உவர்ப்பு சிறிது சிறிதாக நீங்கும். பிரதம தடாகத்தின் அடிகளில் மண்ணின் தன்மையை உடையதால் உவர்ப்பு நீங்குதல் துணைத்தடாகத்திலும் விரைவாக நடை பெறும். சிறிது உவர்ப்பான நீர், வாயினில் விட்டவுடன் உவர்ப்புத் தோன்றினாலும் விவசாயத்திற்கு நன்கு பயன்படும். குடாநாட்டில் கடற்கரைப் பிரதேசங்களில் உள்ள கிணற்றுநீர் இந்த உண்மையைப் புலப்படுத்துகின்றது. ஆகவே, மேற்கூறிய நடவடிக்கைகளின் பலாபலனை உடனே அடையலாம். வருடா வருடம் நீரின் உவர்ப்பு படிப்படியாகக் குறைய அதிக நிலப் பரப்புக்களில் விவசாயம் செய்யலாம். காலக்கிரமத்தில் உவர்ப்பு அடியோடு நீங்கியதும் விவசாய முறைகளை விதிப்படி கையாளலாம்.

கார்த்திகை, மார்கழி கால மழைகள் காரணத்தால் பிரதம தடாகமும், துணைத்தடாகமும் தைப்பொங்கல் நாட்களில் மேல் நீர் மட்டத்தை எட்டிப்பிடித்து, மிகுதி நீர் கடலினுள் சென்று கொண்டிருக்கும். சில வாரங்களில், அதாவது ஜனவரி மாதக் கடைசியில் பொங்கல் மழை முடிந்ததும், துணைத் தடாகத்திலிருந்து நீர் வழிதல் நின்று விடும். கரைச்சி நிலங் களிலிருந்தும், கனகராயனாற்றிலிருந்தும் நீர் பாய்வதால் பிர தம தடாகத்து நீர் மேலும் சில காலத்திற்கு வழியும்.

அடுத்து வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் சூரிய வெப்பம் மிகும். நீர் ஆவியாக மாறுவதால் தடாகங்களின் நீர் மட்டம் குறையும். ஆனையிறவுத் தடாகத்திலிருந்து நீர் சென்று நாள் தோறும் துணைத்தடாகத்தை நிரப்பும். சோழகக் காற்று ஆனி—ஆடியில் தொடங்கியதும் இது இயலாமற் போகக்கூடும்.

### நன்னீர்த் தடாகம்

இவ்வாறாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியில் ஒரு நன்னீர்த்தடாகம் அமைக்கப்படும். நன்னீர் கொண்ட இத் தகைய பரந்த தடாகம் பற்பல நன்மைகளை அளிக்கும். நிலத் திற்குக் கீழ் தங்கும் நீர் அதிகரித்ததும் அதன் மட்டமும் உயரும். காலம் செல்லச்செல்ல கிணறுகளின் நீர் மட்டமும் சிறிது சிறிதாகக் கூடும். மேல் மண்ணில் நீர் ஊறியிருப்பத னால் தாவரங்கள் செழிப்புற்றுப் பச்சைப்பசேல் எனக் காட்சி யளிக்கும். தென்னை முதலிய மரங்கள் வெப்பத்தினால் வெந்து காய்ந்து காட்சியளிக்கும் கோடைகாலம் நம் மனத்திரையி லிருந்து அகற்றப்படும்.

இவ்வாறு வவுனியாப் பகுதியில் உற்பத்தியாகும் கனகராயனா ற்றினது நீர் யாழ்ப்பாணக் குடா நாட்டினுட் சென்று தொண்டைமானாறு அரியாலை அணைக்கட்டுகள் வாயால்வழிந்து பாயும். யாழ்ப்பாணக் குடாநாட்டு நன்னீர்த் தடாகத்திட்டத்தி னால் நாடு பலவாறு நயப்பட்டு செழிப்புறும் என்பதில் ஐய மில்லை.

# சந்தியோகுமையூர் அம்மானை

(வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா)

அம்மானை பிரபந்த வகைகளிலொன்று. முற்காலத்தில் இஃது ஓர் பாடி விளையாடும் ஆட்டம்; பெண்களுக்கே உரியது. மூவர் பெண்கள் சேர்ந்து அம்மானைக்காய்களை எற்றியும் தெற்றியும் மேலெறிந்து எந்தியும் நிலத்தொடு தாளத்துக்கு அடித்தும் ஆடுவர். ஆடும்போது வினுக்களை எழுப்பி விடைகளை யிறுப்பர். வினுவும் விடையும் சமயாசாரச் சீலங்களைப் பற்றியே நிகழும். ஒருவர் ஒன்று சொன்னுல் அதனை அன்று என்று மற்ருெருவர் கடறுவர். இவ்விருவரையும் மறுத்து மூன்ருமொருவர் வேருென்று திரிப்பர், இவ்வாறு மாறி மாறிச் சொல்லாடி அம்மானை ஆடுதலையே அம்மானை என்றனர். சொல்லாடல் இசைப்பாட்டிலமையும்; இவ்வகை இசைப்பாடலை நாம் சிலப்பதிகாரத்தில் பார்க்கின்ருேம். தற்காலத்தில் இவ்வகை ஆட்டமில்லை; பாட்டுமில்லை.

இடைக்காலத்தில் புகழேந்திப் புலவர் பல அம்மானை நூல்கள் இயற்றினுர் என்று சொல்லப்படுகிறது. மெய்பொய்அறிகிலேம். அவ்வகை நூல்கள் பலவற்றை நாம் இன்றும் காண்கின்ருேம். தற்கால வழக்கிலிருக்கும் அம்மானை நூல்களும் சிலப்பதிகாரத்திற் காணப்படும் பாடல்களுக்கோ அல்லது கலம்பகம் முதலிய நூல்களிலுள்ள அம்மானைப் பாடல்களுக்கோ ஒற்றுமை காண்பதாயில்லை. வேறுபட்டே அம்மானைப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

இவ்வாறு வளர்ந்த பல அம்மானை நூல்கள் தாய்நாட்டிலும் வளர்ந்தன : சேய் நாட்டிலும் வளர்ந்தன. சேய்நாடாகிய இலங்கையில் வளர்ந்த அம்மானைகளிற் பெரும்பாலானவை கத்தோலிக்க சமயசார்பானவை. நமக்குக் கிடைக்கும் அம்மானைகளில் மிகவும் பழைமை வாய்ந்தது **சந்தியோகுமையூர் அம்மானையாகும்**. இது கி. பி. 1647 ல் புனையப்பட்டதாகும்.

யாழ்ப்பாணத்திலே பச்சிலைப்பள்ளிப் பற்றிலே கிழாலி யென்னும் கிராமத்தில் கோயில் கொண்ட **சந்யேம்ஸ்** (St. James) பேரில் எழுந்ததே இந்த அம்மானையாகும்.

சந்தியோகுமையூர் அம்மானை ஐம்பத்தைந்து பகுதிகளாக பிரிந்து ஒவ்வோர் பிரிவின் தொடக்கத்தில் ஒன்று அல்லது பல விருத்தப் பாக்களையுடையதாயமைந்து நடக்கின்றது. 1894 ம் ஆண்டு மட்டும் எட்டுப்படியிற் கிடந்த அருமை பெருமை மிக்க இந்த அம்மானையை செந்தமிழ் வளர்த்த நற்றமிழ்ப் புலவர் **தம்பிமுத்துப்பிள்ளை** யென்பார் தமது அச்சுவேலி ஞானப்பிரகாசம் அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட்டனர்.

அம்மானையின் நல்லாசிரியரின் நாமதேயமாதியவற்றை ஆசிரியரின் மாணுக்கரொருவர் கொடுத்த நூற்பொதுப்பாயிரத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். பாயிரத்தின் சுவைமிக்க பகுதியினைக் காட்டுதும்—

**இலங்காபுரியிருக்கும் யாழ்ப்பாண ராச்சியத்தில்**
**துலங்குமெண்ணுன் பதிக்குந் துங்கமுடிபோலுயர்ந்த**
**வல்லிக் கிராமமதில் வளர்ந்த திருநகராம்**
**தெல்லிக் கிராமமெனுஞ் சீர்சிறந்த பேரூரில்**
**அம்புவியெங்கும் அரியமறை நடத்தும்**
**கொம்பாஞ்யதே சேசுக்கூட்டத்திலுள்ளகுரு**
**காரிருள்போல் வந்த கனபகையை நீக்கிவளர்**
**பேர்சுவாங் கறுவாலாம் பேரின்பசந்நியாசி கையால்**
**கல்லின்மேற் கல்லாய் கனகமுடி மூன்று வைத்து**
**அல்லலுறுபாவம் அவிழ்க்கப் பிணிக்கவரம்**
**பெற்றசிட்டபேதுருவும் பேர் பெரிய பாவுலுவும்**
**உற்றமறைக்காய் மரித்த உண்மை முகாந்திரத்தால்**
**கட்டிய கோயில் தன்னிற் கர்த்தன் திருவருளால்**
**சிட்டஞானஸ்நானம் சீருலவவே தரித்தோன்**
**ஆரியர் கோத்திரத்தோன் அன்புநெறி நீதியுள்ளோன்**
**சீரியபேதுரென்போன் சிந்தைமிகக் கொண்டாடி**
**ஆண்டாயிரமும் அறுநூறும் ஆறேழும்**
**மீண்டுமோர் அஞ்சும் விளங்கவே சென்றவந்நாள்**
**கார்த்திகை மார்கழியாங் காணுமிருமாதமதில்**
**கீர்த்தியுள்ள செந்தமிழாற் கிளத்தினுர் இக்கதையை**

இப்பாயிரத்திலிருந்து அம்மானையைப் பாடிய புலவர் **பேதுரு** என்று அறிகிருேம். **தெல்லிப்பழை** அவரின் வசிப்பிடம். அங்கு பேதுரு பாவிலு பேரால் கத்தோலிக்க கோயிலொன்றிருந்தது. இதனைக் கட்டி யெழுப்பியவர் யேசு சபைச்சுவாமி

சந்தியோகுமையூரின் அழகிய திருவுருவம் உபயம் :
திரு. எஞ்ஜலோ இராஜகாரியர்.



---

மகளிர் இருவர் ஒருவருக்கொருவர் இருபொருள்படக்கூறுவதாய் கலித்தாழிசையில் இயற்றும் பாட்டே அம்மானை.

—மாறனலங்காரம்.

சுவாம் கறுவால; அம்மானையைப் பாடுவித்தவரும் இவரே, இலங்கையில் வேதோபதேசம் செய்த குருமாரின் அட்டவணையை ஆராயுமிடத்து **சுவாம் கறுவால** (Joss. Carvallio) யாழ்ப்பாணத்தில் 1639—52 வரையுள்ள ஆண்டுகளில் சமயத் தொண்டு செய்தாரென்பதுபுலப்படுகின்றது.

**சுவாம் கறுவால சுவாமியார்** லிஸ்போன் நகரத்தில் 1603 ல பிறந்து பதிஞரும் வயதில் யேசு சபையிற் சேர்ந்து சந்நியாசியாகி 1634 ல் குருப்பட்டம்பெற்று கொச்சினுக்கு வந்து பின்னர் மன்னருக்கனுப்பப்பட்டனர். நாகபட்டணத்துக்குச் சென்று குருமாரின் உபசிரேட்டராகவிருந்து மறுபடியும் மன்னருக்கு வந்து சிரேட்டராய்க் கடமையாற்றினர். பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள யேசுசபைத் தாபனங்களின் தலைவராய் 1652 வரையுமிருந்தனர். பின்னர் கொழும்பிலுள்ள கல்லூரித் தலைவராக இருந்தபோது 1655 ல் கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டனர்.

இனிதெல்லிப்பழையைப்பற்றிக் கூறிய செய்திகள்கோயில் பற்றியகுறிப்புகள் பல்தேயர் பாதிரியார் (Baldeus) எழுதிய "இலங்கை" நூலிலுள்ள குறிப்புகளுடன் ஒத்துள்ளன. பல்தேயர் எழுதியதாவது :—

**வலிகாமப் பிரிவில் 14 வேதக் கோயில்களுண்டு தெல்லிப் பழைக் கோயிலே பிரதானமானது. பெரியது. இருவரிசையான பல தூண்களையுடையது. கோயில் வீடு பன்னிறப் பூக்கள் பொலிந்த திராட்சைக் கொடிகள் படர்ந்த தோட்டத்தில்லமைந்துண்டு. சேசுசபைச் சுவாமியாரின் பிரயாசையால் தோட்டமும் வீடும் கோயிலும் பெருந்தலமாக விளங்குகின்றது.**

இக்கோயிலின் அத்திவாரம் தரையுள் மறைந்துகிடக்கின்றது. கோயிலிருந்த நிலையின் ஓர் பால் அமரிக்க மிசியோன்மாரின் கோயில் நிற்கின்றது. பழைய கோயிலின் இரு தூண்கள் இப்போதிருக்கும் கோயிலின் சுவருளடங்கி யிருக்கின்றன. பழைய கோயில் கிழக்கு மேற்காக ஓடியது; புதிய கோயில் வடக்கு தெற்காக அமைந்துண்டு. இக்கோயிலின் தென்கீழிருக்கும் வளவினை இன்னும் குருசடிவளவெண்பர். இந்த வளவில் பழைய கத்தோலிக்க கோயிலின் குருசு இருந்தது போலும்.

1644 ல் அந்திரியா உலோப்பெஸ் சுவாமியார் தமது வருடாந்த அறிக்கையில் எழுதியிருப்பதாவது :

**தெல்லிப்பழையே குருமாரின் பிரதான வசிப்பிடமாகும். அர்ச். பீற்றர், அர்ச். போல் என்ற இருவர் பேராலும் இங்குள்ள கோயில் வழங்கப்படுகிறது. இங்கு 660 கிறித்தவர்களும் 664 பிள்ளைகளும் இருக்கிறார்கள். அப்பிள்ளைகளில் 200 குழந்தைகள் பாடசாலையில் குறிப்பிடம் படிக்கிறார்கள்.**

மேற்போந்த உண்மைகள் மூலம் தெல்லிப்பழைக்கோயிலின் பிரதாபம் விளங்குகின்றது.

இனி அம்மானையில் எடுத்தாண்ட பொருளையும் **கிழாலியிலுள்ள அர்ச் யேம்ஸ்** தேவாலயத்தையும் ஆராய்வோம். கிழாலி என்ற சிறு கிராமம் சாவகச்சேரியிலிருந்து கிழக்கே எழுமைல் தூரத்திலிருக்கின்றது. அம்மானையிற் பொதிந்து கிடக்கும் பொருள் சந். யேம்ஸ் வரலாறு சம்பந்தமானது. கதை புதிய ஏற்பாட்டினையும் பாரம்பரியக் கதையினையும் கொண்டு இலங்குகின்றது. அம்மானையின் ஈற்றிலுள்ள பதினைந்து பிரிவுகளிலும் சந். யேம்ஸ் புரிந்து செய்த அற்புதம் எடுத்துரைக்கப்படுகின்றது. இசுப்பானியருக்கும் மூர் சாதியினருக்கு மிடையில் நடந்த பாரிய யுத்தத்தில் சந். யேம்ஸ் வெண் குதிரை வீரராகத் தோன்றி மூர் சாதியினரை முறியடித்த போர்க்கோலத்தை ஈற்றதிகாரங்களிற் காண்டல் கூடும்.

கிழாலியிலுள்ள கோயில் வரலாறு நூலின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் எடுத்துரைக்கப்படுகிறது. கோயில் வரலாறு குறித்து புலவர் உரைப்பதாவது :—

**பாண்டிக்கரையதனிற் பரதர்கள் கோத்திரத்தோர்**
**வேண்டுசந்தியோகு கதைவிருத்தப்பாவாய் உரைத்தார்**
**வேறும் இதுவன்றி வேண்டும் பெரியோர்கள்**
**கூறினர் மெத்தக்குறிப்பான காரியங்கள்**
**ஆனதெல்லாங் கற்றுணர்ந்து அற்பபுத்தியோடுலகர்**
**தானறிய விக்கதையை சாற்றுகிறேன் கேட்டருள்வீர்**
**வாம்பரிமேல் ஏறிமகிமைச்சுவடணிந்து**
**நாம்பணியநீதி நடத்துசந்தியாகுவுக்கு**
**எச்சரிக்கையாக இலங்கிய யாழ்ப்பாணத்தில்**
**பச்சிலைப்பள்ளி யென்னும் பற்றிற் கிழாலியிலே**
**கொம்பாஞ்யதே சேசுக்கூட்டத்திலுள்ளவர்கள்**
**நம்பிச் சமைத்துவைத்த நல்லாசலத்திருந்து**
**ஆருந்தமைத்தேடி அஞ்சலிக்கவாறவர்க்கு**
**தேரும் அனந்ததவம் செய்தேயிருப்பதுமெய்**
**செய்தவத்தினற் கோடி செனங்களிங்கே வாருர்கள்**
**ஐயமற விங்கு வந்தோர் ஆசையுற்று கேட்பதற்கு**
**துங்கக் கவிதை செய்யத் துணிந்தேனே அம்மானை**


இவ்வடிகள் மூலம் கிழாலித்தலம் பெருமைவாய்ந்த யாத்திரைத் தலமாகவிருந்ததென்பதும் அங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள், கிறித்தவர்களல்லாதவர்களும் ஒருங்கு திரண்டு சென்று எறுகுதிரையாரூடராயிருக்கும் சந்தியாகுவைப் பணிந்து வணங்குவரென்பதும் புலனுகின்றது. இவ்வுண்மையை 1640 ல் எழுதப்பட்ட யேசுசபைக் குருமாரின் கடிதங்களும் அத்தாட்சிப் படுத்துகின்றன.

கிழாலி இன்று வரையும் யாத்திரைத் தலமாகவே விளங்குகின்றது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பம் வரையும் பரதவர் வம்சத்தாரே இக்கோயிலைப் பரிபாலித்து வந்தனர். 1918 ம் ஆண்டில் பரதவர் குலத்துமாது இன்னேசம் என்பார், விவாகப் பதிவாளர் வைத்தியாம்பிள்ளை என்பாரின் பாரியார், ஒருவரே இதனைப் பரிபாலித்தனர் மற்றும் பரதவர் குலமக்கள் அவ்விடம்விட்டகன்றனர். 1647 ல் இந்த அம்மானை பாடப்பட்டபோது இங்கு பரதவர்குல மக்கள் நிறைய இருந்தனர்போலும், அன்றியும் இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்ட ஆரம்ப காலங்களில் சந். யேம்ஸ் சுருவத்திலணியப்படும் பொன்னுலாய தொப்பியும் வாளும் பரதவர் குலத்து மக்கள் வசமேயிருந்தன.

1907 ம் ஆண்டில் "இலங்கை சூறை" என்ற சஞ்சிகையில் ஜே. பீ. லூயிஸ் என்பார் கிழாலி பற்றிய எழுதியதாவது :— .

ஒல்லாந்தர் காலத்தில் கிழாலியிலுள்ள போர்த்துக்கீசர் தேவாலயம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. 150 வருடங்களுக்குமுன் பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப காலத்திலே தொன் லூயிஸ் பூதர் என்றும் முதலியார் சமரசேகரா என்றும் சொல்லப்படும் பெரியார் ஒருவரால் பெட்டியொன்று இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டது இந்த சமரசேகர முதலியார் தான் பிரித்தானிய படைகளை வன்னிய நாட்டில் வழி நடத்திச் சென்றவராம். இவர் கண்டெடுத்த பெட்டியினுள் அசுவாரூடர் ஒருவரின் மரச் சுருவமும் பொன்னுலாய தொப்பியும் காணப்பட்டன. அவை இன்னும் பேணப்பட்டுவருகின்றன. சமரசேகர முதலியார் கோயிலைப் புதுப்பித்து கட்டியாத்திரைத் தலமாக்க யாத்திரைக்காரர் கடந்த ஐந்து தலைமுறையாக அங்கு சென்றுவருகின்றனர்".

1748 ம் ஆண்டளவிற் பிறந்த **சமரசேகர முதலியார்** கட்டியெழுப்பிய கோயிலுக்கு முன் இங்கேயொரு கொட்டிலே தேவாலயமாக அமைந்து கிடந்தது. இக்கொட்டிலைப் பரதவரே பார்வையிட்டனர். **நிலத்தினுட் கண்டெடுக்கப்பட்ட பெட்டியின்**



நோவனேத் திருநாளன்று சந்தியோகுமையூர் சுற்றுப்பிரகாரம் வரும் சித்திரத் தேர்.

**கதை 1748 ம் ஆண்டுக்கு முன்னும் பரவியிருந்தது.** ஒல்லாந்தர் காலத்தில் இங்கு வசித்த **சோறிஸ்** என்ற பரதவர் பெட்டியினைக் கண்டெடுத்தனர் என்பர். சோறிசும் அவன் புதல்வர் **சுவாம் தியோகோ, யாக்கோவு** என்பாரும் கார்க்கோணன் என்ற ஒல்லாந்த ஒற்றனல் நத்தார் இரவிலே பிடிக்கப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து விடுபட்டனர் என்பர். இக்கதை அதிகமாக கிறித்தவ கிராமங்களிற் சொல்லப்படுகின்றது. பின்னர் இங்கு யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் வசித்துப் பின்னர் திரிகோணமலேயிலிருந்த **பறங்கிச் சீமாட்டி** ஒருவர் 1,000 **இறைசால் செலவுசெய்து கல்லாலோர் ஆலயம் கட்டிவிட்டனர்.** 1740 ல் இது நிகழ்ந்த தென்று கோயிற் பதிவுகள் எடுத்துரைக்கின்றன. பூதனராச்சி என வழங்கப்படும் சமரசேகர முதலியார் சுவாம் என நாமம் பூண்டாரென்றும் கோயிற் பதிவு சொல்லுகின்றது. இவ்வன்னிக்குப் படைகூட்டிச் செல்லும் போது கோயிலில் வணக்கஞ் செலுத்தினரென்றும் உரைக்கப்படுகின்றது. முதலியார் சமரசேகரா காலத்திற்கு முன்னும் இக் கோயில் பிரசித்தியாயிருந்த தென்பதற்கும் சான்றுகளுண்டு.

இன்று *சந்திரசேகர குடும்பம் என்று அழைக்கப்படும் சமரசேகர முதலியாரின் சந்ததியினர் தரும் தலைமுறைக் கதையினை நாம் கருத்திற் கொண்டால் **பூதனராச்சி** ஒல்லாந்தபடை சனத்துடன் வன்னிச்சியைப் பிடிக்க வன்னிக்குச் சென்று அப்பெண்மணியைப் பிடித்து அரசுரிமைக் குரிய முறைப்படி அவளைப் பாதுகாப்பதாகக் குடத்தினுள் உயிருடனிருக்கும் நாக பாம்பின்மேல் ஆணையிட்டுப் பல்லக்கில் பொன்விலங்கிட்டு ஏற்றிச் சென்றூர் என்பதை நாம் நம்புதல் வேண்டும். யாழ்ப்பாணக் கோட்டையில் வன்னிச்சியைச் சிலகாலம் வைத்திருந்து பின்னர் கொழும்புக்கு அனுப்பிவிட்டனர். 1782 ம் ஆண்டளவில் வன்னிச்சி **மரியசெம்பாத்தை** ஒல்லாந்தராற் பிடிபட்டு மறியலாக்கினதாக அறிகின்றேம். பூதனராச்சி பிடித்த வன்னிச்சி இவள் போலும். இது சரித்திரம் உண்மையானல் **பூதனராச்சி வன்னிக்குப்** போகும் வழியில் தங்கியிருந்த வாடிவீடு கிழாலியின் பாங்கரிலிருந்தால் உறுதியாக இக்கோயிலைப் பார்த்தேயிருப்பர்.

பெட்டியிற் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் இன்னும் சந்திரசேகரர் குடும்பத்தினரிடமே யிருக்கின்றன. பொன்னலாய வாள் மாயமாய் மறைந்துவிட்டது. பதில் வாளொன்று இப்போதுண்டு. இதனை சந்திரசேகர குடும்பமே செய்து உதவியது. **வெள்ளியாலாய ஒருவாளை 1824 ல் சாமுவேல் என்பார் தாம் செய்த நேர்த்தியின்** பேரால் செய்து கொடுத்தனர். இச்சாமுவேல் என்பார் அட்லி என்ற பாதிரியாரின் குதிரைச் சேவகன் என்பர்.

கோயிற் சுருவத்தினைப் பற்றியும் செய்திகளுண்டு. இது மரத்தாலாயது. இந்த மரம் இலங்கைக்குரியதன்று. போர்த்துகால் தேசத்தினின்றும் அனுப்பப்பட்ட பல சுருவங்களில் இஃது ஒன்ருகுமென்று கூறுகின்ற ஓலைப் பிரதியை பரதவர் வம்சத்தில் வந்த கடைசிப் பெண்ணை மணம்முடித்தாரிடமிருந்து பெற்று இவ்வுண்மையை வெளிப்படுத்தியுள்ளார் **நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர். சுருவத்திற் தீட்டப்பட்டபடிருக்கும் வண்ணமும் ஐரோப்பியர் வழி வந்ததே. ஆகவே இச்சுருவம் ஐரோப்பியாவிற் செய்யப்பட்டதாகும்.**

பொன்னலாய தொப்பியோ முக்கோண வடிவத்தாய் **"Servo do Santiago Mayor, LS. Ferras"** என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டதாய் விளங்கிகுன்றது. முக்கோண வடிவினதாய் தொப்பிகள் 17 ம் நூற்றுண்டின் நடுப்பகுதிகளில் பிரான்சு தேசத்தில் உபயோகத்திலிருந்தன.. சந்தியோகுமையூரின் சேவகன் என்பதே தொப்பியில் பொறிக்கெப்பட்டிருக்கிறது. வார்த்தைகள் போர்த்துகீச மொழிக்குரியன. தமிழ் மக்களிடையே போர்த்துகீச மொழிப் பிரயோகம் வருமாறென்னை ? போர்த்துகீச மக்களினல் இத்தொப்பி உபகரிக்கப்பட்டதாக இருக்கலாம்.

எது எவ்வாருயினுமாகுக; பெட்டியிற் கண்டெடுத்தபெருள்களோ பழைமை வாய்ந்தவை. அப்பொருள்களை இன்னும் காண்கின்றேம். ஒல்லாந்தர் நெருக்கிடைகளைப் பொருட்படுத்தாது இப் பொருட்களைப் பாதுகாத்துத் தந்த பெருமக்களுக்கு நமது நன்றி உரித்தாகுக.

கடைசியாக சந்தியோகுமையூர் அம்மானையில் பொலிந்துவரும் விருத்தப் பாக்களில் ஒன்று—

சிலைவளர்த்தட லெதிர்த்தே யிரண்டருறுதேரைமுற்
படவளைத்தனர்கள் தேரிலுள்ள
கலையறுத்திடவுதிர்ந்தது சரங்களோடு கவசமற்றிட
வடர்ந்தது கடுஞ்சமர்கள்
தலையறுத்திட விழுந்தது சிரங்கள் பலகரமறுத்திட
உதிர்ந்தது தகர்ந்தது இரு
மலையெதிர்ப்பென விடிப்பென வெதிர்ப்புலிகள்
வயணமென்னமன்மடிந்தனர் மதித்தரசர்.

* இக்குடும்பத்தினர் இன்று யாழ்ப்பாண நகரில் வசிக்கின்றூர்கள். இவர்களே இக்கோயிலைப் பரிபாலிக்கின்றனர்,

# திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள்

(மு. இராகவையங்கார்)

### (1) திருவள்ளுவர் காலம்

இடைச்சங்கத் திறுதியில் கபாடபுரம் கடல் கோளால் அழிவுற்ற பின்பு, அச்சங்கமிரீஇய முடத்திருமாறனால் மதுரையிற் கடைச் சங்கம் தொடங்கப்பட்டதென்பதும் அக்கடல் கோட்காலம் கி. மு. 3 ம் 4 ம் நூற்றாண்டுகள் என்பதும் களவியலுரையாலும் பிற கருவிகளாலும் தெரியவரும். இங்ஙனம் மதுரையில் நிகழ்ந்த சங்கம், பாண்டியர் தலைமையிற் பன்னூறாண்டுகள் வரை தமிழ்வளர்ச்சி புரிந்ததாகும். அதனால், கடைச்சங்க காலம் இன்ன நூற்றாண்டது என்று வரையறுத்தல் கூடாததா யினும், 1400 வருஷங்கட்குமுன்—அஃதாவது கி. பி. 5 ம் நூற்றாண்டுவரை—அதன் தொடர்ச்சி இருந்துவந்ததென்றே சொல்லலாம். இச்சங்ககாலத்து விளங்கிய பெருமக்களுட் பழமைவாய்ந்தவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் ஆவர். கடைச்சங்க காலத்தவர் பலர்க்கு முன்பு விளங்கியவர் இத் தெய்வப்புலவர் என்றே தெரிகின்றது. திருவள்ளுவர் வழங்கிய சொற்பொருள் வழக்குக்களை எடுத்தாளாத சங்க நூல்கள் சில வென்றே சொல்லலாம். அங்ஙனம் ஆண்டவற்றுளொன்றான மணிமேகலையிலே, பரசுராமர் காலத்திருந்த சோழவரசனாகிய ககந்தன் என்பானுடைய மகன், புகார்நகரில் காவிரிக்கரைக் குச் சென்ற மருதி என்னும் பார்ப்பனியை இச்சிக்க, அதற்கு அவள் உள்ளநடுங்கி விரைந்தோடி அந்நகர்ப் பூதசதுக்கஞ் சென்று, அத்தெய்வத்தை நோக்கித் தனக்கு நேர்ந்த கற்புக் குறைவைப்பற்றிப் பிரலாபித்த போது,

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என, அத்தெய்வம் அவளை நோக்கிக் கூறியதாகச் சாத்தனார் பாடியிருத்தலைக் கற்றோர் அறிவர். இங்ஙனம் பரசுராமர் காலத் துக் கதையிலே, தெய்வமொன்றன் கூற்றில்வைத்து நம் திரு வள்ளுவர் வாக்கை அப்புலவர் தொடுத்திருத்தல் குறிப்பிடத் தக்கது. இதனால், அப்புலவர் பெருமான் சில நூற்றாண்டுகள் ளவேனும் சாத்தனார்க்கு முற்பட்டவராதல் வேண்டும் என்பது பெறப்படத் தடையில்லை. நம் காலத்திருந்த பெருங்கவிஞ ரொருவர் வாக்கை, இராமாயண காலத்தவரான ஒருவரது கூற்றாக வைத்து "சிரபுரப்புலவன் சிறப்புரை தேறாய்" எனின் அது சிறிதும் ஏற்புடையதாகதென்பது திண்ணம். எனவே, பொய்யில் புலவர் எனப்பட்ட தெய்வப்புலவர் தமக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டவராயிருந்தாலன்றி, இவ்வாறு மணிமேகலையில் அமைத்துப் பாடச் சாத்தனார் ஒருப்பட்டிரார் என்றே சொல்லலாம்.

### (2) பிரமதேவனும் திருவள்ளுவரும்

இங்ஙனம் பழைமை பெருமை வாய்ந்த திருவள்ளுவரை நான்முகனமிசம் என்று கூறும் வழக்குப் பழமையாக வழங்கி வருவதாகும். திருவள்ளுவமாலையிலே

> "நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
> தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன் முறையை"

என்று உக்கிரப் பெருவழுதியாரும்,

> "ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
> மெய்யாய வேதப் பொருள் விளங்கப்—பொய்யாது
> தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
> அந்தா மரைமே லயன்"

என்று காவரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் பாடியிருத் தல் காண்க. "வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்—ஓதத் தமிழால் உரைசெய்" தமைபற்றி வள்ளுவனாரை இவ் வாறு முன்னோர் உபசரித்துக் கூறினர் என்பது ஒரு கருத்தாயி னும், இதனினும் சிறந்த காரணமொன்று இதிகாசத்தினின்று புதியதாகத் தெரிய வருகின்றது. அஃதாவது —பிரமதேவர் திரிவர்க்கம் என்ற மகாசாஸ்திரத்துக்கு ஆசிரியர் என்ற செய்தி யேயாம். மகாபாரதம், சாந்திபர்வம் 58 ம் அத்தியாயத்தில், உலகம் ஒரு காலத்தே தர்மங்குன்றி அதர்மத்தால் தலைதடு மாறி நின்றபோது, தேவர்கள் பிரமதேவரிடஞ் சென்று முறை யிட, அப்பகவான் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, லக்ஷம் அத்யாயமுள்ள பெருநூலொன்றைத் தம்புத்தியால் இயற்றி னர் என்றும், அதனில் அறம்பொருளின்பங்களான திரிவர்க் கங்கள் அவரால் விரிவாக உரைக்கப்பட்டன என்றும், அம் மகா சாஸ்திரத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் இன்ன வின்ன என் றும் பின்பு அத்திரிவர்க்க மென்னும் தண்ட நீதியைச் சுருக்கி வைசாலாக்ஷம், பாகுதந்தகம், பார்ஹஸ்பத்தியம், சுக்கிரநீதி என்ற நூல்கள் முறையே சிவபிரான் இந்திரன் வியாழன் வெள்ளி என்பவர்களால் இயற்றப்பட்டன என்றும் விரிவாகக் கூறப்படுகின்றன.

இவ்வரிய செய்தியினின்று, பிரம தேவர் இயற்றிய திரிவர்க் கம் முப்பாலாக முதன்முதல் தோன்றியதென்பதும், அதனி லிருந்தே ஏனைய நீதிநூல்களெல்லாம் கிளைத்தன வென்பதும் தெரியலாம். இவ்வாறு வள்ளுவனார், பிரம தேவரது திரி வர்க்க நூலைச் சுருக்கி முப்பாலென்ற பெயரால் நம் அரிய பெரிய நூலைத்தமிழுலகுக்கருளிய சிறப்புப்பற்றியே, முன்னோர் "நான் முகன் அவதாரமான திருவள்ளுவர்" என்று கூறலா யினர் என்றும் கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதாதல் காண்க.

### (3) திருவள்ளுவப் பெயர்க்காரணம்

திருவள்ளுவர் என்ற இவர் பெயர் பிறந்த குலம்பற்றி இவர்க்கு வழங்குவதென்று கூறுவர். வள்ளுவர் என்ற குடி யினர், தாழ் குலத்தவருள் ஒருவராய் (தொல். பொருளதி. 91, நச்.), விசேட காலங்களிலே அரசாணையை முரசறைந்து சாற்றுவோர் என்பது முன்னூல்களால் அறியப்படுகின்றது. சோதிட நூல்வல்ல நிமித்திகராகவும் பண்டைக் காலத்தே அவர் விளங்கினர் (சீவக. 419). சங்க காலத்தே, தமிழ் நாட்டவருள் சாதிபற்றிய இழிவும் அதன் மூலம் அருவருப்பும் இப்போ துள்ளனபோல இருந்தனவல்ல. தமிழ் வேந்தர்களுந் தலைவர்களும், பாணர் முதலிய தாழ்குலத்தவர்களை அவரது கல்வியறிவு முதலியனபற்றி எவ்வளவு சிறப்பாகக் கௌர வித்துவந்தனரென்பதற்குச் சங்கச் செய்யுட்களே தக்க சான் றாக உள்ளன. ஔவைப்பிராட்டியை ஆடல்பாடல் வல்ல விறலி யர் கூட்டத்தவராகக் கொள்ள இடமுண்டு. ஆகவே, குலச் சிறுமை, அவரது கல்விப் பெருக்கிற்கும் கௌரவத்துக்கும்

தடையாகப் பண்டைக் காலத்தில் இருந்ததில்லை என்று உறுதி கூறலாம். அதனால் நம்புலவர் பெருமான் வள்ளுவக் குடியிற் பிறந்து பெருமை பெற்றவர் என்று ஒருசாரார் கொள்வதிற் குறையொன்றுமில்லை என்க.

இனி, அரசர்க்குக் கருமத்தலைவராய் உயர்பதவி வகித்த வர்க்கு **வள்ளுவன், சாக்கை** என்ற சிறப்புப் பெயர்கள் முன்பு வழங்கலாயின என்பது—

" வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்கு
உள்படு **கருமத் தலைவர்க்** கொன்றும் "

என்ற திவாகர சூத்திரத்தால் அறியப்படுகின்றது. உள்படு கருமத்தலைவர்—அரசர்கீழ்க் காரியத் தலைமை வகிக்கும் அதி காரிகள். இதனால் இராசகாரிய வல்லபராய் விளங்கியவர்க்கு வள்ளுவப் பட்டம் வழங்கிவந்த செய்தி தெளியப்படும். இதனி னின்று அப்பெயரின் உண்மையுருவமும் பொருளும் ஒருபடி யாக விளங்க இடமேற்படுகின்றது. அஃதாவது வல்லபர் என்ற வடமொழி வள்ளுவர் என்று தமிழில் திரிந்தது போலும் என்பதாம். இவ்வாறு கூறுவது சிலர்க்குப் புதுமையாகத் தோன்றக்கூடும். ஆனால், அடியிற்கண்ட அரிய செய்தி இக் கருத்தை ஆதரித்து நிற்றல் அறியத்தக்கது.

புதுக்கோட்டைச் சித்தண்ணல்வாசலிலே அமைந்த மலைக் குகைச் சாஸனமொன்று, பாண்டியன் **அவனிபசேகரன்** காலத்த தாக உள்ளது. இப்பாண்டியன் 9 ம் நூற்றாண்டில் ஆண்ட ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுவன். இச்சாஸனம் அமைத்தவர் **மதுரை யாசிரியன் இளங்கௌதமன்** என்ற புலவர். அதனில் இப்பாண்டியன் "சிரீவல்லுவன்" என்று குறிக்கப்பட்டுள்ளான்.

**ஸ்ரீவல்லபன்** என்றபெயரைப் பாண்டியர் பலர் பெற்றிருந்த வர் என்பது சரித்திரவறிஞர் நன்கு அறிவர். ஆகவே, இச் சாஸனத்துள்ள **சிரீவல்லுவன்** என்ற பெயரின் மூலவுருவம் ஸ்ரீவல்லபன் என்பதேயாதல் காண்க. இவ்வாறே, சோணாட்டுத் திருவிசலூரிலுள்ள சிவன் கோயில் வடக்குத் திருமதிலில் அமைந்த பரகேசரிவர்மன் இராஜேந்திர சோழனது (1011-43) மூன்றும் ஆட்சி வருஷத்தில் அமைந்த சாஸனமொன்றும், **பாண்டியன் ஸ்ரீவல்லுவர்** மனைவி மேற்படி கோயிலுக்குச் சில திருவாபரணங்கள் அளித்தனள் என்று கூறுகின்றது. "பாண்டியன் ஸ்ரீவல்லுவர் தேவியார்....குந்தப்பாவையார்" என்பது அச்சாஸனத் தொடர். அச்சோழன் காலத்துப் பாண்டி யன் ஸ்ரீவல்லபன் என்பது சாஸனங்களால் தெளிய அறிந்த செய்தியாம். இச்சோழன் மகன் வீரராஜேந்திரன்—

" தென்னனைச் **சிரீவல்லவன்** மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரகேசரியை
மதவரை யொன்றுலுதைப்பித்து " ப்

போந்தான்—என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுவதும் காண லாம். இவற்றால், வல்லபன் என்ற வடசொல் வல்லுவன் என்று தமிழிற் பண்டைக்காலத்தே திரிந்து வழங்கிவந்த தென்பது பெறப்படுகின்றது. வல்லபன் என்ற அச்சொல், அன்புக்குரியவன், நாயகன், கரும **அத்யக்ஷன்** என்ற பொருள்கள் உடையதாம். ஸ்ரீவல்லபன் என்பது அரசனைக் குறிக்கும்போது, திருமகள்நாயகன் என்று பொருள்பெறும். எனவே, மன்னரின் கீழ்க் கருமத்தலைவராக விளங்கியவர்க்கு வழங்கும் வள்ளுவப்பெயரும் அவ்வல்லபச் சொல்லின் திரிபு என்று கொள்ளுவது ஏற்கும். மாளவர், குட்டவர், (குட்ட நாட்டவர்), ஈழவர் என்பன—மாளுவர், குட்டுவர், ஈழுவர் என இடையுகரம் பெறுதலும், வல்லி, வள்ளி (கொடி), வல்லூரம், வள்ளூரம் (தசை) என்றவாறு, வடமொழி லகரம் ளகரமாகத் திரிதலும் பெருவழக்காதல் காண்க.

மேற்கூறியவற்றிலிருந்து, நம் புலவர் பெருமான் " மன்னர்க்கு உள்படு கருமத் தலைவராய் " விளங்கியிருந்தமை யால் வள்ளுவரென்ற பெயர்பெற்றனர் என்று கூறுதற் கிடமுண்டு என்பது தெரியலாம். தென்பாண்டியிலுள்ள நாஞ் சில் நாட்டின் தலைவனொருவன் புறநானூற்றில் (137) சிறப் பிக்கப்படுகின்றான். இவன் சேரனது படைத்தலைமை வகித் தவன். இவனுக்கு நாஞ்சில் வள்ளுவன் என்ற பெயர் வழங்குகின்றது. அரசனது கருமத்தலைவனாயிருந்ததுபற்றியே இப்பெயரை அவன் பெற்றிருத்தல் வேண்டும். " ஸ்ரீ சோகிரத் துப்பருடையாரும் . . . **இராய சேகரராயின வள்ளுவருங்** கூடிச் செய்த கச்சமாவது " என்ற சாஸனத் தொடரும் இக்கருத்தினையே வலியுறுத்தல் காண்க "

இவ்வாறே வள்ளுவரும் தம்பெயரைப் பெற்றவர் என்பதற்கு ஆதாரம் என்னை என்று சிலர் உசாவலாம். அதற்கு, அவர் அருளிய நூலையன்றி வேறு சான்றும் வேண்டுமோ ? அரசிய லில் ஒப்புயர்வற்ற அறிவும் அனுபவமும் இருந்தாலன்றி, திருக்குறளின் பொருட்பால் போன்றதொன்று பிறரால் இயற்ற முடியும் என்று யாவர் கூறவல்லார் ? " மன்னர் தடமுடிமேற் றூன்றே, பாமுறை தேர் வள்ளவர்முப் பால் " என்று சீத் தலைச் சாத்தனுர் பாடியதினின்று, வள்ளுவரது அரசியல் ஞானத்தின் நிரதிசயப்பெருமையை மன்னர்கள் கொண்டாடிய செய்தி வெளியாதலுங் காணலாம். ஆயின் இத்துணை இணை யற்ற அரசியலறிவு மன்னரைச் சார்ந்தொழுகி அரசாங்க விஷ யங்களில் ஆழ்ந்திடுபட்டிருந்தாலன்றி இத்தெய்வப்புலவர்க்கு வாய்த்திராதென்பது திண்ணம். அதனால், இராஜகாரிய நிர் வாக வல்லபராயிருந்தவரே தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை, என்க.

வள்ளுவர் என்ற குடியினர்க்கு, அரசாணையை முரசறைந்து சாற்றுதலாகிய " உள்படு கருமத்தலைமை " இருந்தமையால், வல்லபர் என்பதன் திரிபான வள்ளுவப் பெயர்வழக்கு அமைந் ததென்றும், அத்தலைமைவகிக்கும் முதுகுடியில் அவதரித்த வரே நம் தெய்வப்புலவர் என்றும், அதனாற்றான் இத்தகைய ஒப்புயர்வற்ற திப்பிய நூலைச் செய்யும் திறமையுடையராயினர் என்றும் கொள்ளுதலும் பொருந்தும். இவ்வாறாயின், பழை மையாக வழங்கும் நம்புலவர் வரலாற்றுக்கு யாவும் இயைவன வாகும். எங்ஙனமாயினும், வல்லப சப்தமே வள்ளுவர் சொல்லாய்த் திரிந்துவழங்கியதென்றும், தெய்வத்தன்மை வாய்ந்த அரசியல் நிர்வாக வல்லபராக விளங்கியமை பற்றியே திருவள்ளுவர் என்ற திருநாமம் இப்பெரும்புலவர்க்கு வழங்கலாயிற்று என்றும் கொள்வது ஏற்புடையதாகும்.

### (4) திருவள்ளுவர் ஊர்

தெய்வப்புலவரது ஊர் மயிலாப்பூர் என்பர். இதற்குப் பழைய மேற்கோள் காண்டல் அரிதாயினும் உலகவழக்குப் பெரிதாயுள்ளது. இனித் திருவள்ளுவமாலையில் வரும் முன்னோர் வாக்கொன்று ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

" உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதரர் புனற்கூற் கச்சு "

என்ற நல்கூர் வேள்ளியார்பாட்டில், "வடதிசையை நோக்கி, நப்பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானை உத்தரமதுரைக்கு அச்சு (ஆதாரம்) என்று கூறுவர். இப்பக்கத்தை நோக்குமிடத்து, மாதானுபங்கியுடன் கூடியவரும் குற்றமற்ற புலமையுடைய செந்நாப் போதாருமான திருவள்ளுவர் தென்மதுரைக்கு அச்சாவார் என்னும் பொருள்படக் கூறப்பட்டுள்ளது. கீதாசாரியாராய் உலகை வாழ்வித்தருளிய கண்ணபிரான் வடமதுரைக்கு எங்ஙனம் ஆதாரமாய்ச் சிறந்தவரோ அங்ஙனமே திருக்குறளாசாரியராய்த் தமிழகத்தை வாழ்வித்த திருவள்ளுவர் தென்மதுரைக்கு ஆதாரமாய்ச் சிறந்தவரென்பது கருத்து. இப்பாட்டின் போக்கிலிருந்து, வடமதுரை கண்ணன் அவதாரஸ்தலமாய் விளங்கியதுபோலத் தென்மதுரை திருவள்ளுவர் அவதாரவிடமாக விளங்குவது என்னுங் குறிப்புத் தோன்றுதல் காண்க. கூடற்குத் தென்மதுரையென்னும் வழக்குப் பழமையானதென்பது "தக்கணமதுரை தான்வறிதாக" என்னும் மணிமேகலையடியாலும் அறியப்படும். இவற்றால், திருவள்ளுவர் அவதாரஸ்தலம் மதுரையெனக் கொண்டு, அவர் வசித்தவிடம் மயிலாப்பூராகக் கோடல் பொருத்தம் என்னலாம்.

### (5) திருவள்ளுவரின் தேவியார்

மேற்காட்டிய "உப்பக்கநோக்கி" என்ற நல்கூர்வேள்வியார் பாட்டினுள், நம் தெய்வப்புலவரின் தேவியார்பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதென்றே சொல்லலாம். கண்ணபிரானையும் வள்ளுவனாரையும் ஒப்புமைப்படுத்துமிடத்து, உப்பக்கநோக்கி + இப்பக்க நோக்கி, உத்தரமதுரை + கூடல் (தக்கிணமதுரை)எனப் பாடிய அப்புலவர், உபகேசி (நப்பின்னை) என்ற தேவியைக் கண்ணனுக்குக் கூறியவாறே "மாதானுபங்கி" என்ற தொடரால் வள்ளுவர்தேவியைக் குறிப்பிட்டனர் என்று, பாட்டமைதியாற் கொள்ளத்தகும். மாதானு பங்கி என்பது தாயை நிகர்த்த ஒழுங்கினர் எனப் பொருள்படும் என்பர். தந்தையை நிகர்த்தவர் என்னாது தாயை நிகர்த்தவர் என்றமையால், அவ் வடதொடர் பெண்பாலுக்கே பெரிதும் ஏற்புடைய தாதலுங் காண்க. எனவே, "மாதானுபங்கி....செந்நாப் போதார்" என்ற தொடர்க்கு "மாதானுபங்கியாகிய செந்நாப்போதார்" எனப் பின்னோர் கொண்ட பொருள் ஏற்கத்தக்கதன்று என்பதும், மாதானுபங்கியைத் தேவியாகவுடைய செந்நாப்போதார் என்று பொருள் கோடலே பொருந்துவதென்பதும் தெரியலாம். இங்ஙனமாயின், மாதானுபங்கி என்பது நம் தெய்வப் புலவரின் தேவியார் திருநாமம் என்பது பெறப்படுகின்றது. இப்போதை வழக்கின்படி வாசுகி என்பது அத்தேவியின் இயற்பெயரும், மாதானுபங்கி என்பது உபகேசிபோன்ற சிறப்புப் பெயருமாகக் கொள்ளத்தகும். இனி "மாதானுபங்கி" மருவு புலச்செந்நாப்போதார்" என்பது பழம்பாடமாயின், உபகேசியின் தோண்மணந்தவனாக கண்ணன் விசேடிக்கப்பட்ட முறையில் மாதானுபங்கியை மணந்தவராக வள்ளுவரும் விசேடிக்கப்பட்டார் என அமைந்து நயம் பெற்றொளிரும். அதனால், மருவு என்பதே, உண்மைப் பாடமாயிருந்து "மறுவில்" எனப் பின்னர் மாறியது போலும். உத்தம பதிபத்தியாலும் உழுவலன்பாலும் பிரசித்தியடைந்திருந்தமையின், இவ்வாறு புகழ்புரிந்த இல்லினராற் கண்ணனும் வள்ளுவரும் சிறப்பிக்கப்பட்டனர் என்க. தந்தேவி இறந்தபோது தெய்வப்புலவர் உருகிப்பாடிய வெண்பாவே அவர் தேவியின் மாட்சிமையை நன்குவிளக்க வல்லது. நச்சினார்க்கினியர் கொண்ட பழம் பாடப் படி. அப்பாடல் அடியில் வருமாறு :—

"அடிசிற் கினியாளே யன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றூங்கு மென்கண் எனக்கு" (தொல் பொ. 146, உரை)

### (6) ஒரு குறிப்பு


திருக்குறளில் மற்றொருவிசேடங் குறிப்பிடற்குரியது. கடைச் சங்கநூல்கள் பெரும்பாலவற்றினும் "குஃறொடர்ந்த அன்மொழி" பயினுதல் காணலாம். அவற்றிலும், அகப்பொருளைப் பற்றிய நூல்களிலோ எனில், அச்சொல்வழக்கு மிகுதியேயாம். இம் முறையே, உரு—அதிகாரங்கள் காமவிஷயமாகக் கூறிய திருவள்ளுவர் நூலினும் அச் சொல்லை எதிர்பார்த்தல் இயல்பே. ஆனால், அந்நூலுள் ஒரிடத்தும் அது வழங்குப்படாமை வியக்கத்தக்கது. இச்செய்தி, வள்ளுவனார் தம் நூற் பெருமையில் பெருநோக்குடையராயிருந்தவர் என்பதைப் புலப்படுத்தக்கூடியது. ஏனைப்புலவர்கள் அகப்பொருள் விஷயமாகக் கூறியவற்றினும் சிறப்பாகவும் கௌரவமாகவும் வள்ளுவனார் தம் காலத்துப் பாலையியற்றியவர் என்று அறிஞர்கள் போற்றும் புகழ்ச்சியோடு இவ்விஷயமும் சேர்த்து மதிக்கற்பாலது.

### (7) இஷ்டம் பூர்த்தம் தத்தம்

வடநூலார் அறஞ்செயன்முறையை மூன்றுவிதமாக வழங்குவர்: இஷ்டம், பூர்த்தம், தத்தமென்பன. அவற்றுள் **இஷ்டமாவது**, உலகனைத்தும் வாழ்கவெனக் கருதித் தெய்வங்களை நோக்கித் தொழுஞ் செயல் : இஃது, அக்கினி, ஆகுதி, மந்திர முதலிய வற்றால் வேள்விமூலம் ஆராதித்தலாம். **பூர்த்தமென்பது**, எல்லாவுயிர்களும் இடுக்கணின்றி இன்பமடையும் வண்ணம் இயற்றும் அறச்செயலாம். வித்தியாசாலை, வைத்தியசாலை, தண்ணீர்ப்பந்தல் முதலாய பொதுநன்மைகளை இது குறிக்கும். **தத்தமென்பது** எளியார்க்கிரங்கி ஈதலாம். இம்மூவகையுள்ளே, முதலிற்குறித்த இஷ்டம் அவ்வவ் வருணாச்சிரமங்கட்கு ஏற்றவாறு சிறப்பாயமைவதென்றும் ஏனைப் பூர்த்தமும் தத்தமும் எல்லார்க்குமொத்த தர்மங்களென்றும் உணர்க. இங்ஙனம் வட நூலார் வகுத்த முறையையே, திருவள்ளுவரும் கூறியிருத்தல் குறிப்பிடத்தக்கது. அம்முப் பகுதியறங்களுட் சிறப்பியல்புடைய இஷ்டத்தை "எல்லா அறநூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதலை இயல்பாக வுடைய" வள்ளுவனார் தம் நூலில் விரிந்துரைக்க ஒருப்பட்டிலராயினும், இல்வாழ்க்கையதி காரத்தில்—

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்பதனால் அவ்வறச்செயல்கள் இன்னவென்று குறிப்பித்திட்டார். வள்ளுவனார் வைதிகச்சார்புடையராதலின், தென்புலத்தாரான பிதிரர்க்குப் புரியுங்கடன் முதலிய பஞ்சமகாயஞ்ஞங்களை ஈண்டெடுத்துக்கூறினர் எனவுணர்க. இங்ஙனமே "இல்வாழ்வானென்பா னியல்புடைய **மூவர்க்கும்**—நல்லாற்றி னின்ற துணை" என, வேதமுறையினமைந்த வானப்பிரஸ்த முதலிய சிறப்பிடங்களிற் புரியும் தர்மங்களையும் தெய்வப்புலவர் சூசிப்பித்தல் காண்க. இனிப் பொதுநன்மையாகிய பூர்த்தமும், வறியராய் ஏற்றார்க்கு மாற்றுதலாகிய தத்தமும், இல்லறவியலீற்றில் **ஒப்புரவு**, **ஈகை** என்ற இரண்டு அதிகாரங்களால் முறையே அவர் **விரித்துக்கூறினர்**.



**வித்தகப் பத்திராதிபரும் பழுத்த கல்வியறிஞருமான தென்கோவைப் பண்டிதர் திரு. எஸ். கந்தையாபிள்ளை.**

# இயன்மொழி வாழ்த்து


**(பண்டிதர் ச. கந்தையாபிள்ளை அவர்கள் பாடியது.)**

கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயும், வித்தியாநிலையத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளராயும் கடமை யாற்றியவரும், தமிழிற் சிறந்த பாண்டித்தியம் வாய்ந்தவரும், வித்தகப்பத்திராதிபருமாக விருந்த தென்கோவை ச. கந்தையாபிள்ளை அவர்கள் 1919 ம் ஆண்டில் ஐந்தாம் ஜோர்ஜ் என்னும் அரசர் பெருமானுரின் ஐம்பத்தைந்தாவது ஆட்டைவிழவுக் கொண்டாட்டகாலத்தில் பாடிய இயன்மொழி வாழ்த்து. சங்க காலப் புலவரொப்ப இக்காலத்திலும் சரளமாகப் பாடும் ஆற்றல் வாய்ந்தவர் ஈழநாட்டில் உளர் என்பதனை நிலைநாட்டியுள்ளார் பண்டிதர் கந்தையாபிள்ளை அவர்கள். 1920 ம் ஆண்டு ஜூன் மாதம் 3 ந் திகதியில் இது வெளிவந்தபொழுது இதனைச் சேய்நாடும் தாய் நாடும் பாராட்டின. சென்னைப் பச்சையப்பன் கல்லூரித்தமிழ்ப பேராசிரியர் உயர் திரு. செல்வக் கேசவராய முதலியார் அவர்கள், “ தங்கள் இயன்மொழிவாழ்த்தைக் கண்டதும் தூரத்துநின்ற அழுக்காறு என்பவன்சமீபத்தில் வரத்தொடங்கிவிட்டான். சங்கநூல்களெல்லாம் எங்களுக்கு இன்றும் புதுப்பாடமாகவே இருக்க, தங்களுக்கு அவை பழம்பாடமாகி ஏவல் செய்து நிற்பது வியப்பினும் வியப்பே. தங்களைக் கீரன் என்பேனு, கபிலன் என்பேனு ? மருதனிள நாகனூர் என்பேனு ? யார் என்றுகூற அறியேனுய் இடர்படுகின்றேன் . . . . . ” என்று எழுதினுர்கள். பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் “ சங்கச்சான்றோர் பாடல்கள் போல, பாட்டுக்களை இயற்றுவோர் தற்காலத்து உளர் எனின் அது தாங்களே என்பது மிகையன்று. தங்கள் அகவலை எனது நண்பர் யாவருக்கும் காண்பிப்பேன் . . . . . . . ” என்று குறிப்பிட்டார்கள். குமாரசுவாமிப்புலவர், விபுலானந்த அடிகள், மறைமலையடிகள், சபாரத்தின முதலியார் போன்ற அறிஞர்களும் இந்த இயன் மொழிவாழ்த்தைப்படித்து தங்கள் நல்லபிப்பிராயத்தை தெரிவித்தனர். இத்தகைய இயன்மொழிவாழ்த்துப் பிரதியைத் தேடியாம் பலகாலம் அலைந்து திரிந்தபொழுது நண்பர் ஒருவர் இதனைப் பேணிவைத்திருப்பதனைக் கண்டு அவரிடமிருந்து பிரதி செய்து ஈண்டு வெளியிடுகின்றேம். இத்தகைய சிறந்த வேறு ஈழநாட்டுப்பாக்களையும் பேணுவதில் ஊக்கங் கொண்டுள்ளாம். இவ்வாறு அரிய கலைக்களஞ்சியங்களையும் தனிச்செய்யுட்களையும் பேணிவைத்திருக்கும் அன்பர்கள் எமக்கு அனுப்பிவைத்தால், அவற்றைத் தமிழன்பர் படித்தின்புறுமாறு வெளியிடுவாம்.

(ஆ—ர்).

### இயன் மொழி வாழ்த்து
### நேரிசையாசிரியப்பா

ஓங்குகடல் வளைஇய வீங்குநிலப்பரப்பைப்
பண்டுதன் னடிமலர் கொண்டுதாஅ யளந்து
பால்விரி தரங்கப் பாயன் மீமிசை
அம்புயன் முதலா வமரர்போற் றிசைப்பத்
திருவநீள் செம்மணி யொருபாற் கவினக்
கருமணி கிடந்த காட்சியது கடுப்பத்
தாமரை யுறையுங் காமரு தெய்வத்
திருவொடும் பொலியு மொருபெ ருங்கடவுள்
வலம்புரித் தடக்கை மாஅல் போலப்
பரிதியங் கடவுள் படுபறி யாப்பேர்
இருநில முழுது மொருகோ லோச்சி
ஆணையா லளந்து மாணமர் வடவெண்
பனிக்கடன் மரீஇய பாய்புக ழாங்கில
பவுமத்துச் சிறந்து பல்வளம் பழுனி
விண்வத் துயரிய கண்செலாச் சியமத்து
மேனிலை வதியு மெல்லியன் மடநலார்
முத்துற ணகைநிலா முகமதிக் குடைந்து



கொழும்பு-சிங்கப்பூர் விமானப் போக்குவரத்துத் திறப்புவிழாவில் பதினாலு இலங்கையர் கலந்துகொண்டனர். அரசாங்க தகவல் அதிபரும் இதில் ஒருவராவர். இலங்கையின் சர்வ தேசிய விமானச் சேவை இதுநிமித்தமாக சிங்கப்பூரில் ஒரு விருந்து நடத்தியது.

# கொழும்பு-சிங்கப்பூர் விமான சேவை

எயார் சிலோன் சர்வதேச விமானப்போக்குவரத்துச் சேவை தன் கோடைகால நிகழ்ச்சிநிரலில் கொழும்புக்கும் சிங்கப்பூருக்குமிடையில் ஒரு புதிய கொன்ஸ்டலேஷன் சேவையை சேர்த்துக் கொண்டிருக்கிறது.

புதிய கொன்ஸ்டலேஷன் விமான சேவையின் அங்குரார்ப்பணப்பிரயாணம் எப்ரில் மாதம் 18 ந் திகதி வியாழக்கிழமை 12.35 மணிக்கு ரத்மலானையிலிருந்து புறப்பட்டுச் சென்று 21.05 மணிக்கு சிங்கப்பூரையடைந்தது. ஆடம்பரமான முதலாம் வகுப்பு இடவசதி, ஊர்சுற்றுப் பிரயாணிகளின் இடவசதி ஆகியவற்றைக் கொண்ட நான்கு இயந்திரங்கள் பூட்டப்பட்ட கொன்ஸ்டலேஷன விமானங்களைக் கொண்டு வாரந்தப் போக்குவரத்துகள் இப்பொழுது ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இது கொழும்பிலிருந்து ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் சிங்கப்பூரிலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையிலும் நடைபெறுகின்றது.

சிங்கப்பூரில் இந்த விமானப் போக்குவரத்துச் சேவை கே. எல். எம். தூரகிழக்கு விமானப் போக்குவரத்துச் சேவைகளுடனும் இதர விமானப் போக்குவரத்துச் சேவைகளுடனும் இணைகின்றது. சனிக்கிழமையன்று சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்ததும், இது மத்திய கிழக்கு, ஐரோப்பா ஆகிய இடங்களுக்கான எயார்சிலோனின் "சபாயர் சேவை" யுடனும் எயார் சிலோனின் பிரதேசவாரி, உள்ளூர் விமான சேவைகளுடனும் கொழும்பில் வைத்து இணைக்கப்படுகின்றது.

சிங்கப்பூருக்கும் ஆம்ஸ்டர்டாமுக்குமிடையில் நடைபெறும் எயார் சிலோனின் வாராந்த "சபாயர் சேவை" கொழும்பு, பம்பாய், கராச்சி, பாரீன், கெய்ரோ, ரோமாபுரி, லண்டன் ஆகிய இடங்களினூடாக நடைபெறுகின்றது.

கொழும்புக்கும் சிங்கப்பூருக்குமிடையில் அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கப்பட்ட எயார் சிலோனின் முதலாவது விமானப் பிரயாணத்துக்கு, கௌரவ போக்குவரத்து பொதுவேலை மந்திரி அவர்கள், கௌரவ நீதிமந்திரி அவர்கள், பாதுகாப்பு வெளிநாட்டு விவகார மந்திரி அவர்களின் பாராளுமன்றக் காரியதரிசி அவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோர் உட்பட 14 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். சிங்கப்பூரிலிருந்து திரும்பிவரும்போது சிவில் விமானப் போக்கு வரத்து தலைமை அதிபதி அவர்கள், மலாயாவிலுள்ள இலங்கை ஹைகொமிஷனர் அவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பத்திரிகை நிருபர்கள், போக்குவரத்து ஏஜெண்டுகள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தவர்களுட் சிலராவர். எப்ரில் மாதம் 25 ந் திகதி நடைபெற்ற இரண்டாவது பிரயாணத்தின் போது இலங்கை அரசாங்கத்தகவல் அதிபதியும், பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியும் அழைக்கப்பட்டிருந்தவர்களுட் சிலராவர்.

# வட இலங்கையில் ஒரு வாரம்

(அம்பலவாணன்)

கடந்த வைகாசி மாதத்தில் வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்கள் தகவற்பகுதி அதிபர் திரு. எம். ஜே. பெரேரா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர். "நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு ஒரு புதிய தேர் செய்யப்படு கின்றது. அது ஒரு இலட்சத்துக்கு மேல் முடியும் என உத்தே சிக்கப்பட்டுள்ளது. இதனைத் தென்னிந்தியாவிலுள்ள ஆச்சாரி மாரும் உள்ளூர் ஆச்சாரிமாரும் செய்துவருகின்றனர். இது பூர்த்தியானதும் இலங்கைக்குப் பெருமையளிக்கத்தக்க சித்திர வேலைப்பாடமைந்ததாக இருக்கும். இந்தச் சித்திரத்தேர்வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அது யாழ்ப்பாணத்தி லும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இரதத்திலுள்ள செதுக்குச் சிற்பங் கள் உயிர்ச் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன. இந்த அற்புத வேலைப்பாடமைந்த சித்திரத் தேரைப்பற்றி தங்கள் பகுதி வெளியிடும் ஸ்ரீலங்கா சஞ்சிகையில் சில தொடர்கட்டுரைகளை வெளியிடுவது யாவர்க்கும் நன்மைதருவதொன்றாகும்" என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டார் வடமாகாண அதிபர். மேலும் அவர், தமது கடிதத்தில்

"இரதத்தின் சித்திரக்கலையை படங்கள் மூலம் காட்டும் பொருட்டுச் சிறந்த படங்களை எடுத்தற்காகத் தங்கள் பகுதிப்படப் பிடிப்பாளரை அனுப்பிவைப்பது பெரிதும் விரும்பத்தக்கது. அந்தப் படங்களைவிளக்கியும் இரதத்தின் சித்திரக்கலையைப் புலப் படுத்தக்கூடிய கட்டுரையினை எழுதும் ஆற்றல் வாய்ந்த ஒரு வரையும் அனுப்பிவைப்பது நல்லது. வசதிப்படுமானல் முதலி யார் குல சபாநாதனை அனுப்பிவைக்கலாம். இந்த இரதவேலை ஆனி மாதம் முதல் வாரத்துக்கு முன்னர் நிறைவெய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விஷயத்தில் தாங்கள் உதவி ஒத்தாசை புரிவீர்கள் என எதிர்பார்க்கின்றேன். " என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு தகவல் அதிபர் திரு. எம். ஜே. பெரேரா பின்வரும் சாராம்சப்பட மறுமொழியனுப்பினர்கள். "எனது அலுவலகப்படப்பிடிப்பாளரையும் முதலியார் சபா நாதனையும் சித்திரத்தேர் விஷயமாக ஆவன செய்யும் பொ ருட்டு அனுப்பி வைக்கலாம். ஆனல் இந்த ஒரு வேலைக்காக மட்டும் இவ்வளவு தூரம் பிரயாணஞ் செய்வதிலும் பார்க்க, வேறு அரசாங்கத்திட்டங்களையும் பார்வையிட்டுக்குறிப்புகளும் படங்களும் எடுக்க உதவிசெய்தால் நல்லது. அண்மையில் தொடங்கப்பெற்ற நீர்ப்பாசனத்திட்டங்கள், யாழ்ப்பாணத்தி லுள்ள கோயிற்கட்டக்கலையை விளக்கும் படங்கள், குடிசைக் கைத் தொழில்கள் முதலியவற்றை விளக்கும்படங்கள் ஆதியனவற்றை யும் எடுக்கத்தக்கதாக ஒரு பிரயாண நிகழ்ச்சிநிரல் தயாரிப்பது விரும்பத்தக்கது. அந்த விஷயத்தைத்தங்களிடமே விட்டுவிடுகி றேன். யாழ்ப்பாணத்திலே அவர்கள் பயணஞ் செய்வதற்கேற்ற வாகன வசதிகளையும் ஒழுங்கு செய்வீர்கள் எனக் கருதுகிறேன். எந்த எந்த இடங்களுக்கு அவர்கள் போகவேண்டும் என்று ஒரு சூசிகை தயாரித்து அனுப்பிவையுங்கள்".

இக்கடிதப்பிரகாரம் வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா அவர்கள் ஒரு பிரயாணத்திட்டத்தைத்தயாரித்து அனுப்பி யிருந்தார்கள். படப்பிடிப்பாளர்வருவதற்கு முன்னர் இங்கு அநேக குறிப்புக்களை ஏற்கெனவே சேர்த்து வைக்கவேண்டி யிருப்பதால், முதலியார் குல. சபாநாதனை முன்னுடியே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். படம்பிடிப்பதையும் குறிப்புக்கள் எடுப்பதையும் ஒரேமுறையிற் செய்வது இயலாத காரியம் என்று அவர்கள் தமது மறுமொழிக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.


திரு. எம். ஜே. பெரேரா அவர்கள் முதலியார் குலசபாநாத னையும் படப்பிடிப்பாளர் விக்டர் சுமதிபாலாவையும், பத்திரிகை உத்தியோகத்தர் திரு. கெனத். சோமநாதரையும் என்னையும் கூப்பிட்டு யாழ்ப்பாணத்துக்குப் போய்வரும்படி சொன்னர்கள். முதலியாரைப் பார்த்து "நீங்கள் மே மாதம் 29 ந் திகதி இரவு புறப்பட்டு ஜூன் மாதம் 5 ந் திகதி வரவேண்டும். மற்றவர்கள் யாழ்தேவியில் ஜூன் மாதம் முதலாந் திகதி புறப்பட்டு அன்று மாலைநடைபெறும் கலைகைப்பணி விழாவிலும் சில பாடங்கள் எடுத்துவரவேண்டும் என்று கூறினர்.

புத்த ஜயந்திக்காக இந்தியா முழுவதையும் சுற்றிப்பார்ப்ப தற்குச் சில பிரயாணச் சலுகைகளை இந்திய அரசாங்கம் அளித்தது. இதனல் இலங்கை மக்கள் பலர் குறைந்த செலவுடன் புகை யிரதப் பிரயாணச் சீட்டுப் பெற்று இந்தியா முழுவதையும் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர். அந்தச் சலுகையும் மே மாதம் 31 ம் திகதியுடன் முடிவடையும் என்று இந்திய அரசாங்கம் விளம்பரஞ்செய்தது. அதன்படி கடைசிநேரத்திலாவது கிளம்பி விடலாமென்று திட்டமிட்டு லீவுகேட்டிருந்தார் குல. சபா நாதன் அவர்கள். லீவும் கிடைத்தது. விசா பெற்று இந்தியா வுக்கு 27 ம் திகதியளவில் கிளம்ப ஆயத்தஞ்செய்தார். ஆனல் வடமாகாண அதிபரின்கடிதம் குறுக்கே நின்றது. இந்த முக்கிய மான அலுவலை முடித்துக்கொண்டு யாத்திரை செய்வது தான் நல்லது என்று தகவல் அதிபர் புத்திமதி கூறவே, திரு. சபாநாதனும் இந்தியப் பிரயாணத்தை பின்போட்டுவைத்தார். அவர் மே மாதம் 29 ந் திகதி யாழ்ப்பாணப்புகையிரதத்தில் ஏறி யாழ்ப்பாணம் போய்ச்சேர்ந்தார்.

ஜூன் முதலாந் திகதி சனிக்கிழமை காலை, 6 மணிக்கு கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் கடுகதிப்புகையிரதமாகிய யாழ்தேவியில் பிரயாணஞ்செய்வதற் காகப் புறப்பட்டோம். நான் நெடுங்காலம் யாழ்ப்பாணம் போக வில்லையாதலால், இந்தப் பிரயாணத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தேன். சரியாக ஐந்தரை மணிக்கெல்லாம் நான் புகையிரத நிலையத்துக்கு வந்து விட்டேன். மற்ற இருவரும் வரவில்லை. 5.45 அளவில் திரு. சோமநாதர் வந்து சேர்ந்தார். ஐந்து நிமிஷம் கழிந்து திரு. விக்டர் சுமதிபாலா வந்து சேர்ந்தார். சரியாக ஆறுமணி அடிக்க யாழ்தேவி புறப்பட்டது. இலங்கைப் புகையிரதச் சேவையில் கடுகதிப்புகையிரதச் சேவை ஒரு புரட்சியை யுண்டாக்கிவிட்டதென்று தான் சொல்லவேண்டும். உருகுணை குமாரி, யாழ்தேவி, உடரட்டை மெனிக்கா என்பன இப்பொழுது இலங்கையில் நன்கு அடிபடும் பெயர்களாகிவிட் டன. கடுகதிப்புகையிரதத்திற் பிரயாணஞ் செய்வதே ஒரு தனி இன்பமாகவிருந்தது. இது இன்னுஞ் சிறிது வேகமாகச் சென் றால் யாழ்ப்பாணத்துக்கு 12 மணியளவிற் போய் விடலாம் எனக்கேள்வி. பாந்தன் கழிந்ததும் யாழ்தேவி கிளப்பிய தூசு பிரயாணிகள்மீது படியத் தொடங்கியது. எனவே பிற

பகல் ஒன்றேகால் மணியளவில் யாழ்ப்பாணத்தில் இறங்கிய பொழுது மெய்யெல்லாம் நீறுபூசிய மேனியராகக் காணப்பட்டோம். யாழ்தேவி எங்களை யெல்லாம் தற்காலிகமாகச் சைவர்களாக்கிவிட்டது. யாழ்ப்பாணப்புகையிரத நிலையத்தில் இறங்கியதும் கட்டைச் சிவலையர் ஒருவர் நெடுகப்பழகியவர்போல திரு. சோமநாதருடன் பேசினார். வடமாகாண அதிபர் தம்மை அனுப்பியிருப்பதாகக் கூறினார். அவருடைய பெயர் கணபதிப்பிள்ளை எனப்பின்னர் அறிந்துகொண்டோம். உங்களுக்குச் சாப்பாடு எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. வாடிவீட்டில் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறோம். சாப்பிட்டபின் சிறிது நேரம் படுத்து உறங்குங்கள். அப்புறம் சாயந்தரம் நீங்கள் கலைகைப்பணி விழாவைப் பார்க்கச் செல்லாம் என்று கூறி எங்களை வடமாகாண அதிபருடைய "ஜீப்" மோட்டார் வண்டியில் வாடிவீட்டுக்குக் கூட்டிச் சென்றார். இந்த ஜீப்பை செலுத்துபவர் வெள்ளவத்தையிலுள்ள ஒருமுஸ்லிம் ஆள் என்று அறிந்தோம். மிக விரைவாகவும் கவனமாகவும் வண்டி ஓட்டும் ஆற்றல் வாய்ந்தவர். நினைத்த நேரம் வண்டி ஓடமுடியாமற் செய்யும் புத்திக்கூர்மையும் முகம்மதுவுக்கு உண்டு. அதிகம் முட்டிக்கொள்ளாமல் நடந்து கொண்டால் முகம்மது தனது உயிரையும் தியாகஞ்செய்யத் தயாராயிருப்பார். ஒருவாரம் வரை எங்கள் நால்வருடைய உயிர் முகம்மதுவின் கையிலேயே இருந்தது என்றால் அதுமிகையன்று.

30.5.57 ல் ஆரம்பித்த கலை, கைப்பணி விழாவைத் தீபமேற்றித் தொடக்கிவைக்கிறார் கலாச்சாரப் பகுதி அதிகாரி திரு. என். கியூடயஸ் அவர்கள். அருகில் நிற்பவர்கள் இடதுபுறம் திரு. வீ. கே. சுப்பிரமணியம் (கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர்) வலது புறம் திரு. ம. ஸ்ரீகாந்தா (வட மாகாண அதிபர்).



வாடிவீட்டில் நல்ல உணவளித்தார்கள். உண்ட களை தொண்டர்க்கும் உண்டு என்ற முறையில் நாங்கள் படுத்துறங்கினோம். நாலரை மணியளவில் மெல்லிய "கறுவல்" ஒருவர் நாங்கள் தங்கியிருந்த வாடிவீட்டுக்கு வந்து சேர்ந்தார். எங்களைக் கண்டதும் தமதுவணக்கத்தைப் புன்சிரிப்புடன் செலுத்தினார். "எல்லாம் வசதியாக இருக்கிறதா? எதும் தேவையானால் சொல்லுங்கள்" என்றுசொல்லி விட்டுச் சிரித்தார். அந்தச் சிரிப்பிலே முத்துக்கள் பதிந்தாற்போன்ற பற்கள் அவருடைய உள்ளமும் இவ்வாறே வெள்ளைதான் என்பதைப் புலப்படுத்துவது போல இருந்தன. கச்சேரியில் வேலைசெய்யும் பி. சிவப்பிரகாசம் இவர்தான். வாடிவீடு யாழ்ப்பாண நகரமண்டபத்துக்கு எதிரேயுள்ளது. வாடிவீட்டிலிருந்து 100 யார் தூரத்தில், மத்திய கல்லூரி உண்டு. இது உவெஸ்லியன்மிஷனால் நாடத்தப் பெறுகின்றது. இக்கல்லூரியின் பழைய மாணவர் **வண. டி. ரி. நைல்ஸ்** அவர்கள்தாம் இப்பொழுது கல்லூரி அதிபராகக் கடமையாற்றுகின்றார். இவர் உலகப்பிரசித்திபெற்ற பேச்சாளர். நல்லொழுக்கமும் அமைதியும் உடையவர். அநேக நூல்களுக்கு ஆசிரியர். இதே கல்லூரியிற்றான் முன்னர் பீற்றர் பார்சிவல் பாதிரியார் படிப்பித்தாராம். இந்தப் பாதிரியாரின் கீழ் ஆறுமுகநாவலர் ஓர் ஆசிரியராக இருந்தார். இவருடைய வேண்டுகோட்படிதான் நாவலர் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்பு மூலந்தான் நாவலருடைய புகழ் தமிழ்நாட்டில் முதன்முதற் பரவியது. பார்சிவல் பாதிரியார் நாவலரைப் பெரிதும் மதித்து கௌரமாக நடாத்தி வந்தார். இதே கல்லூரியிற்றான் கலைப் புலவர் க. நவரத்னம் அவர்களும் இப்பொழுது ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்கள் என அறிந்தோம்.

ஆறு மணியளவில் திரு. சிவப்பிரகாசம், கணபதிப்பிள்ளை முதலியவர்களுடன் நாங்கள் மூவரும் கலைகைப்பணி விழாவைப் பார்க்கச் சென்றோம். மத்திய கல்லூரிவாயிலில் மேவியிழுத்த தலையுடனும் "ஸ்ரைலான்" உடையுடனும் மெல்லிய இளைஞர் ஒருவர் எங்களை வரவேற்று உபசரித்தார். யாழ்ப்பாணம் கலைகைப்பணி விழா மலர் ஒன்றினையும் தந்துதவினார். இவர் தான் விழாமலர் ஆசிரியர் இராமநாதன் என்று திரு. சிவப்பிரகாசம் எங்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தார்.

### கலைவிழா மலர்

நல்லூர் சங்கிலித்தோப்பு வாசலின் படம் யாழ்ப்பாணம் கலைகைப்பணி விழா மலரின் முகப்பு அட்டையை அலங்கரிக்கின்றது. இதனைப் பெரும்பாலோர் சங்கிலி அரசனுடைய மாளிகையின் வாசல் என்று பிழையாக கருதியிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டபின்னர் போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இதனைக் கைப்பற்றினர் எனச் சரித்திரம் பேசுகிறது. டச்சு அதிகாரிகளும் நல்லூரிலேயே மாளிகை கட்டி வாழ்ந்தனர். சிறந்த நந்தவனத்தையும் அமைத்தனர். டச்சுக்காரர் நல்லூரில் இருந்தனர் என்பதை ஞாபகப்படுத்தும் சின்னமாக இந்த வாசல் விளங்குகின்றது. இந்த வாசலுக்கும் சங்கிலி அசரனுக்கும் எவ்வித தொடர்புமில்லை. ஆனால் சங்கிலித் தோப்பு என்ற இடத்தில் இந்த வாசல் காட்சியளிக்கின்றது. அவ்வளவுதான். இதனைப் பழுது படவிடாமற் பாதுகாக்க தொல்பொருட் பகுதி இதுவரை நடவடிக்கை எடுக்காதிருந்தால், அதைக் கவனிப்பது அவசியமாகும்.




**சங்கானையிற் செய்த கலையழகுமிக்க மட்பாண்டங்களை கலைச் சங்கக் காரியதரிசி திரு. நவரத்தினம் அவர்களும் தலைவர் ஸ்ரீகாந்தா அவர்களும் பார்த்து மகிழ்கின்றனர்.**

கலைவிழாமலரை மலரச் செய்வதில் கௌரவ ஆசிரியராகக் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களும், ஆசிரியராக திரு. அ. இராமநாதன் அவர்களும் உதவியாசிரியர்களாக திரு. பெ. அட்சயமூர்த்தி, திரு. ஆ. விக்னராஜா அவர்களும் தொண்டாற்றியுள்ளனர்.

இவ்விழா பலதுறைகளிலும் சிறந்து விங்குவதற்குத் துணை புரிந்தவர்களையும் நீங்கள் அறிந்திருக்கத்தானே வேண்டும்.

திரு. பரம் தில்லைராஜா—இசைப்பகுதி.
திரு. நா. தம்பிரத்தினம்—நடனப்பகுதி.
கலையரசு கே. சொர்ணலிங்கம்—நாடகப்பகுதி.
திரு. வி. என். செல்வரத்தினம்—கைப்பணிப் பகுதி.
திரு. வி. கே. சுப்பிரமணியம்—களியாட்டப் பகுதி.
திருமதி. எவ். எவ். வீரசிங்கம்—வீட்டுவேலைப் பகுதி.
திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை—சித்திரப் பகுதி.

இவர்களைத் தவிர பொருட்காட்சிக்குழுவினரையும் அறிமுகப் படுத்திவிட்டால், என்தொல்லை தீர்ந்துவிடும்.

தலைவர்
திரு. ம. ஸ்ரீகாந்தா.
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

செயலாளர்
கலைப்புலவர் க. நவரத்தினம்

அமைப்புக்குழு அங்கத்தவர்கள்
திரு. ஏ. பெருமையினர்.
திரு. பி. நவரத்தினம்.
திரு. என். சிவஞானசுந்தரம்.
திரு. எஸ். பரம்தில்லைராஜா.
திரு. என். சிவஞானசுந்தரம் (காரியாதிகாரி, வலி, வடக்குப் பகுதி).
திரு. எஸ். யு. சோமசேகரம்.
ஆசிரிய மணி என். தம்பிரத்தினம்.
திரு. வி. என். செல்வரத்தினம்.
திரு. வி. கே. சுப்பிரமணியம்.
திருமதி. ம. ஸ்ரீகாந்தா.
திரு. ஏ. இராமநாதன்.
கலையரசு கே. சொர்ணலிங்கம்.
இராசவாசல் முதலியார் சி. தியாகராசா.
திரு. கே. பி. முத்தையா.
முகாந்திரம் இ. பி. இராசையா.
திரு. ஏ. ஏ. ஜோசேப்.

### கலைச் சங்கத்தின் நோக்கம்

" கலை, கைப்பணி வேலைகளில் ஈடுபட்டு உழைக்கும் தமிழ்க் கைவினைஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாகக் குடிசைக் கைத்தொழிற்றுறைகளில் தமக்கெனத் தனிமரபு ஒன்றினை ஏற்படுத்தி, அத்துறைகளில் மிக்க புகழ்படைத்திருந்தனர். இவர்கள் பலவேறு பிரிவினராக அமைந்து, தங்கள் தொழில்களை மிகத் திறமையுடனும் நிறைவுடனும் செய்து வருகின்றனர். இவர்களையும் இவர்களின் தொழில்களையும் ஆதரித்துக் காலத்திற்கேற்ற முறையில் இவர்களின் தொழில்களை விருத்தியடையச் செய்வது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த வழியாகும். இப்பணியைச் செய்வதே கலை, கலாச்சார

**சங்கத்தின்** முக்கிய நோக்கமாகும் " என்று தமது நோக்கத்தை இம்மலரில் வெளியிட்டுள்ளது மேற்குறித்த சங்கம். நோக்கம் நல்லதுதான். ஆனுல் இதுவரை எவ்வளவு தூரம் இத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது ஒரு பெரிய கேள்வி.

முதல் நாள் நடைபெற்ற திறப்புவிழாவுக்கு நாங்கள் சமுகமளிக்க முடியவில்லை. எனவே அந்த விஷயங்களை நாம் கேட்டறிந்தவாறு குறிப்பிடுகின்ருேம்.

கலை, கலாச்சாரப் பகுதியின் ஆதரவில் மேற்படி விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்றிலிலும் நகரசபை மண்டபத்திலும் ஆயிரக்கணக்கான இரசிகர்கள் முன்னிலையில் **திருமதி சுந்தரி நடேசபிள்ளை** அவர்களால் மாலை 4 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டது. அவ்வமயம் கலைகலாசாரப் பகுதி அதிபர் **திரு. என். கியூ டயஸ்** அவர்களும் குத்துவிளக்கேற்றி விழாவுக்கு ஆதரவளித்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த **திரு. ஜே. எம். சோமசுந்தரம்** அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தார்கள். சங்கிலித் தோப்பிலுள்ள வாசலைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய தாகக்காட்சி மண்டபத்தின் முகப்பு அமைந்திருந்தது. சித்திரக் காட்சிச் சாலையின் வாசலில் அழகிய நந்தியொன்று வைக்கப்பட்டிருந்தது. ஓவியம் தீட்டிய வாசல் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

கல்லூரி முன்றிலில் நடைபெற்ற விழாவுக்குத் தலைமை வகித்த யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ்ப்பாணக் கலை, கலாச்சார பரிபாலன சபைத் தலைவருமான **திரு. எம். ஸ்ரீகாந்தா** பேசியதாவது :—

யாழ்ப்பாணத்தில் கலைகள் எவ்வளவுதூரம் மேம்பாடடைந்திருக்கின்றனவென்பதை எடுத்துக் காட்டும் வகையில் இவ் விழா அமைந்துள்ளது. நமது மேம்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த ஆக்க முயற்சியில் ஒத்துழைத்தவர்களையெல்லாம் பாராட்ட வேண்டியவஞக இருக்கிறேன். நாம் கலைத்துறையில் மேலும் முன்னேறுவதற்குக் காட்சி புத்துணர்ச்சியைத் தூண்டும் என்பதற்கையமில்லை.

அவர் மேலும் பேசுகையில் முன்னுள் தபால், வானெலி அமைச்சர் திரு. சு. நடேசனின் பாரியாரான திருமதி சிவகாமசுந்தரி நடேசனை விழாவை ஆரம்பித்துவைக்கும்படி கேட்டுக்கொண்டு அங்கு சமுகமளித்திருந்த பிரமுகர்களையெல்லாம் வரவேற்ருர்.

### நோக்கம்

விழாவின் நோக்கத்தை மேற்படி சபையின் காரியதரிசியான கலைப்புலவர் **திரு. க. நவரத்தினம்** எடுத்துரைக்கையில் பின்கண்டவாறு சொன்னுர் :—

" இவ்விழாவை நடத்துவதன் நோக்கம் பணம்திரட்டுவதோ அன்றிக் களியாட்டங்களை நடத்துவதோ அல்லவென்பதை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்க கலாசார இலாகாவின் ஒத்துழைப்புடனும பண உதவியுடனும் நடைபெறும் இக் கலைகைப்பணி விழா இந்நாட்டு மக்களின் பொருளாதாரத்தை மேலும் வளம்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தைத் தேடித் தந்திருக்கிறது. அதாவது, பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உதவியாக இருக்கக்கூடிய கைத்தொழில்களெவை ? எந்தெந்தத் தொழில்கள் முன்னேற்ற மடைந்திருக்கின்றன ? என்பதை நாம் கண்டறிந்து ஆக்க முயற்சியில் ஈடுபடப்பெரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.




சிற்பக் காட்சியில் ஒரு பகுதி.

நம் நாட்டிலே கைத்தொழில்களில் வல்லுநர்கள் பலர் இருந்தும் ஆதரவளிப்பார் இன்மையால் அவர்களது திறமை யும் தொழில் வளர்ச்சியும் குன்றிக் கிடக்கின்றன. அவர்களை ஊக்குவித்து ஏற்றவகையிற் பயன்படுத்த எடுத்துக்கொண்ட இம்முயற்சிக்கு அரசாங்கம் பொருளுதவி புரிந்திருப்பதுபாராட் டுதற் குரியது.

திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் பேசிய தாவது :—

" மக்கட் பிறவியின் பெரும் பேறுகிய கலைச்செல்வம் மனித னுடன் கூடவே பிறந்தது. மனிதன் பிறக்கும் போதே கலை ஞனுகப் பிறந்திருக்கிருன். அதிலும் தமிழனுக்கும் கலைக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இதைச் சங்க இலக்கிய நூல் கள் நமக்குக் காட்டுகின்றன. நமது ஆலயங்களெல்லாம் கலைக் கூடங்களாக, ஓவியம், சிற்பம் ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்குகின்றன. இதற்குக் காரணம் தமிழனுக்குக் கலையின் மீதுள்ள ஈடுபாடும் பற்றுதலுமாகும்.

" தமிழன் வாழ்வில் அடிப்படையானதாக விளங்கும் கலைத் துறையைப் பொறுத்தவரை இந்நாட்டுக்கும் தாய்நாட்டுக்குமிடை யில் நான் வேறுபாடு எதனையும் காணவில்லை. இரு நாட்ட வரும் ஒருதாய் வயிற்றிற் பிறந்தவர்களே. ஒரு காலத்தில் அதாவது ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் காடாகக் கிடந்த இந்த நாடு பின் கலைச்சோலையாக—கலாசித்திரக்கூடமாக மாறிய



முதல் நாள் நடைபெற்ற பரதநாட்டியக் கச்சேரியில் சிகரம்போல் விளங்கியது செல்வி சியாமளா நடராஜாவின் நடனம்.

கலை விழாவில் இந்துமகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி குணேஸ்வரி தம்பையா அவர்கள் நடன விருந்தளித்தார்.



தென்றல் அதற்காக உழைத்தவர்கள் நம் முன்னேர் தான். இதை யாருமே ஆட்சேபிக்கமுடியாது. ஆனல் கலை வளம் மனதிற் படிந்திராவிட்டால் மனிதன் மனிதனுக வாழ முடி யாது என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். யாழ்ப் பாணத்தில் கலையையும் கைப்பணியையும் மேலோங்கச் செய் வதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கெல்லாம் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்திரக் காட்சிச் சாலையில் சித்திரம், சிற்பம் முதலியவற்றின் கலை நுணுக்க மேம்பாட்டை எடுத்துக் காட்டும் பல்வேறு வகை யான பொருட்கள் இடம் பெற்றிருந்தன. அதனைச் சிறப்புடன் அமைப்பதில் யாழ்ப்பாணப் பகுதிக் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் பெரு முயற்சியெடுத்திருந்தனர்.

கைப்பணிப் பகுதியில், மரவேலை, கைத்தறி ஆடைகள், மண்வேலை, உலோகப் பொருட்கள், பனம் பொருட்கள் முத லான பல்வேறு பிரிவுகளும் யாழ்ப்பாணத்தில் அவற்றின் வளர்ச்சியினது தரத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப் பட்டிருந்தன.

கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த திறந்த வெளி யரங்கில் முதனுளாகிய வியாழக்கிழமை பிற்பகல் நாதஸ்வர கச்சேரியுடன் கலா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அங்கு யாழ்ப் பாணத்திலுள்ள பல கிராம முன்னேற்றச் சங்கங்களாலும், சனசமூக நிலையங்களாலும் தயாரிக்கப்பட்ட காகம், காவடி, கோலாட்டம், யோகாசனம், சீனடி சிலம்படி, பாட்டு நடனம்,

நாடகம் முதலான கலாநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழரின் பூர்வீக கலைகளின் மறு மலர்ச்சியை எடுத்துக் காட்டக் கூடியவகையில் இந் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

அன்று மாலை நகர மண்டப அரங்கில் யாழ்ப்பாணம் கலை கைப்பணி அபிவிருத்திக் கழகத்தாரால் தயாரிக்கப்பட்ட நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இக்கலா நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டுகளிப்பதற்காக அன்று பிற்பகல் 4 மணியிலிருந்து இரவு 11 மணிவரை யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெருந் தொகையான மக்கள் வந்திருந்தார்கள்.

**இரண்டாம் நாள்**

கண்காட்சியை இரண்டாம் நாளன்று மாலை வடபகுதி கல்வி அதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் திறந்து வைத்தார். விழாத் தலைவர் திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் காட்சியைத் திறந்துவைக்கும் வைபவம் நடைபெற்றது.

திரு. எஸ். யு. சோமசேகரம் அதனை ஆரம்பித்து வைத்துப் பேசியதாவது :—

இவ்விழாவை இன்று கல்வி இலாகா டைரக்டர். எஸ். எவ். டி. சில்வா திறந்துவைக்க விருந்தார். திடீர் வசதியீனம் காரணமாக அவர் யாழ்ப்பாணம் வரமுடியாதுபோகவே என்னைக் கலந்துகொள்ளும் பொருட்டு கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் எவ்வளவுதூரம் திறமையாக வேலை செய்கின்றன வென்பது கல்வி அதிபருக்கு நன்குதெரியும்.

பள்ளிக்கூடங்களின் பூரண ஒத்துழைப்பு இவ்விழாவுக்குக் கிடைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். பொருளாதாரகலாச்சாரத் துறையில் நாம் இன்னும் எவ்வளவு தூரம் முன்னேற வேணுமென்பதை இவ்விழாமூலம் அறியச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மேலும் அவற்றை வளர்ப்பதற்கான மார்க்கங்களை ஆராய்வோம்.

யாழ்ப்பாணத்தின் கலாசாரம் வட, தென் இந்தியா கலாசாரங்களுடன் சேர்ந்து வளர்கிறதென்பது அவர் கருத்தாகும்.


எதிர்கால நிலை எத்தகைய தென்பதை நீங்கள் அறிவீர்கள். அந்நிலையை மாற்றியமைப்பதில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் முக்கிய பங்குண்டு. நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தால்தான் கலை வளரும். கலையைத் தர்மவழியில் வளர்க்க வேண்டும். அப்போதுதான் நாட்டின் புகழ்பரவும். இதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து ஈடுபடுவீர்களென நம்புகிறேன்.

விழாச் செயலாளரான கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் நன்றிதெரிவித்துப் பேசுகையில் இம்மாதிரி நாம் தொடர்ந்து கவனம் செலுத்துவோமேயானால் இன்னும் 5 வருடத்தில் யாழ்ப்பாணம் கலை, கைப்பணித்துறையில் மிகமேலோங்கிவிடுமென்றார்.

பின்னர் திறந்த வெளி அரங்கில் திருநாவுக்கரசு கோஷ்டியாரின் நாதஸ்வரக் கச்சேரியுடன் கலாநிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அதனையடுத்து கி. மு. சங்கங்களினதும், சனசமூக நிலையங்களினதும் கதம்ப நிகழ்ச்சிகள் நடந்தன. அன்றிரவு அதே மேடையில் அச்சுவேலி முத்தமிழ் முன்னணிக் கழகத்தாரால் "கலைவாணி" என்ற சமூகநாடகம் நடத்தப்பட்டது.

கடைசி நாளாகிய சனிக்கிழமை இரவு பொருட்காட்சி மண்டபத்துக்குட் சென்றதும் எவற்றைப் படம்பிடிப்பது என்பது பெரிய பிரச்னையாகிவிட்டது. நம்படப்பிடிப்பாளர் திரு. விக்டர் சுமதி.

கலைவிழாவைக் கண்டுகளித்த ஆயிரக்கணக்கான ரசிகர்களில் ஒரு பகுதி. மத்தியில் வீற்றிருப்பவர் வடமாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீ காந்தா. கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம், டிஸ்திறிக் நீதிபதி திரு. தம்பித்துரை, முன்னை நாள் கணக்குப் பரிசோதனை அதிபர் திரு. க. கனகரத்தினம், ஸ்ரீமதி மகேஸ்வரி ஸ்ரீகாந்தா முதலியோரும் காணப்படுகின்றனர்.




பால அவர்களுக்கு. ஆனுல் அந்தக் கஷ்டத்தை திரு. சுமதிபாலாவுக்குத் தோற்றமளவில் தம்பிபோலக் காணப்பட்ட இளைஞர் சிரித்துக்கொண்டு எங்களிடம் வந்து தீர்த்து வைத்தார். கட்டிவைத்துத் தீன் கொடுத்து வளர்க்கப்பட்ட இளங்காளைபோலச் செல்லமாக வளர்க்கப்பட்ட உடம்புடன் இவர் காணப்பட்டார். வயது ரொம்பக் குறைவாகத் தான் இருக்க வேண்டும். கச்சேரியில் வேலை செய்கிற உத்தியோகத்தர் என அறியலானேம். இந்த சிவராசா இல்லாமல் யாழ்ப்பாணத்திலே எந்த விழாவும் பூர்த்தியாகமாட்டாதாம். அது உண்மையென்பதைப் பின்னர் அறிந்தோம். சாப்பாட்டு விஷயத்தில் அவர் தம்மைக் கவனிப்பது போலவே சிநேகிதரையும் கவனித்துக் கொள்வார் அன்பர் சிவராசா. எங்கட்குத் தாகம் அதிகமிருந்தது. ஏதாவது பருகினுல் நல்லதென எண்ணினேம். சிறிது நேரத்துக்குள் சோடாப் போத்தல்களுடன் வந்து சேர்ந்தார் சிவராசா. அவருடைய உதவியால் தாகந் தீர்த்துக்கொண்டு தேவையான படங்களையும் எடுத்துக் கொண்டோம். ஆனுல் எனக்கு ஒரு பெரிய பிரச்னை ஏற்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு வந்த சிங்கள நண்பர்களுக்கு யாழ்ப்பாணத்தை என்றும் நினைவூட்டக்கூடிய ஏதாவது சாமான் வாங்கிக் கொடுக்கவேண்டுமேயென்று நினைத்து காட்சி மண்டபத்தைச் சுற்றித் திரிந்தேன். பனையோலைப்பெட்டி அல்லது விசிறியைக் கொடுக்கலாம் என்ருல் அது நெடுங்காலம் பேணிவைத்திருக்கக்கூடிய பொருளல்ல. வேறு நீர்வேலிகாமாட்சி நிலையத்தில் ஏதாவது இரும்புப் பொருள்வாங்கிக் கொடுக்கலாம் என்ருல் அதுவும் கொழும்பில் வாங்க முடியாத சாமான் அப்படிப் பிரமாதமாக என்னதான் அங்கேயிருக்கிறது. சரி, ஏதாவது சாப்பாட்டுச் சாமான் வாங்கிக் கொடுக்கலாம் என்ருல் அதுவும் சிறிது கஷ்டமாகவேயிருந்தது.

கொஞ்சம் பனங்கட்டிக் குட்டானும் புழுக் கொடியலும் வாங்கிக் கொண்டு, ஒரு இருத்தல் பொலிகண்டிச் சீனியும் வாங்கிச் சிங்கள நண்பர்களுக்குக் கொடுத்தேன். பொலிகண்டிச் சீனி சாதாரணச் சீனியிலும் இனிப்புள்ளதாக இருக்கிறதென்ருர் படப் பிடிப்பாளர் சுமதிபாலா. இது எங்கே செய்யப்படுகிறது. எவ்வாறு செய்யப்படுகிறது. என்று என்னைக் கேட்டார். எனக்கு ஒன்றுமே தெரியாதென்று கையை விரித்தேன். ஆமாம் பொலிகண்டிச் சீனியைப்பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழருக்கே சரியாகத் தெரியாது. அப்படியானுல் கொழும்பிலிருந்து வந்த தமிழருக்கு எப்படித் தெரியும். இதைப்பற்றி அடுத்த இதழில் கவனிப்போம்.

"நகர மண்டபத்தில் நடனம் நாடகம் முதலியன நடைபெறுகின்றன. அங்கேயும் சில படங்கள் எடுக்கவேணும் வாருங்கள் போகலாம்" என்ருர் நண்பர் சிவப்பிரகாசம். அவருக்குப் பின்னுலே கிளம்பினேம். படம் பிடிக்கும் "கமிரா"வைக் கண்டதும் எங்கள் எல்லாருக்கும் பெரிய "நடப்பு" நடந்தது. உள்வீட்டுப்பிள்ளைகள் போல மேடையிலே பின்புறம் சென்றுவிட்டோம். அங்கிருந்து மேடையில் நடக்கும் சில பிரதான நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்க முயன்ருர் திரு. சுமதிபாலா. சிறிது நேரத்துக்குள் அவருடன் அங்கிருந்த தாய்மாரும் ஆசிரியைகளும் ஆசிரியர்களும் நெருங்கிப் பழகியவர்கள்போல நடக்கத் தொடங்கிவிட்டார்கள். "என்னுடைய மகள் அடுத்த நிகழ்ச்சியில் பங்குபற்றுகிருள். அதையும் படம் பிடியுங்கள்" என்று எல்லாரும் சுமதிபாலாவை முற்றுகை போடத் தொடங்கிவிட்டார்கள். இப்படிப்பல மேடைகளைக் கண்டு புத்தியாக நழுவிக் கொள்ளும் அவர் சில படங்களை எடுத்துக்கொண்டு கிளம்பத்

(42 ம் பக்கம் பார்க்க)



கலைவிழாவில் மயூர நடனம் ஆடிக் காண்பிக்கிருர் செல்வன் மனேகரன் சரவணமுத்து.

# உருளைக்கிழங்குச் செய்கை அபிவிருத்தியடைதலில் நம்பிக்கை

உள்ளூர் உருளைக் கிழங்கின் பிரக்கியாது இன்று இந்நாடெங்கும் பரவிவருகின்றது. இன்று மனதைக் கவரும் உள்ளூர் உருளைக் கிழங்கானது சென்ற கால போகத்தில் இரங்கலை உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம், போபத்தலாவாப் பாற்பண்ணை, பிந்துநுவாவா கமத்தொழில் நிலையம், நுவரெலியா ராணி மாளிகை, அம்ப வலைப் பாற்பண்ணை ஆகிய இடங்களில் உண்டு பண்ணப்பட்டவையேயாகும்.

உருளைக் கிழங்கில் இலங்கைக்குத் தேவையான அளவில் ஒரு பாகத்தையாவது உள்ளூரில் உற்பத்தி செய்தற்கேற்ற நடவடிக்கைகள் கௌரவ கமத்தொழில் உணவு அமைச்சரின் ஏவற்பிரகாரம் கைக் கொள்ளப்பட்டன. உருளைக் கிழங்கு ஆராய்ச்சிக் குழுவின் கட்டளைப்படி, கமத்தொழிற் பகுதியைச் சார்ந்த சில பேரறிஞரைக்கொண்டுள்ள கோஷ்டி ஒன்றினுல் ஆரம்பப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. இவற்ருல் பெற்றுக்கொண்டுள்ள் விளைவுகள் நம்பிக்கையூட்டுவனவாயிருக்கின்றன. சென்ற போகத்தில் 7 ஏக்கரில் இரங்கலையில் உருளைக்கிழங்கு உண்டுபண்ணப் பட்டது. இதில் 3 ஏக்கரில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. விதையளவிலும் 14 மடங்கு அதிகப்படியான விளைவு கிடைத்தது. இதனுல், ஓர் ஏக்கருக்கு ரூபா 3,000 வீதம் லாபம் உண்டாயிற்று. மற்றைய நிலையங்களிலும், முக்கியமாக போபத்தலாவையிலும் கிடைத்த விளைச்சல் வீதங்கள் மதிப்புக்குரியனவாகும். ஆகவே, போபத்தலாவைச் சுற்றுப்புறத்திலுள்ள பற்ருத்தரையில் உருளைக்கிழங்குச் செய்கை சாத்தியப்படக்கூடும். இது ஆராய்தற்குரியது.

பரீட்சைகளுக்கான விதைக் கிழங்கு ஐக்கிய ராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. குறித்த ராச்சிய நாட்டில் சிறந்து விளங்கும் கிறேட் ஸ்கொட், அப்ருடேட், டியூக் ஒவ் யோக், எப்பிக்கூரி ஆகிய இனங்களைக் கொண்டுள்ள 12 தொன் விதைக் கிழங்கு வருவிக்கப்பட்டது. மேற்குறித்த பரீட்சைகளில் ஐக்கிய அமெரிக்கா, ஒல்லாந்து, அயர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட சிறு தொகைக்கிழங்கும் இடம் பெற்றுள்ளது.

சென்ற போகப் பரீட்சைகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட பேரறிஞர்கள் பல தீர்மானங்களை வெளியிட்டிருக்கின்றனர். அடுத்த போகத்தில் நடாத்தப்படவிருக்கும் பரீட்சைகளின் முடிவுகளைக் கொண்டு குறித்த தீர்மானங்களை அவர்கள் உறுதிப்படுத்தலாமென நம்புகின்றனர். குறித்த பேரறிஞர்கள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்கள் :— 3 மாதங்களில் விளைவுறும் அபிருடேட் இனம் சிறந்தது. இது ஏக்கருக்கு 13—14 தொன் வீதம் விளைகின்றது : சிறு கிழங்குகள்— $1\frac{1}{4}$—$1\frac{1}{4}$ அங்குலத்தின்—பொருளாக்கத்துக்கேற்ற விதைகள். வரிசையில் 8 அங்குலங்களுக்கொவ்வொன்ருக நாட்டுதல் உத்தமம். அங்கசுப்பூஞ்சண நாசினிகளினுல் பிற்கூற்று எரிவந்தத்தை சிக்கனமாகவும் சித்திகரமாகவும் பரவவிடாது தடுக்கலாம். ஓர் ஏக்கருக்கு100 இருத்தல் காலகம், 200 இருத்தல் ஒளிரி அமிலம், 100 இருத்தல் சாம்பரம் வீதம் அளிக்கக்கூடிய பசளைக் கலவையால் உருளைக்கிழங்குப்பயிர் பூரண பயனை அளிக்கும். சில சமயங்களில் பெருஞ் சேதம் விளைக்கும் டொறிலஸ் எறும்பை உள்ளூரில் வசதிப்படும் பலவகைப்பட்ட பூச்சிநாசினிகளால் அழிக்கலாம்.

உருளைக்கிழங்குச் செய்கையின் பல துறைகளையும் அடுத்த போகத்தில் தீவிரமாக ஆராய முயற்சி செய்யப்படும். அப்போது, ரூஷியா, யப்பான், டென்மாக், கனடா, ஆஜன்ரீனு ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள விதைக் கிழங்குகளின் விளைச்சலையும் அறிந்துகொள்ளவிருக்கின்றனர் பேரறிஞர்.

இரங்கலையில் 4 ஏக்கர்த் தரையில் இனப்பெருக்கத்துக்காக உருளைக்கிழங்கு உண்டுபண்ணப்பட்டபோது உற்பத்திச் செலவு ரூபா 2,500 ஆக மதிக்கப்பட்டது. விதைக்கிழங்கின் விலையும் சகல செய்கைச் செலவுகளும் மேற்படி தொகையில் அடங்கியுள்ளன. விதைக்கிழங்கின் விலை இருத்தல் 46 சதம். விளைந்த கிழங்கு முழுமையும் இருத்தல் 30 சதப்படி விற்பனை இலாகாவுக்கு விற்கப்பட்டது. ஓர் ஏக்கருக்கு 3,000 ரூபா வீதம் லாபம் கிடைத்தது.

---

## ஊரதீவு சனசமூக நிலைய வருடாந்த விழா

ஷெ விழா 1957 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்குப் புங்குடுதீவு கிராமச் சங்கத் தலைவர் பண்டித வீ. வ. நல்லதம்பி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. விளையாட்டுப் போட்டிகள் ஊரதீவு நேருஜி விளையாட்டுத்திடலில் நடைபெற்றன. சிவப்பு இல்லமும் பச்சை இல்லமும் விளையாட்டுகளில் கலந்து கொண்டன. திரு. க. தியாகராசா ஆசிரியர், வை. பொன்னுத்துரை ஆசிரியர், அ. உலகநாதன் (புதிய கி. ச. அங்கத்தவர் கோப்பாய்) த. துரைசிங்கம், இ. வைத்தியலிங்கம் ஆகியோர் மத்தியட்சர்களாகக் கடமை புரிந்தனர்.

அதன் பின்னர் பேச்சுச் சங்கீதப் போட்டிகளும் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குத்தீவுப்பகுதி நீர்ப்பாசன ஓவசியர் இ. வைத்தியலிங்கம் இவர்கள் பரிசில் வழங்கினுர். போட்டியில் முதலிடம் பெற்ற பச்சை இல்லத்திற்கு யாழ்ப்பாண வர்த்தகர் எஸ். சின்னத்துரை அவர்களின் வெற்றிக் கிண்ணம் அளிக்கப்பட்டது.

விழாவில் பலர் சொற்பொழிவாற்றினுர்கள். நிலைய நிர்வாகிகள் ஆண்டு அறிக்கைகள் வாசித்தளித்தனர். சனசமூக நிலையப் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள் :—

1. வடபகுதி உள்ளூர் ஆட்சி உதவி அதிபர்.
2. கேட் முதலியார் சி. தியாகராசா.
3. கிராமச் சங்கத்தலைவர் புங்குடுதீவு.
4. பண்டித வீ. வ. நல்லதம்பி ஆசிரியர்.
5. கா. இ. வைத்தியலிங்கம் நீர்ப்பாசன ஓவசியர்.

தலைவர் :—பொன். சபாரத்தினம்.

உப-தலைவர்கள் :—திரு. இ. தம்பியையா
திரு. வே. சுப்பிரமணியம் எஸ். பி. எம்.

கௌரவ காரியதரிசி :—வரதீவு வை. சின்னத்துரை.

உப-கௌரவகாரியதரிசி :—ம. பாலசிங்கம்.

தனுதிகாரி :—திரு. க. பொன்னம்பலம்.

5 பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டமுடிவில் ஊரதீவு சனசமூக நிலைய வாலிபமுன்னணியால் "விதியின் விளையாட்டு" என்னும் சமூகநாடகம் நாடாத்தப்பட்டது.

பௌத்தப் பெரியார் வரலாறு

# ஸ்ரீ சங்கபோதி

நுகேகொடை த. பாலசுப்பிரமணியம்

(விசாகத்தன்று ஒலிபரப்பப்பெற்றது)

இயற்கை எழில் மிகுந்த ஈழவள நாட்டை ஆண்ட முடியுடை வேந்தர் அநேகர். முடி ஆட்சி முற்றுற்று, குடி ஆட்சி துலங்கும் இவ்வேளையில், "அஹிம்ஸா பரமோதர்மம்". என்னும் அருந்தத்வத்தைக் கடைப்பிடித்து, அகண்ட இந்தியாவை ஒரு குடைக்கீழ் வைத்துலகாண்ட கலிங்கத்து வெற்றிவீரன் அசோக சக்கரவர்த்தி காலத்தில், அவரது ஆதரவில் பாடலி புரத்திலே, முகலபுத்த தீசன் என்னும் பிரக்யாதி வாய்ந்த பௌத்த சந்நியாசியின் தலைமையிற் கூடி, ஒன்பது திங்களாகத் தொடர்ந்து நடந்த மூன்ருவது பௌத்த மாநாட்டின் தீர்மானத்துக்கமைய, பௌத்த தருமத்தைப் பாரெலாம் பரப்ப பல பிக்குகள் பல திக்குகளும் செல்ல வேண்டுமென்னும் முடிவுக்கிணங்க, அறநெறி பூண்ட அரசிளங்குமரன் மகிந்தன் என்னும் மகேந்திரர் மூலம் இலங்கையிற் பரம்பிய பௌத்த தர்ம பரம்பரை விளக்க, இத்தீவை அரசாண்டு, பின் துறவு பூண்டு, அதனுல் பிரசித்தி பெற்ற ஈழத்தரசருகளிலொருவனுன ஸ்ரீசங்கபோதி இராசனையிட்டு, சம்புத்த ஜயந்தியின் சம்பூரணத் திருநாளாகிய இன்று, சிறிது மனத்திற் கொள்வது சாலவும் பொருந்தும்.

அரசகுடும்பத்தைச் சேர்ந்த இலம்பக் கண்ணகுலவழித் தோன்றல் சங்கபோதி. அபயசில அரசகுமாரனுக்கும், குமாரி தேவிகாவுக்கும் சற்புத்திரனுய்ப்பிறந்து காளைப்பருவமடைந்து மகியங்கனையில் வாழும் நாட்களில், அநுராதபுரத்தில் அரசாண்டிருந்த இரண்டாவது விஜயனின் அழைப்புக் கிணங்க, இராசதானி சென்று, இராசசேவையில் ஈடுபட்டு சீரும் சிறப்பும் தயாளகுணமும், தருமசிந்தனையும் நிரம்பியவராக விளங்கி, நகரமாந்தரின் மதிப்புக்குரியவராய் திகழ்ந்தார் சங்க போதி. அதே வம்சத்தைத் சேர்ந்தவர்களும், சங்க போதியின் சகாக்களுமான சங்கத்தீசனும், கோதா அபயனும் தொடர்பு கொண்டு நடத்திய சதித்திட்டத்தின் விளைவாய் விஜயன் என்னும் விஜயகுமாரன் அல்லது விஜயேந்திரன் கொலையுண்டு இறக்க, சங்கத்தீசன் அரியாசனம் அமர்ந்தான்.

மனித வாழ்க்கை நிலையற்றது. அது துன்பத்திணுல் சூழப் பட்டது எனத் தெரிந்து துன்ப வாழ்க்கையிலிருந்து நீங்கி, நிலைத்த இன்பநெறி கண்டு உலகத்தாரை உய்விக்க உன்னி, போதிமரத்தின் அடியில் அமர்ந்து, தியானத்தில் ஆழ்ந்து, தனது முப்பத்தைந்தாவது வயதில் மெய்ஞான ஒளிகண்ட சித்தார்த்தர் புத்தராகி, ஞானமாகிய போதிலைகவரப் பெற்று, பிறவித் துன்பத்தைக் கடந்து, பிறவாமையாகிய இன்ப மார்க்கம் தெரிந்து,

"நான் பெற்ற இன்பம்

பெருக இவ் வையகம்" எனும் வாக்குக்கிணங்க நாற்பத்தைந்து ஆண்டுகள் நாடெங்கும் சென்று ஓயாது பிரசாரம் செய்து, இறுதியில் பரி நிர்வாண மோட்சம் அடைந்த புத்த பகவான் போதித்த பஞ்ச சீலத்தின் முதலாவது நெறியாகிய கொல்லாவிரத்தை அநுட்டிப்பதில் சிறந்து விளங்கியவர் ஈழநாட்டு பௌத்த மன்னர்களே என்பது சரித்திரச் சான்று. சமயாபிமானமும், தியாக வாழ்வும் தமது இலட்சியமாகக் கொண்ட பௌத்த அரசர்கள் ஈழத்தில் இருந்தே வந்தார்கள்.

ஜம்புப் பழங்கள் உண்பதில் அதிகம் ஆசை கொண்ட சங்கத்தீசன், ஜம்புப் பழங்கள் அதிகம் கிடைக்கும் பாசி நதித்தீவுக்கு அடிக்கடி வந்து போவதை விரும்பாத அவ்வூர் மக்கள், நஞ்சிட்ட கனிகளை அவனுக்குக் கொடுத்துதவ அவன் அவற்றை உண்டு இறந்ததிணுல் பிரதம தளபதியாகப் பதவி வகித்த சங்கபோதி சங்கத்தீசனுக்குப்பின் நாட்டு மன்னனுகப் பிரகடனம் செய்யப்பட்டார். இயல்பாகவே அரண்மனை வாழ்வையும் அரசபோகத்தையும் வெறுத்து, எளிய சன்மார்க்க வாழ்க்கையையே கைக்கொள்ள மனந்துடிக்கும் சங்கபோதி, மணி மகுடஞ் சூடி, அரி யணை அமர்ந்து, செங்கோல் தாங்கி, இராச்சிய பரிபாலனம் செய்ய எள்ளளவும் விரும்பினுரில்லை. தெய்வத்தியானத்திலும், பௌத்த தரும பரிபாலனத்திலும் தனது வாழ் நாளைக் கழிக்க விரும்பி, மகுடம் தரிக்க மறுத்தபோதிலும், பௌத்த சந்நியாசிகளின் ஏகோபித்த வேண்டுகோளை மறுக்க அறியாத நிலையில், சங்கபோதி ஈழத்து வேந்தனுக முடி சூட விதிவகை செய்தது. இச்சந்தர்ப்பத்தில் நீதி அமைச்சனுய்ப் பதவி வகித்த கோதா அபயன் ஸ்ரீசங்கபோதி மன்னனுக்குப் பட்டாபிஷேகம் செய்து அபான அநுராத புரியில் அரி ஆசனத்தில் அமர்த்திணுன்.

**குடிபடையிலபிமான மந்திராலோசனை**
**குறிப்பறிதல் சத்ய வசனங்**
**கொடை நித்த மவரவர்க் கேற்ற மரியாதை பொறை**
**கோடாத சத்துருபாயம்**
**படி விசாரணை யொடு பிரதானி தளகர்த்தரைப்**
**பண்பறிந்தே யமைத்தல்**
**பல்லுயி ரெலாந் தன்னுயிர்க்கு நிகரென்றே**
**பரித்தல் குற்றங்கள் களைதல்**
**துடிபெறு தமக்குறுதியான நட்பகமின்மை**
**சுகுணமொடு கல்வியறிவு**
**தோலாத காலமிடமறிதல் வினைவலிகண்டு**
**துட்ட நிக்கிரக சௌரியம்**
**வடிவு பெறு செங்கோல் நடத்தி**

இராச்சிய பரிபாலனம் செய்ய அதிகம் விரும்பிய போதும், பௌத்த தரும பரிபாலனத்திலேயே சிந்தனை மிகுந்தமையால் இராச்சியபாரத்தைச் சரிவரச் சுமக்கும் சக்தியை ஸ்ரீசங்கபோதி சிறிது இழக்க வேண்டியதாயிற்று.

ஆயினும், அன்பின் அடிப்படையில் அகிலத்தைமீட்க அவதரித்த அஹிம்சாமூர்த்தி சித்தார்த்தர் உபதேச மந்திரத்திற்கமைய, உயிர்க்கொலை, பிறர் பொருள் வாஞ்சை, வியபிசாரம், பொய், மதுபானம் முதலான பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்து வாழ்ந்து, குடிகளுக்குச் சேமமுண்டாகும்படி முறை பிசகாது செங்கோல் செலுத்தி, மக்களிடத்தில் கடுஞ்சொற் சொல்லாமலும், கடுந் தண்டம் விதியாமலும், அவரவர் தாரதம்மியம் அறிந்து, பட்ச பாதமில்லாமல், கருணை கலந்த நீதிபரிபாலனம் செய்து வந்தமையால் ஸ்ரீசங்கபோதி மக்களின் கண்கண்ட தெய்வமாக மதிக்கப்பட்டு வந்தார்.

ஸ்ரீசங்கபோதி இராசன் அரியாசனம் ஏறிய சிறிது காலத்தின் பின் பருவமழை பெய்யாது, நாடு வரட்சி கண்டது. பஞ்சமும்

பிணியும் சேர்ந்து மக்களை வருத்துமே எனக்கலங்கிய அரசன், மகாதூபியான "உறுவன்வெலி" தாதுகோபத்தைச் சுற்றியுள்ள முற்றத்தில் குப்புற விழுந்து "நாடெங்கணும் மழை சீராய்ப் பெய்து, அதனால் ஏற்படும் வெள்ளத்தில் யான் மிதந்தால் அன்றி, யான் இறக்க நேரிடினும் இங்கிருந்து எழுந்திரேன்" எனத் திடசங்கற்பம் செய்து தரையில் வீழ்ந்து தியானத்தி லிருக்க, சடுதியாக எங்கிருந்தோவந்து மழை சோனுமாரியாகப் பெய்தது. வெள்ளம் கரை புரண்டோடிற்று. நாடு நகரம் முழுவதும் மக்கள் மகிழ்வுற்று மன்னனை மனமார வாழ்த்தினர். மன்னன் குப்புற வீழ்ந்து கிடந்த முற்றத்தில் நீர் ஆறுய்ப் பெருகியபோதும், ஸ்ரீ சங்கபோதி அசைந்து கொடுக்கவில்லை. இதைக்கண்ட அவரது மந்திரி பிரதானிகள், அம் முற்றத்தினின்றும் ஓடும் நீரை வெளிப்போகாது தடுத்து முற்றத்தில் தேக்க, நீர் நிறைந்து, அரசனை மிதத்திற்று. தியானம் நீங்கிய வேந்தனும், தெய்வானுக்கிரகத்தை வியந்து மனம் மகிழ்ந்து அரண்மனை சென்றான்.

சீவகாருண்ய சிந்தையும், கொல்லா விரதமும் பூண்டவராகை யால் நாட்டிற் கலகம் விளைவித்த சில புரட்சிக்காரர்களை உயிருடன் நெருப்பில் போட்டு பொசுக்கிக் கொல்லுமாறு தண்டனை விதித்திருந்த பொழுது, யாருமறியாமல் அவர்களை விடுதலை செய்து விட்டு, இறந்தவர்களின் சடலங்களைக் கொண்டுவரச்செய்து, புரட்சிக்காரர்களை உயிருடன் நெருப்பில் போட்டு தகனம் செய்ததாக மக்கள் நம்பி அஞ்சுமாறு, அவற்றைத் தகனம் செய்வித்து வந்தார்.

இதனால் கலகம் சிறிது அடங்கிய போதும், நாட்டை வேறொரு ஆபத்து எதிர் நோக்கியது. நாட்டு மக்கள் என்றும் கண்டும் கேட்டு மறியாத ஒருவகைச் சுரத்தால் பீடிக்கப்பட்டு, நூற்றுக் கணக்காய் இறந்தனர். நோயின் அறிகுறியாக பிணியாளர் கண்கள் கொவ்வைப் பழம் போல் சிவந்து, அனல் கக்கிறதாகவும், உயிர்ப் பலிவாங்கும் "ரத்தக்கு" என்ற துட்ட பூதத்தின் செய்கை இதுவென்றும் அறிந்து அரசன் உயிர்ப்பலி கொடுப்பதற்குப் பதில், சாதாரண உணவுப் பலிகொடுக்குமாறு, நாடெங்கணும் பறை சாற்றுவித்து, ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வீட்டிலும் பூத சாந்தி செய்யுமாறு கட்டளை இட்டான். இத்துடன் பிணிப்பயமும் அகன்றது. அன்று தேவதைகளைச் சாந்தி செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட பலிஉதவும் பழக்கம் ஈழத்துப் பௌத்தர்களிடையே ஒரு வழக்கமாகி இன்றும் அநுட்டிக்கப்பட்டு வருகிறது கண்கூடு.

இது இவ்வாறாக, நிதி அமைச்சனுகப் பணிபுரியும் கோதா அபயன் வாளாவிருக்கவில்லை. தான் அரசைக் கைப்பற்றும் சூழ்ச்சிகளில் இறங்கினுன். பலவருடங்களுக்கு முன் தானும் சகாக்களான சங்கத்தீசனும், சங்கபோதியும், மகியங்கனையிலிருந்து விஜயேந்திரன் அழைப்பிற்கிணங்க இராசதானியை நோக்கிவரும் காலை, திசவைக்குளத்தருகில் தென்பட்ட கண்ணிழந்த கபோதி சொன்ன வார்த்தைகளை நினைவிற் கொண்டான். "மணிமகுடம் பூண்டு மாநிலம் ஆளும் மன்னர்களாவர் இம் மூவரும். கடைசியில் செல்பவனின் ஆட்சிதான் அதிகம் நிலைக்கும்" என்ற தீர்க்க தரிசனமான வாக்கை எவ்விதம் தான் மறக்கமுடியும். தற்செயலாக சங்கத்தீசனே, சங்கபோதியோ இதைக் கேட்கவில்லை. இருவருக்கும் பின்னல் சென்ற கோதா அபயன் கேட்டு, மகிழ்வுற்று, ஆங்காலம் எதிர் நோக்கியிருந்தான். அன்று மனத்தில் ஊன்றிய விஷவித்து, ஆசை என்னும் பயிர், காலப் போக்கில் விஷவிருட்சமாக வளர்ந்து, பூத்துக் காய்த்து கனியும் காலமும் அணமியது.

"ஸ்ரீசங்கபோதி மன்னன் அரி அணையில் தூங்குகிறன், அவன் அரசர்க்குரிய கடமையை நிறைவேற்றுவதில்லை. அரசுக்குரிய பொறுப்பில்லை, புஜபல பராக்கிரமமில்லை, காவற்பலமில்லை, விவேகப் பலமில்லை சலியாத மனேபலமில்லை, வாக்குப் பலமில்லை" எனப் பொய்ப் பிரசாரம் செய்து, நாட்டு மக்களை விழிப்படையச் செய்து, பாமர மக்களை ஏமாற்றி, வீறிட்டுக் கிளம்பும் மக்கள் முன்னணி உதவிகொண்டு, ஒரு சிறு சேனையுடன் நகரின் வடபுறவாயிலைச் கோதா அபயன் அணுகினுன். கோதா அபயன் கலகப்படையினருக்குத்தலைமை தாங்கித் தலைநகரை நோக்கி வருகிறான் என்பதைத் கேள்வியுற்ற ஸ்ரீசங்கபோதி, தன் பொருட்டு நகரமாந்தர் மாண்டு மடிவதை விரும்பாது, கோதா அபயனே நாட்டுக் கதிபதியாய் மகுடம் சூடட்டும் என உள்ளூற நினைந்து, மகிழ்வுடன் சிம்மாசனத்தைத் துறந்து, ஏகாங்கியாய், கையில் ஓர் நீர்க்கலயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு தென்புறவாயிலால் நகரை எவரும் அறியாமல் நீங்கி, காடு சென்று மறைந்தார். தான் எதிர்பார்த்த வண்ணமே எதுவித எதிர்ப்பு மின்றி நகருள் புகுந்து கோதா அபயன் இலகுவில் செங்கோலைக் கைப்பற்றி, அரி அணை அமர்ந்தான். தனது துரோகத்தின் தன்மையையும், ஸ்ரீ சங்கபோதியின் உள்ளத்தூய்மையும், அவருக்கு நாட்டில் இருக்கும், மறைக்கவோ மறுக்கவோ முடியாத மதிப்பையும் அறிந்த கோதா அபயன் தற்செயலாக மன்னன் ஸ்ரீசங்கபோதி மீண்டால் தன் உயிருக்கேஆபத்தாகும் எனப் பீதியடைந்து, நாட்டைத் துறந்து மறைந்து சென்ற மன்னன் சிரசைக்கொண்டு வருபவர்களுக்கு சிறந்த பரிசு அளிக்கப்படும் என முரசறைவித்தான். மறைந்தோடிய மன்னன் சிரம் இதுதான் என வேறு ஆட்களின் தலையை இரக்கமின்றிக் கொய்து இராசதானி சென்று பரிசில் கேட்ட பேராசை கொண்ட ஏமாற்றுக் காரர்கள் பலர் தங்கள் சிரங்களை இழந்தனர். இது இவ்வாறாக உண்மையான சங்கபோதியின் தலையை எதிர்பார்த்திருந்தான் கோதா அபயன்.

இதற் கிடையில் அநுராதபுரி நகர எல்லையைக் கடந்து காட்டு வழி சென்ற ஸ்ரீசங்கபோதி, கொழும்பில் இருந்து ஏறக்குறைய 28 மைல்களுக்கப்பால் உள்ள அத்தனகல்லை என்னும் ஊரை அடைந்தார். பாறைகளின் மத்தியில், இருபெரும் பாறைகளால் மறைக்கப்பட்ட ஒரு ஒதுக்கிடத்தை நாடி அதையே தனது ஆச்சிரமமாக அமைத்து, அங்கு தங்கி, பசிவந்தபோது ஏதோ கிடைத்ததைப் புசித்து, தியானத்தில் அமர்ந்து,

**உம்பர் வாழுலகம் வேண்டார் உலகரசாட்சி வேண்டார்**
**பொன்புனை மகளிர் வேண்டார் புண்ணியபாவம் வேண்டார்**
**இன்பொடு துன்பு வேண்டார் இறப்பொடு பிறப்புவேண்டார்**
**ஐம்புலப் பகையை வேண்டார் அறிவினை அறிந்த மேலோர்**

என்றவாறு துறவு வாழ்க்கையைக் கைக் கொண்டார்.

தொழிலுக்கு வகை இல்லாமல் வீட்டிற்குப்பாரமாயிருப்பதைக் கண்ட மனையாளின் நச்சரிப்புக்கு அடிபணிந்து, அவள் மனமிரங்கிக் காலையிற் கட்டிக் கொடுத்த கட்டுச் சாதப் பொட்டணி தோளிற் தூங்க, வெளிக் கிளம்பிய ஒரு குடியானவன், வழிதப்பிச் செல்கையில் பாறைகளின் ஒதுக்கலில் அமர்ந்து தன்னை மறந்து தியானத்தில் இருக்கும் ஸ்ரீசங்கபோதியைக் கண்டு அவரையாரென அறியாது அவரருகில் அமர்ந்தான். தியான இருக்கையை விட்டு எழுந்த ஸ்ரீசங்கபோதியும் அவனை வரவேற்க அவன் தான் அத்தனகல்லையின் அண்மையிலுள்ள கிராமவாசி எனவும், ஸ்ரீசங்கபோதி மன்னனின் தலையைக் கொய்து சென்று பரிசுபெற எண்ணி வெளிக்கிளம்பிய பலருள் தானும் ஒருவன் எனவும் கூறினுன். அவனது ஏழ்மையைக் கண்டு மனம் நொந்த ஸ்ரீசங்கபோதி, அவன் கொடுத்த சாதத்தை மனமுவந்து உண்டபின், தான் அவனுக்குச் செய்யக் கூடியபேருபகாரம் எதுவெனத் தீர்மானித்துக் கொண்டார்.

கல்தோன்றி மண் தொன்றாக் காலத்துப் பெருங்குடி மக்களான தமிழ் சாகியத்தாரின் வரலாறுகள் என்றென்றைக்கும் மங்காப்புகழ் பெற்றவை. அவ்வித தமிழகவரலாறுகள் ஒன்றில் யாம் முதிரமலைத் தலைவனும் பெருங் கொடையாளனுமான குமண வள்ளலையிட்டு அறிகின்றோம். கலகம் செய்து அரசைக் கைப்பற்றிய அமணன் என்னும் இளங்குமணனை அரியணை ஏறவிட்டு, மனமுவந்து நாடிழந்து, கானகம் அடைந்த போதும் தன்னை நாடிவந்த புலவர் பெருமான் பெருந்தலைச் சாத்தனுருக்கு பரிசில் அளிக்கவிரும்பிய குமணன்,

“ அந்த நாள் வந்திலிர் அருந்தழிழ்ப் புலவீர்
இந்த நாள் வந்துநீர் நொந்தெனையடைந்தீர்
தலைதனைக் கொடு போய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுதும் வறுமைநோய்களைமின் ”

என்று கூறியதற்கு ஒப்ப, தவநெறி பூண்ட தியாகியான ஸ்ரீசங்கபோதி குடியானவனை நோக்கி, “ அப்பா, யான்தான் சங்கபோதி. எனது தலையைக் கொய்து சென்று, கோதா அபயனிடம் கொடுத்து, அவன் தரும் செல்வத்தைப் பெற்று உனது முட்டை நீக்கு ” என்றார். சற்றும் இதனை எதிர்பார்த்திராத குடியானவன் துணுக்குற்று, துடிதுடித்து, வேர்த்து, வெருண்டு, ஓடத்தலைப்பட்டான். ஓடிச் செல்லும் குடியானவனைத் திருப்பி அழைத்து, என்ன செய்வதென்றறியாது அவன் தியங்கிநிற்க, ஸ்ரீசங்கபோதி போதி நிழற் புனிதன் பொலங்கழல் மனத்திற்கொண்டு, நிட்டையிலிருந்தவாறே தனது பூதவுடல் நீங்கி புனிதன்பாதம் அடைந்தார். ஒருவாறுபயம் நீங்கிய குடியானவன் உயிர் நீங்கிய ஸ்ரீசங்கபோதியின் சடலத்தை நெருங்கி, அவரது தலையை அறுத்துச் சென்று, கோதா அபயனிடம் ஈந்து, பெரும் செல்வம் பெற்றான். இப்பெரும் செல்வம் படைத்த குடியானவனின் சந்ததியார் இன்றும், பதினறு நூற்றாண்டுகளுக்குப் பின்னும், செல்வச் சிறப்புடன் வாழ்கிறார்கள் என இன்றைய சரித்திரங் கூறுகிறது.

பீதி நீங்கிய கோதாஅபயன், வைரி மாண்டொழிந்தான் என மனமகிழ்ந்து, உடனே அத்தனகல்லை சென்று, அங்கு அரண்மனையை நீங்கிச்சென்ற தனது கணவனைத் தேடி அலைந்து பின் காட்டில் அவர் தங்கியிருந்த ஆச்சிரமத்துக் கருகிலுள்ள ஓர் நீர்ச்சுனையில் தவறி விழுந்து மரணித்த ஸ்ரீசங்கபோதி மன்னனின் பட்டத்து இராணியின் சடலத்தையும் ஸ்ரீசங்கபோதியின் சடலத்தையும் ஒருங்கே கண்டு, அவைக்குத் தகுந்தவாறு இராச மரியாதையுடன் ஈமக்கிரியைகள் நடத்துவித்தான். அத்துடன் அத்தனகல்லையில், ஸ்ரீசங்கபோதியின் ஞாபகார்த்தமாக ஒரு மணிமண்டபம் நிறுவச்செய்து, அதன் திறப்பு விழாத்தொட்டு 21 தினங்களுக்குத் தொடர்ந்து, ஓர் ஆயிரத்து எண்பது புத்த சந்நியாசிகளை அங்கு தங்கச்செய்து அவர்கள் மனம் குளிர அன்ன, சொர்ண, வஸ்திர தானங்களை வழங்கினன். விசாக நன்னுளில் விழா விமரிசையாகக் கொண்டாடுவித்தான். தனது சகாவான ஸ்ரீசங்கபோதிக்குத் தான் செய்த கொடுமைக்குத்தக்க பரிகாரந்தேடும் முறையில் இன்னும் பல தான தருமங்கள் செய்தான் எனமகாவம்சம் கூறும். நீதி என்னும் போர்வையில், அநீதிகள் பல இழைத்து, மதத்தின் பேரால் தன்னையும் மற்றவரையும் ஏமாற்றும் பேர்வழிகள் மலிந்த இந்த நாளில், மேக வண்ண அபயன் என்னும் கோதா அபயன் தனது இரத்தக் கறையை நீக்குவதற்காய் அன்று செய்த பிராயசித்தங்கள் வியப்பிற்குரித் தானவையன்று.

அது எப்படியாயினும், ஆசிய ஜோதி கௌதம புத்தரின் பஞ்ச சீலக் கொள்கையைக் கடைப்பிடித்து, உலக வாழ்வை வெறுத்து, மற்றோர் வாழ்வு சிறப்புறுவதற்காக தன்உயிரையே கொடுத்துதவிய ஸ்ரீசங்கபோதி மன்னனின் தியாக வாழ்க்கை எம் ஈழத்து மக்களுக்கு ஓர் இலட்சியப்பாதையை வகுக்கிறது. சத்தியப்பாதையில் முன்னேறும் நம்மவர் இடுக்கண்துடைக்கச் சரித்திரம் உதவும் பெருங்கொடை ஈழத்து வேந்தன், தியாகி ஸ்ரீசங்கபோதியின் வாழ்க்கை வரலாறு எனலாம்.

# அரசாங்க மாகாண அதிபர்கள் மகாநாடு

பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட்டதும், அரசாங்க மாகாண அதிபர்கள் மீது சுமத்தப்படவிருக்கும் கடமைகளை 1957 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமையன்று பிரதம மந்திரி திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மாகாண அதிபர்களுக்கு விளக்கினர். அன்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் செனற்றர் ஏ. பி. ஜயசூரியா அவர்களின் தலைமையில், உள்நாட்டலுவல் அமைச்சில் ஆரம்பமான அரசாங்க மாகாண அதிபர்களின் வருடாந்த மகாநாட்டில் பேசுகையிலேயே பிரதம மந்திரி மேற்படி விஷயத்தை விளக்கினர்.

ஆலோசிக்கப்பட்டுள்ள திட்டப் பிரகாரம், அரசாங்க மாகாண அதிபர்கள் தத்தம் பிரதேசங்களின் பிரதான நிர்வாக அதிகாரிகளாகத் தொடர்ந்து செயலாற்றுவரெனத் திரு. பண்டாரநாயக்கா சொன்னர். பிரதேச சபை மசோதாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில திருத்தங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், தலதாபனங்களின் அங்கத்தவர்கள், பிரதேச சபைகளிற் செயலாற்றும்போது பதவி வகிக்க அனுமதியளிக்கும் பிரச்னை ஆராயப்பட்டு வருகிறதென்றும் பிரதம மந்திரி கூறினர். பிரதேச சபைகளின் தேர்தல்கள் பற்றிய விஷயமும், மத்திய அரசாங்கத்திடமிருந்து இதர சில கடமைகளைப் பிரதேச சபைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கும் விஷயமும் தனது கவனத்தை ஈர்க்கும் மற்ற விஷயங்களாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். அரசாங்கக் கடமைகளை இவ்விதம் பல்முகப்படுத்துவதால் பிரதேச சுய உரிமை ஆட்சி பெருமளவில் ஏற்படுமென்றும் பிரதமர் மேலும் சொன்னர்.

மகாநாட்டின் பின்னேரக் கூட்டத்தில் காணிக் கொள்கையைப் பற்றிய விவாதத்துக்கு அதிக நேரம் செலவிடப்பட்டது. இந்நாட்டில் வெகு துரிதமாக அதிகரித்துவரும் குடிசனங்களின் தேவைக்காக அபிவிருத்தி செய்வதற்கு அதிக காணிகள் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தைக் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. சீ. பீ. டீ சில்வா அவர்கள் வலியுறுத்தினர். இது சம்பந்தமாகப் பேசுகையில் காணி அளவை வேலை, காணி வாங்குதல், பராதீனப்படுத்தல் ஆதிய விஷயங்களில் நீடிக்கும் தாமதங்கள் துரிதமான காணி அபிவிருத்திக்கு இடையூறுகளாக விருப்பதை அவர் சுட்டிக்காட்டினர்.

காணிக்கச்சேரிகளைத் தொடர்ச்சியாக நடாத்துவதன் மூலம் காணிப் பராதீனத்தைத் துரிதப்படுத்த சகல முயற்சிகளும் செய்யப்பட வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இதையடுத்து, அதிகரித்துவரும் குடிசனத்தைக் குடியேற்றுதற்காக, அநேக குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

திறக்கப்படவிருக்கும் பிரதேசங்களின் பயிர்ச் செய்கை சம்பந்தமாக, கைவிடப்பட்ட குளங்களைச் சீர்திருத்துவதால் மாத்திரமன்றி, நதிகளுக்கு அணை கட்டுவதன் மூலமும், நீர்ப்பாசன வசதிகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில், மினிப்பே திட்டத்தின் வெற்றி உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைப் பாடப் புத்தகங்கள்

இவ்வருட இறுதியில் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைப் பாடத் திட்டத்தில் அடங்கிய சகல தமிழ், சிங்களப் பாடப் புத்தகங்களும் விற்பனைக்கிருக்கும்.

தனிப்பட்ட பிரசுரிப்பாளர் போதிய அளவு பாடப் புத்தகங்களை வெளியிடமுடியாதிருக்கின்றமையால் அரசகரும மொழிப்பகுதியின் கல்விப் பிரிவு (பின்னர் தன்மொழிப் பகுதி) தேசிய மொழிப் பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை ஏற்று இது நாள்வரை மொழி பெயர்ப்பாகவும், முதனூல்களாகவும் எழுதப்பட்ட கீழ்க்காணும் பாட நூல்களை வெளியிட்டுள்ளது. அட்சர கணிதம், கேத்திர கணிதம், இரசாயனம், பௌதிகம், சுகாதாரமும் உடலியலும், கைப்பணியில் அடங்கும் மூன்று பாடங்களான அரக்குவேலை, மரவேலை, வனைதற்றொழில்போன்ற பாடநூல்கள் வெளியாகியுள்ளன. விவசாயம், தேனீ வளர்ப்பு, பொருளாதாரம், வர்த்தகம், உலோகவேலை,நெசவுத்தொழில் போன்ற பாடங்களில் முதனூல்களாகவே எழுதப்பட்ட பாடப் புத்தகங்கள் தற்பொழுது அச்சிலிருக்கின்றன. மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களுடன், பிரயோக கணிதம், தாவரவியல், பிராணியியல்போன்ற பாடங்களைக் கற்பிக்கப் பாடநூல்கள்மொழி பெயர்க்கப்பட்டுவருகின்றன. இலங்கைப் பல்கலைக் கழகத்திற் சிரேட்ட கணித விரிவுரையாளரான திரு. நடராசா உயர்தரக் கணித நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இப் புத்தகத்தின் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புகள் தற்பொழுது முடிவடைந்துள்ளன.

மேலே குறிப்பிட்ட முதனூல்களும், மொழி பெயர்ப்புகளும் எழுதப்படும் பொழுதே சொற்றொகுதிக்குழுக்கள், பல்வேறு விஞ்ஞானப் பாடங்களுக்குரிய ஆங்கில பரிபாஷைச் சொற்களுக்குத் தமிழ் சிங்களச் சொற்களை வழங்கும் வேலையைச் செய்து வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட எஸ். எஸ். ஸி. வகுப்புக்குரிய எல்லாப் பாடங்களுக்கும் தேவையான பரிபாஷைச் சொற்களை இப்பகுதி வழங்கியுள்ளது. இவ்வருட மத்தியிலிருந்து இதே சொற்றொகுதிகளில் பட்டதாரி வகுப்புவரை உபயோகிக்கும் சொற்களைக் கூட்டி விஸ்தரிப்பதற்காகக் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன. இதே நேரத்தில் முன்னர் மிகவும் அவசரமானவையல்ல வென்று கருதப்பட்ட பாடங்களுக் குரிய சொற்றொகுதிகளைத் தயாரிப்பதற்குப் புதிதாக ஒரு குழு நியமிக்கப் பட்டிருக்கின்றது. இக்குழு மோட்டார் இயந்திரத்துறைக்கான தேசியச் சொற்களைச் சேர்ப்பதில் முனைந்திருக்கின்றது. கூடிய சீக்கிரம் வைத்திய இயல்களுக்குரிய தேசியச்சொற்களைத் தொகுக்க குழுக்கள் நியமிக்கப்படும்.

கீழ்க்காணும் பாடப் புத்தகப் பட்டியலில் காணப்படும் நூல்கள் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு தன்மொழிப் பகுதியால் வெளியிடப்பட்டன.

**சிங்களப் பாடப் புத்தகங்கள்.**—பொது விஞ்ஞானம்—அயன மண்டல பாடசாலைகளுக்குரியது—புத்தகம் 1—திரு. எவ். டானியல். பாடசாலை அட்சரகணிதம்—திரு. எச். எஸ். ஹால். அடிப்படை இரசாயனம்—திரு. ஹென்றி வில்கின்ஸ். உடல்நலவியலில் ஆரம்ப நூல்—திரு. ஆர். ஏ. லிஸ்டர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைப்பற்றியும் அதன் விசேட பிரிவுகளைப்பற்றியும் படிப்பித்தல் சம்பந்தமாக சில ஆலோசனைகள். அடிப்படைக் கேத்திர கணிதம்—திரு. பார்னூட், திரு. சைல்ட், மனித உரிமைச் சாசன சர்வதேசப் பிரகடனம்.

பொதுப் பௌதிகவியல்—திரு. டபிள்யு. எல். விட்லி, பிரித்தானிய வரலாற்று அடிப்படை—திருவாளர்கள் வார்னர், மார்ட்டின் முயர்.

**தமிழ் பாடப் புத்தகங்கள்.**—ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைப்பற்றியும் அதன் விசேட பிரிவுகளைப் பற்றியும் படிப்பித்தல் சம்பந்தமாக சில ஆலோசனைகள்.

பொது விஞ்ஞானம்—அயன மண்டல பாடசாலைகளுக்குரியது புத்தகம் 1—திரு. எவ். டானியல். மனித உரிமைச் சாசன சர்வதேசப் பிரகடனம்—தொடக்க இயக்க விசையியல்—திரு. எஸ். எல். லோனி. கீழ்க்காணும் தமிழ் நூல்கள் அச்சிலிருக்கின்றன.

உடல் நலவியலில் ஆரம்ப நூல்—திரு. லிஸ்டர். பொது பௌதிக வியல்—திரு. டபிள்யு. எல். விட்லி.

திரிகோணக் கணிதம்—திரு. எஸ். எல். லோனி தொடக்க நிலையியல்—திரு. எஸ் எல். லோனி. தொடக்க நீர்நிலையியல் திரு. எஸ். எல். லோனி.

பொது விஞ்ஞானம்—அயனமண்டலப் பாடசாலைகளுக்குரியது திருவாளர்கள் ஏ. அட்கின்சன், எவ். டானியல்—முதலாம் இரண்டாம் புத்தகங்கள். செய்முறை இரசாயனம்—திரு. ஜோசப் திரு. பிரௌனிங்,.

புதிய கேத்திர கணிதம்—பாடசாலைகளுக்குரியது—திரு. சி. விடால்.

பாடசாலைத் தராதரப் பத்திர அட்சர கணிதம்—திரு. சி. வி. டரல்.

பல சிங்கள நூல்களும் அச்சிலிருக்கின்றன.

கீழ்க்காணும் மொழிபெயர்ப்பு நூல்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

பிரித்தானிய வரலாற்று அடிப்படை—(1688-1939).

திருவாளர்கள் வார்னன் மார்டின், முயர்.

பொது விஞ்ஞானம்—அயன மண்டல பாடசாலைகளுக்குரியது. இரண்டாம், மூன்றும், நாலாம் புத்தகங்கள்.

அடிப்படை இராசயனம்—திரு. ஹென்றி வில்கின்ஸ்.

ஆழ்கூற்றுக் கேத்திரகணிதம்—திரு. ராம்சே.

நுண்கணிதம்—திரு. ராம்சே.

தாவரவியல்—திருவாளர்கள் லோசன், சானி.

அரக்குவேலை—சிங்களத்திலிருந்து. சில சிங்கள மொழிபெயர்ப்பு நூல்களும் தயாராகிவருகின்றன.

தமிழ் மூலநூல்கள்

உயர்தர கணிதம்.

கணக்குப் பதிவியல்—இவை அச்சிலிருக்கின்றன.

கீழ்க்காணும் நூல்கள் தயாராகிவருகின்றன.—

விவசாயம்

மோட்டார் வாகனங்களைப் பேணுதலும், திருத்துதலும்—உலக தொழிலாளர் தாபன வெளியீடு.

தமிழ்க் கலைச்சொற் றொகுதிகளில் கீழ்க் காணுபவை வெளி வந்துள்ளன:


கணிதம் ; இரசாயனம் ; பௌதிகம் ; புவியியல் ; கைப்பணி I நெசவு வேலையும் வனைதற் றொழிலும், கைப்பணி II மர வேலையும், அரக்கு வேலையும் ; பொருளாதாரம் ; கணக்குப் பதிவியல் ; உடல் நலவியனும், உடற்றொழிலியலும் ; உலோக வேலை ; சேதனவுறுப்பு இரசாயனம்.

விவசாயம், தாவரவியல், உடற் பயிற்சிக் கல்வி, பிராணியியல் முதலிய கலைச் சொற்றொகுதிகள் அச்சிலிருக்கின்றன.

தற்பொழுது கீழ்க்காணும் சொற்றொகுதிகள் தயாராகிவருகின்றன.—

வீட்டுப்பணி, தையல் வேலை, குடியியல், அரசியல், தாவரவியல் (உயர்தர நிலை), புவியியல் (உயர்தர நிலை).

பல சிங்கள கலைச் சொற்றொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன.



வல்வெட்டித் துறையிலுள்ள சிவன் கோவிலின் கிழக் கோபுரவாயிற் தோற்றம்.

எங்கள் ஊர்

# வல்வெட்டித்துறையின் வரலாறு

## வீரர் குடியேறிய நாடு

வித்துவான் வ. மு. கனகசுந்தரம்

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே 16 மைல் தூரத்திலும், காங்கேசந்துறையிலிருந்து கிழக்கே 9 மைல் தூரத்திலும், பருத்தித்துறையிலிருந்து மேற்கே 5 மைல் தூரத்திலும், தென்னிந்தியாவிலிருந்து தெற்கே கடல் மார்க்கமாக 30 மைல் தூரத்திலுமுள்ள ஓர் துறைமுகப் பட்டினம். இதன் பரப்பு $1\frac{3}{4}$ சதுரமைல். 1952 ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிஜனமதிப்பின்படி இங்கு 5,162 இந்து சமயத்தவர்களும் 122 கிறிஸ்தவ சமயத்தவர்களும் உளர். 1947 ம் ஆண்டு முதல் பட்டின சபையாராற் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு முன் சுகாதார சபையாராற் பரிபாலிக்கப்பட்டது. இவ்வூருக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் " கந்தவனம் " என வழங்கும் சுப்பிரமணியர் ஆலயமும் மேற்கே $2\frac{1}{2}$ மைல் தூரத்தில் செல்வச் சந்நிதியென வழங்கும் சுப்பிரமணியர் ஆலயமும் உண்டு.

### பெயர் வந்த காரணம்

வல்லி என்னும் பிரபல கால்நடை வியாபாரி பட்டி வைத்திருந்த இடமாதலால் " வல்லிபட்டி " என அழைக்கப்பட்டு துறைமுகம் ஏற்பட்ட பின் வல்லிபட்டித்துறை என வழங்கி

வந்து, பின் வல்லிவெட்டித்துறை எனத் திரிந்து தற்காலம் வல்லுவெட்டித்துறையென்றும் வல்வெட்டித்துறையென்றும் வழங்கிவருகின்றது. சென்னபட்டினம் சென்னையெனச் சுருக்கி அழைக்கப்படுவது போல் இவ்வூர் "வல்வை" என்றும் வல்கா வநகர் என்றும் அழைக்கப்படுவதுமுண்டு.

### யுத்த வீரர் குடியேற்றம்

ஆதியில் இவ்வூரில் குடியேறியவர்கள் ஊர்க்காவலுக்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட போர் வீரர்களே. இவ் வீரர்கள் கடற்படை தரைப்படை இரண்டிலும் சேர்ந்திருந்தவர்கள். இராமநாதபுரம் பாஸ்கரசேதுபதி மீதும் பாண்டித்துரைத் தேவர் மீதும் பிரபந்தங்கள் பாடிச்சென்று திரு ரா. இராகவையங்கார் முதலிய பல வித்துவான்கள் முன்னிலையில் அரங்கேற்றிப் பரிசில் பெற்றவரும் இளம் பிராயத்திலிருந்தே கவி பாடுவதில் வல்லவராய் இலங்கியவருமாகிய உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரவர்கள் "வல்வைக் கலித்துறை" எனும் பெயருடன் பாடிய செய்யுட்கள் ஒன்றில் இவ்வூரவர்களை "ஊர்க்காவலர்" என்று குறிப்பிட்டது ஊன்றிக் கவனிக்கற் பாலதொன்றும். அச்செய்யுள் வருமாறு :—

"கார்க்காமர் கண்டத்து நம்
வயித்யேசர் கருணையினுற்
றீர்க்காயுளு மிட்டி சித்தியு
மெய்திச் செறிந்தகுள
நீர்க்காலெலா முத்தச் சங்கின
மூர்ந்து நிறைந்த வல்வை
**யூர்க்காவலர்** வைகிலெங்களுக்கே
பெரிதூதியமே"

என்பதாம். இன்னும் தஞ்சாவூர் நாய்க்கன் யாழ்ப்பாணத்தைச் செயிப்பதற்காக ஒரு சேனை கொண்டு வந்து வல்லுவெட்டித் துறைக் கரையிலிறக்கிக் குளத்துக்கருகே ஓர் பனந்தோப்பிற் பாளையமிட்டிருப்பதென அறிந்து, பறங்கியர் தலைவனுகிய தெமோற்றே என்பவன் இரகசியமாய்ச் சென்று மூன்றும் சாமத்தில் திடீரென்று தாக்கித் தமிழரை வெருட்டியடித்து வெற்றி கொண்டான் என்ற செய்தி "யாழ்ப்பாணவைபவ கௌமுதி"யில் காணப்படுகின்றதும் ஈண்டு நோக்கற் பாலதாம்.

இவ்வூருக்குப் பக்கத்திலுள்ள இடங்கள் சமரபாகுதேவன் குறிச்சி, வென்றிபாகுதேவன் குறிச்சி, கல்லிடைத் தேவன் குறிச்சி முதலிய பெயர்களால் அழைக்கப்படுவதும் அப்பகுதிகளில் யுத்த வீரர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பதை வலியுறுத்த வல்லதே.

ஓர் நாட்டில் கலகங்கள் படையெடுப்புகள் முதலியன ஒழிந்து அமைதி நிலவியபின் படைகள் கலைக்கப்படுவதும் யுத்த வீரரின் சேவை வேண்டப்படாது போவதும் இயல்புதானே. அங்ஙனமே நாட்டில் அமைதி நிலவி இவ்வீரரின் சேவை வேண்டப்படாது போகவே அவர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபடலாயினர்.

பணக்காரராயிருந்தவர்கள் "திரைகடலோடியுந் திரவியம் தேடு" என்னும் ஔவையார் அரும்வாக்கின்படி கப்பல்கள் கட்டுவித்துக் கப்பல்களிற் சென்று வியாபாரஞ் செய்து பொருளீட்டத் தொடங்கினர். கடற்படையிலிருந்தவர்கள் கப்பலோட்டும் தொழிலிலும் கப்பல்கட்டும் தொழிலிலும் ஈடுபட்டனர். தரைப்படையிலிருந்தோர், வேளாண்மை வியாபாரம் முதலிய தொழில்களை மேற்கொண்டனர். ஓர் வீட்டைக் கட்டுவதற்கு "மனையடி சாத்திரம்" என்னும் சிற்ப நூலைக் கற்ற சிற்பி தேவைப்படுவதுபோல ஓர் கப்பலைக் கட்டுவதற்கும் "நாவாய் சாத்திரம்" என்னும் கப்பல் கட்டும் சாத்திரத்தைக் கற்றமேத்திரி தேவையல்லவா ?

இவ்வல்வெட்டித் துறையிலே நாவாய் சாத்திரங் கற்றுக் கப்பல் கட்டுவதில் வல்லவராகிய மேத்திரிமார் பலர் இருந்தனர். இப்பொழுதும் இருக்கின்றனர். பெரிய பாய்க்கப்பல்களைக் கட்டுவதில் வல்ல மேத்திரிமார் இலங்கையில் இவ்வூரிலன்றிவேறெங்கும் காண்பதரிது. திசைகாட்டும் கருவி, மணி காட்டுங் கருவியாகிய கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன்பே விண்மீன்களின் உதவியால் திசையையும், இரவில் நேரத்தையுமறிந்து கப்பல்களைப் பல தூர தேசங்கட்குமோட்டிப் பெயர்பெற்ற மாலுமிகள் பலர் இருந்தனர். இப்பொழுதும் இருக்கின்றனர். இந்தியாவிலுள்ள கப்பல் வர்த்தகர்கள் இவ்வூரிலுள்ள மேத்திரிமாரை அழைத்துக் கப்பல்கள் கட்டுவித்துப் பெரும் சீர்வரிசைகள் வழங்கியுள்ளார்கள், இவ்விதக் கௌரவம் பெற்றவருள் ஒருவர் கீரிமலையில் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலும், தெருவோரத்தில் மடாலயமும் கட்டுவித்த வடிவேலு மேத்திரியார் என்பவர். இன்னொருவர் ஆங்கிலத்தில் அட்சரமும் தெரியாதவராயிருந்தும், எல்லாக் கிரகங்களினதும் கதிவக்கிரம் முதலியவற்றைக் காட்ட வல்ல அதி நூதனக் கடிகாரத்தைச் செய்து காட்டியவரும் தோட்டங்களுக்கு யந்திரம் மூலம் நீர் பாய்ச்சுவதற்குரிய யந்திரத்தை முதல் முதல் கண்டுபிடித்துச் செய்துதவியவருமாகிய வா. ஆறுமுகம் என்பவர். இவரைப் பொன்னுச்சுவாமி மேத்திரியார் என்றே பலரும் கூறுவதுண்டு. இவர் 1930 ம் ஆண்டு சிவபதமடைந்தார். நீண்ட காலமாக இவ்வூரவர்கட்கு நாட்டுக்கோட்டைத் தனவணிகர்கள், கப்பல் கட்டுவதற்குப் பணம் கடன் கொடுத்துதவி வந்திருக்கின்றனர்.

### ஆலயங்கள்

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. இங்கு கோவில்களுக்குக் குறைவேயில்லை. கிழக்குப் பகுதியில் தெரு வோரத்தில் நெடியகாட்டுத் திருச் சிற்றம்பலம் பிள்ளையார் கோவில் என வழங்கும் ஓர் பெரிய கோவிலும் மேற்குப் பகுதியில் தெருவோரத்தில் முத்துமாரியம்மன் கோயிலும், இதற்குப் பக்கத்தில்வாலாம்பிகா மேத வைத்தீசுவரன் கோவிலும் உள. இம்மூன்று ஆலயங்களிலும் ஆண்டுகள் தோறும் உற்சவங்கள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் ஆலயங்களில் உள்ளதுபோன்று இலங்கையில் கோபுரம் கட்டப்பட்ட முதற் கோயில் இம்முத்துமாரியம்மன் கோயிலே. இவ்வாலாம்பிகாசமேத வைத்தீசுவரன் கோவிலில் நடைபெறும் ஆறுகாலப் பூசைக் கிரமங்களும், ஆகமசாத்திரங்களிற் கூறப்பட்டபடி அமைந்திருக்கும் ஆலய அழகும் ஏனைய நைமித்திய பூசைக்கிரமங்களும் பெரிதும் போற்றற்குரியன வென்பது மறுக்கப்படாத ஒன்றும். இம்மூன்று பெரிய கோவில்களைத் தவிர, தில்லையன் மடத்து வயிரவர் கோவில், உலகுடைய பிள்ளையார் கோவில், சடையாண்டி வயிரவர் கோவில், வைகுந்தப் பிள்ளையார் கோவில், நறுவிலடிப் பிள்ளையார் கோவில், மீனுட்சியம்மன் கோவில், கப்பலுடைய பிள்ளையார் கோவில், புட்டணியுப் பிள்ளையார் கோவில் என வழங்கும் 8 சிறு ஆலயங்களும் ஓர் கத்தோலிக்க மதத்தினர்க்குரிய ஆலயமும் உள.

மேலே குறிப்பிட்ட சிவாலயம் திருமேனியார் வேங்கடாசலம் பிள்ளையால் 1867 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1883 ம் ஆண்டு வைகாசியில் பிரதிட்டாபிடேகஞ் செய்விக்கப்பட்டது. இவ்வாலயத்து லிங்கம் "பாணலிங்கம்." இவ்விலிங்கத்தைக் காசிக்குச் சென்று

கங்கையாற்றிலிருந்து கொண்டு வந்து கொடுத்துதவியவர் விசுவநாதர் என்பவரே. இவ்வாலயத் தூபித் தங்கக் கலசம், நடராஜர் முதலியவற்றை வார்ப்பித்துக் கொடுத்துதவி பலவழியிலும் துணை புரிந்தவர் விசுவநாதரின் குமாரர் சரவணமுத்து என்பவரே. மேலே கூறப்பெற்ற திருமேனியார் வேங்கடாசலம் பிள்ளையை யாவரும் பெரியவர் என்றே அழைப்பது வழக்கம். அவர் எல்லாவிதத்திலும் பெரியவராகவே இருந்து பெயர் பெற்றுள்ளார். இவரைப் பற்றிச் சிவசம்புப் புலவரவர்களால் பாடப்பெற்ற "வல்லைவக் கலித்துறை"ப் பாடல்களில் இரண்டு படித்தின்புறற்பாலன.

அவை வருமாறு :—

"நீதி மரபிற்றிருத் தொண்டரோடு
நிகழும் பத்திச்
சோதிமலர் முகச் சீர்வேங்கடாசல
த்துங்க வள்ளல்
பாதிமதிச் சடையான் றேவியோடு
பயிலத்தந்த
சேதிம மொன்றமையும் வல்லைவச்
சீரைத் தெரிந்திடவே"

"விண்ணியல் செல்வத்தின்
மண்ணியல் செல்வமிதக்கத்துய்த்த
புண்ணிய சீலத்திருவேங்கடா சலப் பூபன்வந்து
நண்ணியவான் குலத்தார் வாழும்
வல்லை நகரினினுங்
கெண்ணியல் போகநகர் வேறிங்கியாவதி சைத்திடவே."


இன்னும் வைகாசி மாதத்தில் நிகழும் வற்றுப் பழைப் பொங்கலுக்காக கடல் மார்க்கமாகச் செல்பவர்கள் தங்கி இளைப்பாறுவதற்காக முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தில் கட்டப் பட்டிருக்கும் மடாலயமும், ஒவ்வொருவரினதும் வருணச்சிரமங்களுக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் கூடங்களும் இவரால் அமைக்கப்பட்டனவே. இப்பெரியார் 1892 ம் ஆண்டு சிவனடி நீழலையடைந்தனர்.

இவருடைய தம்பியார் திரு. குழந்தைவேல் பிள்ளை தான் கொழும்பு செக்கடித் தெருவில் யாழ்ப்பாணத்தார் கோவில் என வழங்கும் சுப்பிரமணியர் ஆலயத்தைத் தாபித்தவர். இவர் அக்காலத்து இந்துஸ்தான் வங்கியில் சிறுப்பராயும் பிரபல வியாபாரியாகவுமிருந்து கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்குறுதுணையாக இருந்தவர். இவர் சிவபதமெய்தியது 1905 ம் ஆண்டு.

### புலவர்களும் அட்டாவதானியும்

ஆதியில் வட மராட்சிப் பகுதி மணியகாரராயிருந்து கடமை பார்த்த புண்ணிய மூர்த்தி மணியகாரனின் மகளை மணந்தவர் ஏகாம்பரப் புலவர் என்பவர். (இப்புண்ணிய மூர்த்தியார் மேலே கூறப்பெற்ற வேங்கடாசலம் பிள்ளை, குழந்தைவேல்பிள்ளை யாகியவர்களின் தந்தையாகிய திருமேனியாரின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது) இவ்வேகாம்பரப் புலவரின் சகோதரியுடைய மகன் ஏகாம்பரம் என்பவர்தான் இலங்கையில் முதல் முதல் "அட்டாவதானஞ்" செய்து காட்டி அரும் பெரும புகழ் பெற்றவர். இவர் அட்டாவதானியாரென்றே அழைக்கப் பட்டு வந்தவர்.

இவர்களுக்குப்பின் ச. வைத்தியலிங்கம் பிள்ளை, த. அருணசலம்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, பொன்னையாபிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை ஆகிய புலவர்கள் இருந்திருக்கின்றனர். இவர்களுள் ச. வைத்தியலிங்கப் புலவர், நாற்பொருட் கவிராச நம்பியகப் பொருள், வள்ளியம்மை தெய்வயானையம்மை திருமணப் படலம், கந்தரலங்காரம், மறைசையந்தாதி, கல்வளையந்தாதி முதலிய நூல்கட்கு உரை எழுதி அச்சிட்டு வெளியிட்டதுமன்றி, "சிந்தாமணிநிகண்டு" என்னும் நிகண்டு ஒன்றும் யாத்து வெளியிட்டுள்ளார். ஈழ நாட்டில் நிகண்டு நூல் செய்த புலவர் இவரன்றி வேறு யாரும் இலர். இவர் தர்க்கத்தில் தமக்கு



வல்வெட்டித்துறையில் கப்பல் நீராட்டப்படும் காட்சி. சொற்ப காலத்துக்குமுன்னர் இலங்கை மக்கள் கப்பல் கட்டுந் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு இது ஓர் சான்றாகும்.



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தலைசிறந்த ஆச்சாரி திரு. சுந்தரமேஸ்திரியார் 1930 ல் கட்டிய அன்னபூரணி அம்மாள் எனும் பாய்க்கப்பல். இது அமெரிக்காவுக்கு 1936–38 ல் சென்றமை சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கியவர். இவர் காலத்து நிகழ்ந்த சமயப் போர்களில் ஈடுபட்டுப் பல கண்டனங்களும் துண்டுப்பிரசுரமாக வெளியிட்டுள்ளார். இன்னும் "சைவாபிமானி" என்னும் பத்திரிகையொன்றைச் சொந்த அச்சியந்திர சாலை நிறுவி அச்சிட்டுப் பத்து ஆண்டுகள் வெளியிட்ட பின்னர் 1901 ம் ஆண்டு பரமனடியடைந்தனர். ஏனைய புலவர்கள் இயற்றியவை அச்சுவாகனம் ஏருததால் ஒன்றும் தெரிய வரவில்லை.

### கவிக்குக் கனகந்தருதல்

இவ்வல்வெட்டித்துறை கோ. கந்தசாமி என்பவர் மட்டக்களப்பில் பிரபல மர வியாபாரியாக விளங்கி மனதுக்குகந்த தெய்வ நாயகியென்னும் மங்கையை மணந்து பல தானதருமங்கள் செய்து வாழ்ந்து வருங்கால் இவர் மனைவியுடன் தனது பிறந்த ஊராகிய வல்வெட்டித்துறைக்கு வந்திருந்தபொழுது உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரவர்கள் அவர் மீது "பிரபாவப் பாமாலை" யொன்றைச் பாடிச் சென்று கண்டனர். கந்தசாமிப்பிள்ளை புலவரைமட்டக்களப்புக்கு வந்தால் தான் ஆயிரம் ரூபாய் தருவதாகக் கூறி அப்பொழுது சிறு பொருளுதவி மட்டும் செய்தனுப்பினர். பிற்பாடு, சில மாதங்கள்சென்றபின், புலவர் பாய்க்கப்பல் மூலம் மட்டக்களப்புக்குச் சென்றார். சென்றதும் கந்தசாமிப்பிள்ளை காட்டுக்குச் சென்றிருப்பதையறிந்து கவலையுடன் அவர் வீட்டை விசாரித்துச் சென்றனர். சென்றதும் அவர் மனைவி யாது செய்தாள்? யாரோ புலவனும் பணம் பறிக்க வந்திருக்கின்றானும் என்று வேலையாட்களுடன் வெறுத்துக் கூறி வெருட்டும் படி செய்தாளா? இல்லை. ஐயா வனத்துக்கு வாணிகத்துக்குப் போயிருக்கிறார்; அவர் வருவதன் முன் தாங்கள் யாழ்ப்பாணம் திரும்புவதாயிருந்தால் அவர் சொன்ன சொற்படி ஆயிரம் ரூபாயும் தருகிறேனென்று சொல்லியவாறே வழங்கினாள்.

புலவர் கந்தசாமிப் பிள்ளையைப் பற்றி பாடிய சில பகுதிகள் குறிப்பிடுகின்றேன் :—

"கந்தசாமிப் பிள்ளையை வல்வை நகராச
கவிஞர்கண் மதித்த தருவே! ...............
மந்தகாசத்தினிய தேமொழியினெவ்வெவர்
மனத்தையு முருக்குமன்ப!
வடிதமிழ்க் காவிய புராண சோதிட நூல்
வழாதவகை தேர்ந்த நிபுண!
வரமுறுங் கீரிமலை யறுமுகன் கோவிறனை
மாண்புடனமைத்த துங்க! ....................
"கோள்திரிந்து மாரிபொய்த்துக் கோரக் கருப்புறுமந்
நாள்தனினு மீகைவிடா நல்லவனே"

அதாவது கிரகங்கள் தத்தம் கதிமாறி மழையின்றிக் கொடிய பஞ்சம் வந்த காலத்தும் ஈகையைக் கைவிடா உத்தமனே! என்று அழைக்கின்றார். கீரிமலையில் அறுமுகன் கோவில் இவர் தான் அமைத்ததென்பதும் மேலேயுள்ள பாடலால் அறியக் கிடக்கின்றது.

"ஐயா வனத்துக்கு வாணிகத் துற்றன ரன்பரிங்க
னெய்யாதவர் வரமுன்னர்ப் பயாணமிசை வுளதேற்
பொய்யாதவர் சொன்ன பொன்னீவன்யானென்ற பூவைவைக
மெய்யார் புகழ்க்கந்தசாமிக்கு வான்செல்வம்வேறென்னையே"


என்று கூறும் செய்யுளைக் கூர்ந்து நோக்குங்கள். இற்றைக்கு அறுபது வருடங்கட்கு முன் ஓர் பெண் ஆயிரம் ரூபாயை அள்ளித் தனது கணவன் சொன்ன சொல்லைக்காப்பாற்ற முன் வந்து தந்தாளென்றால் அவளை என்னென்றழைப்பது? அச் செல்வி இருக்கும்பொழுது வேறு செல்வமும் வேண்டுமோ? அவளினும் மேலான செல்வம் வேறு யாது தேவை?

"நெஞ்சங் குளிர்ந்து விழிகுளிர்ந்தின்
சொனிகழ்த்தி முகக்கஞ்சம் மலர்ந்து பணிந்தென்
கவிக்குக் கனகந்தந்தாள் தஞ்சஞ் செறிந்தவர்த் தாங்கிடுஞ்
சீர்க்கந்தசாமி யில்லாள் வஞ்சங் கடிந்த மனத்தெய்வ
நாயகி மாதரசே"

என்று அவள் தன் கவிக்குக் கனகந் தந்த பக்குவத்தைப் பாடிய புலவன் அவளிடமுள்ள ஏனைய அருங் குணங்களைப் பாராட்டுகிறார் :

"சாற்று புகழ்க்கந்தசாமி மனக்கோவிலிடை
யேற்றி வைத்த வின்பவெழில் விளக்கே–நாற்றிசைமா
வத்திரனார் தந்த வசிட்டமுனி தேவிக்கும்
புத்தியினாற் கற்புரைக்கும் பூங்கிளியே–சார்ந்தவியன்
ஞாலம்பரவு தெய்வநாயகியா மெய்ச்சுகுண

அன்னபூரணி அம்மாள் எனுங் கப்பல் சுவெஸ்கால்வாயில் இஸ்மாலியா என்னுமிடத்தில் நங்கூரமிட்டு நின்றபொழுது எடுக்கப்பட்ட படம்.



கோலங்கனிந்த மடக்கோகிலமே" ......என்றெல்லாம் பல படப் பாராட்டிய புலவன் தனது ஆர்வம் அடங்காது தட்டுக் கெட்டுத் தடுமாறிக் கடைசியில் அவளைத் தனக்கு அந்நியளாக விடமுடியாமல் அடங்கா ஆர்வத்துடன்

"நானையன் நீ புதல்வி நன்மருகன் நின்கணவன்
தானிதனை நம்பிடுதி தப்பல்லத்—தூநிலவும்
உள்ளத்தால் நீர்செய்த ஒங்குமுபகாரத்தை
எள்ளத்தனையேனும் நான் மறவேன்—றள்ளற்றுச்
சந்ததமும் நேசந்தணவாமல் நாம் வாழக்
கந்தனருள்முன் நிற்குங்காண்"

என்றுபாடி உரிமைபாராட்டியதை உற்று நோக்குங்கள். ஆண்களுந் தமிழின் அரியசுவைச் செந்தமிழை வீணதென்று வெறுக்கும் இந் நாளில் இவள் பொன் தந்தாளே யென்று பாடிய பாடலைப்பாருங்கள் :

"ஆணுயிரேரு மரியசுவைச் செந்தமிழை
வீணதென்று வெறுத்துவிடு மிந்நாளில்
நாணுதிபூண்ட தெய்வநாயகிமானன்னதையுட்
கோணுதுபூணக் குறித்த தெங்கள் புண்ணியமே ;

கீரிமலையிலுள்ளது போன்ற நீரூற்றுக் குளமும் மடாலயங்களும் இவ்வல்வெட்டித்துறைக் கிழக்கெல்லையிலுள்ள அவ்விடம் ஊரணியென அழைக்கப்படும். அப்பக்கத்திற்றான் தஞ்சாவூர் நாய்க்கன் படைகளுடன் வந்திறங்கியிருந்தவன்.

### கல்விச்சாலைகள்

"சிதம்பர வித்தியாலயம்" என வழங்கும் ஓர் ஆங்கிலக் கல்லூரியும் "சிவகுரு வித்தியாசாலை" என வழங்கும் ஓர் தமிழ்ப் பாடசாலையும் அமெரிக்கன் மிஷனரிமாரால் நடாத்தப்படும் ஓர் தமிழ்ப் பாடசாலையும் கத்தோலிக்க மதத்தினராற் றாபிக்கப்பட்ட ஓர் தமிழ்ப் பாடசாலையும் உள. "சிதம்பரவித்தியாலயம்" 1896 ல் திரு. கு. சிதம்பரப்பிள்ளையவர்களால் நிறுவப் பெற்றது. அவர் அக்காலத்து அரசாங்க சேவையிலிருந்து அகால மரணமடைந்த பின் அவரின் மைத்துனர் முறையினராகிய திரு. ஞா. தையல்பாகர் அவர்களின் பரிபாலனத்தின் கீழ் மிக்க உயர்நிலை எய்தி வளர்ந்து வருகின்றது. இத்தையல்பாகர்தான் சிவகுரு வித்தியாசாலையைத்தாபித்தவர். இவர் தனது உடல் பொருள் ஆவி ஆகிய அனைத்தையும் வித்தியாசாலைகளின் அபிவிருத்திக்காக அர்ப்பணம் செய்து அரும் பாடு பட்டு வருகின்றனர்.

இவ்வூரில், ஏனைய இடங்களில் இருப்பது போன்று இந்துக்களும் கிறிஸ்தவர்களும் கலப்பு மணம் செய்து கொள்ளும் வழக்கம் இல்லாதிருப்பதும் உள்ளூரவர்களே எல்லாவிதமான வியாபாரங்களையும் ஏற்று நடாத்தி வருவதும் ஆகிய இரண்டும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய செய்திகளாகும்

### தொழில்கள்

இவ்வூரவர்கள் பண்டைக் காலந் தொடங்கி அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளனர். முன் குறிப்பிட்ட திருமேனியாரின் தாயாருடன் கூடிப் பிறந்த பொன்னம்பலம் என்பவர் இந்தியாவிலும் இலங்கையிலும் பிரபல வியாபாரியாக இலங்கியதுடன் ஒல்லாந்த அரசாங்கத்தாரால் "முதலியார்" பட்டம் வழங்கப்பெற்றனர். இவருக்குப்பின் வேலுப்பிள்ளை என்பவரும் அவருக்குப் பின் புண்ணியமூர்த்தி என்பவரும் மணியகாரராயிருந்தவர்கள். இன்னும் இவ்வல்வெட்டித்துறை வாசிகள்பலர் இலங்கை அரசாங்க சேவையில் எல்லாத் துறைகளிலும் அமர்ந்து சேவை செய்து வருகின்றனர். மலாயா, பர்மா முதலிய இடங்களிலும் பலர் இருக்கின்றனர். இந்தியாவுக்கும் இவ்வூரவர்கட்குமுள்ள தொடர்பு இன்றும் இருந்து வருகின்றது.

இவ்வூரவரொருவர் ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஆஸ்பத்திரியைக் கட்டி "இந்திராணி வைத்தியசாலை." எனப் பெயரிட்டு அரசினரிடம் ஒப்புவித்துள்ளார். அவர் பெயர் முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளை. "ஜனசமூக நிலையம்" (Community Centre) ஒன்று ஊரவர்களால் ரூ. 13,500 செலவில் கட்டுவிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் :

"கோவிற்சிறப்பு மடச்சிறப் போடை குளச் சிறப்புக்
காவிற் சிறப்புப் புராணச் சிறப்புக் கனிந்தவருட்
பாவிற்சிறப்பு வெண்ணீற்றுச் சிறப்பிசைப் பண்சிறப்பாற்
பூவிற்சிறப்பு முற்றும் வல்வை யூரிற் பொலிந்தனவே."

"கலச்செல்வம் வாணிகச் செல்வங் கொடைச் செல்வங் காணிச் செல்வஞ்
சலச்செல்வந் தானதருமச் செல்வங்கல்விச் சாலைச் செல்வங்
குலச்செல்வ மக்கண்மனைச்செல்வஞ் சீர்ச்செல்வங் கொண்ட தபோ
பலச் செல்வமாய் வல்வை யூருக்கு முற்றும் பலித்தனவே"

"மருத்துவசாலை தண்ணீர்ப்பந்த ராணிரை வைப்புநிரைத்
தருத்திகழ் நீழல்வழியா வணமன்ன சத்திரநோய்
விருத்தரநாதர் பிணியினர் சாலைமிகக் குழுமக்
கருத்தொடு கண்புய்க்கலாதுறும் வல்வைக்கடி நகர்க்கே."

"கந்தவனநடு வாம்பருத் தித்துறை காணுங்கிழக்
கந்தணலர்ப்பொழில் வல்வை குடக்கி லணிவிளைத்துச்
சிந்துவின் றென்கரைப் பாலுற்ற மூன்று மெய்ச் சீர்பயக்கு
மிந்தவனக நயமேனையெந் நாட்டிலி லசந்ததுவே."

"நாணுளுஞ் செந்தமிழ் வாணருக் கேற்பன நல்கியிசை
பூணுவணிந்து சிவபத்தி யேறிப் பெற்றைமுதல
கோணுதணிந்து தருமமன்றுகிக்குலவியிடு
மாணுவு லோபரைக் காணுத வல்வைவள நகரே."

என உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரவர்கள் பாடியபடி பல்வகைச் சிறப்புக்களும் பெற்றுப் பொன்றுப் புகழுடன் பொலிந்து விளங்குகின்றது.

## இரண்டாவது நீர்மின்சார மத்திய ஸ்தானம்

அரசாங்கம் இரண்டாவது நீர்மின்சார மத்திய ஸ்தானமொன்றைத் தாபிக்க ஆலோசித்து வருகின்றது. இதுசம்பந்தமாக செக்கோசிலவேக்கிய அரசாங்கம் ஒரு நிபுணர் கோஷ்டியை அனுப்புவதாக உறுதிகூறியிருக்கின்றது. இந்நிலையத்தைத் தாபித்ததும் பல கைத்தொழில்கள் இதன் மூலமாக ஆரம்பிக்கப்படும். இக்கைத்தொழில்களில் பிரதானமானது பசளை உற்பத்தித் தொழிற் சாலையாகும். மத்தியத் தானத்தை ஸ்தாபிப்பதற்குகந்த இடத்தை செக் நிபுணர் கோஷ்டி தேர்ந்தெடுக்கும். இதற்கு முன்னும் பசளை உற்பத்தித் தொழிற்சாலை யொன்றை ஆரம்பிக்கும் நோக்கத்துடன் கைத்தொழில் மந்திரி காரியாலயம் ஆரம்ப நடவடிக்கைகளெடுத்த போதிலும், மின்சார சக்தியை இலகுவாகப்பெறமுடியாதிருந்தமையால் அது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

செக் அரசாங்கம் பசளை உற்பத்தித் தொழிற் சாலையை ஆரம்பிக்குமுன் மின்சார சக்தியைப் பெறுதல் அவசிய மென்பதையும், மேலதிகமாக உற்பத்தியாகும் மின்சாரத்தை வேறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உபயோகிக்கலாமெனவும் ஆலோசனை கூறியது. 1957-58 ம் ஆண்டு கைத் தொழில் விருத்தித் திட்டத்தில் இத் திட்டமும் இடம் பெறும். பசளை உற்பத்திக் கைத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் கோடிக்கணக்கான ரூபாவை இந்நாட்டிலேயே தேக்கிவைக்கவும், வேலையற்றோர் பிரச்சினையை ஒருவாறு சமாளிக்கவும் முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# சத்தியாக்கிரக யோசனை கைவிடப்பட்டது

## பிரதமருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் உடன்பாடு

பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்கா அவர்களுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் ஜூலை மாதம் 25 ந் திகதி யன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் சமரசமாக முடிவுற்றன.

இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு மகத்தான நிகழ்ச்சியெனக் கருதப்படும் இவ்வுடன்படிக்கை சுமார் ஆறுமணி நேரம் தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்குப் பின் கைச்சாத்திடப்பட்டது. அதோடு ஆகஸ்ட் சத்தியாக்கிரக யோசனையும் வாபஸ்பெறப்பட்டது.

இப்பேச்சு வார்த்தைகள் முடிவுற்ற பின் பிரதம மந்திரி அவர்களும் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் நள்ளிரவு விடுத்த ஒரு கூட்டறிக்கையின் விபரம் பின்வருமாறு :—

தேசத்தில் நெருக்கடியையும் பரபரப்பையும் எற்படுத்தியுள்ள தகராறுகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் பிரதமருடன் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகள் சிலவற்றை ஏற்க முடியாதென்று பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்திலேயே தெளிவாகிவிட்டது.

தமிழரசுக் கொள்கையையோ, பிரதேச சுயாட்சியையோ சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாதிக்கும் எவ்வித நடவடிக்கையையோ ஏற்க முடியாது என்று பிரதமர் கூறினர்.

தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் விட்டுக் கொடாமல் ஏதாவதொரு உடன்படிக்கையைச் செய்ய முடியுமா என்று ஆராயும் வினா எழுந்தது.

தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகளுக்கு நியாயமான முறையில் வசதியளிக்கக் கூடிய பிரதேச சுயாட்சி மசோதாவை ஆராய வேண்டுமென்று பிரதமர் யோசனை கூறினர்.

மொழிப்பிரச்சினை சம்பந்தமாக தமிழரசுக் கட்சி, தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை வலியுறுத்திற்று. ஆனல் பிரதமர் இவ்விஷயத்தில் வகிக்கும் நிலையையிட்டு சில திருத்தங்கள் செய்வதன்மூலம் சமஷ்டிக் கட்சியினர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர்.

தமிழை ஒரு தேசீய மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் கிழக்கு, வட மாகாணங்களில் நிர்வாக வேலைகள் தமிழில் நடாத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் எடுத்துக் காட்டினர்.

தாம் முன்பு கூறியபடி, அரசகரும மொழிச் சட்டத்தை மீறும் எவ்வித நடவடிக்கையையும் தாம் மேற்கொள்ள முடியாது என்று பிரதமர் கூறினர்.

இலங்கையின் தேசீய சிறுபான்மையினரின் மொழியான தமிழுக்கு சட்டத்தில் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று விவாதத்தின் பின் நிச்சயிக்கப்பட்டது. பிரதமரின் நாலு அம்சத்திட்டத்தில் அரசகரும மொழிச் சட்டத்தை எவ்விதமும் பாதிக்காமல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கும் வசதிகள் அடங்கியிருக்க வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு, மாகாணங்களிலுள்ள தமிழ் பேசாத சிறுபான்மையோருக்கு வேண்டிய வசதிகள் அளிக்க வேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

இந்திய வம்சாவழி வந்தவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தமாகவும் பிரஜா உரிமைச சட்டத்தைத் திருத்தி அமைப்பது சம்பந்தமாகவும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைப் பிரதமருக்குத் தெரிவித்து இப் பிரச்சினைகளை கூடிய விரைவில் தீர்க்கவேண்டும் என வற்புறுத்தினர். இப்பிரச்சினை கூடிய விரைவில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனப் பிரதமர் தெரிவித்தார்.

இந்த முடிவுகளை முன்னிட்டு தமிழரசுக் கட்சி தனது ஆகஸ்ட் சத்தியாக்கிரகத்தைக் கைவிடத் தீர்மானித்திருப்பதாக தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

---

# மொழிப்பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்தது

**கடந்த ஒரு வருட காலமாக மொழிப் பிரச்சினை நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வந்தது. இலங்கைப் பிரதமரும் திரு. செல்வநாயகம் அவர்களும் ஜூலை மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு 12.30 மணிக்கு ஒரு சமரச முடிவுக்கு வந்ததன் பயனாக மொழிப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். ஆகவே தமிழரசுக் கட்சி ஆகஸ்ட் மாதம் 20 ந் திகதி ஆரம்பிக்க விருந்த சாத்வீகப் போராட்டத்தை நிறுத்திவிடத் தீர்மானித்துள்ளது.**

இலங்கையை இதுநாள்வரை பிடித்திருந்த மொழிப்பிரச்சினைப் பேய் கடைசியாக அகன்றுவிட்டது. இலங்கை மக்களை இது நாள்வரை பீடித்து வந்த பயமும், சந்தேகமும் அகன்று விட்டன. நாட்டில் சமாதானம் நிலவ வழியேற்பட்டு விட்டது. மொழிப் பிரச்சினையை ஆதாரமாகக் கொண்டு, சத்தியாக்கிரக காலத்தில் நாட்டில் கொலை, களவு, தீக்கொளுவுதல் போன்ற அராஜகச் செயல்களைச் செய்து, பெருங் குழப்பத்தை உண்டு பண்ணி அரசாங்கத்திற்குக் கேடு சூழ நினைத்த தீவிரவாதிகளின் நோக்கத்தைக் கெடுத்து பிரதமர் பெரும் வெற்றியை ஈட்டி விட்டார்.

பிரதமருக்கும், தமிழரசுக் கட்சியினருக்குமிடையில் கடந்த ஒரு மாதகாலமாக நடந்து வந்த பேச்சு வார்த்தைகள் கடைசியாக ஆறுமணி நேரமாக நடந்த நீண்ட வாதத்தின் பின்னர் இலங்கையரெல்லோரும் திருப்தியடையக் கூடிய முறையில் சுமுகமாக நிறைவேறியது. கதிர்காமக் கந்தனை வழிபடும் இலங்கை மக்களைப் பீடித்திருந்த பிணி அவனுடைய கொடியேற்றத்துக்கு முதனாளே தீர்ந்துவிட்டமை மகிழ்ச்சிக்குரிய விஷயமே. இவ்வாரம் சிங்களரும், தமிழரும் சகோதரத்துவ மனப்பான்மையுடன் கதிர்காமஞ் செல்லத் தக்கதாக விருக்கின்றது. மொழிப் பிரச்சினை யெனும் கொடிய அரக்கன் வீழ்ந்துபட்டமையால் இலங்கை மக்கள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து இன்புற்றுவாழ வகைதேடுவதில் முயன்று வெற்றி காண்பார்களாக.

# மன்னார்ப் பிரதேச அபிவிருத்தித் திட்டம்

மன்னார்ப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தற்பொழுது விசாலமான ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் 20 நீர்ப்பாய்ச்சற் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். மன்னார்ப் பிரதேசத்தின் விஸ்தீரணம் 612800 ஏக்கராகும். ஆனால் இங்கு 42 அங்குல மழை வீழ்ச்சியே வருடத்திற்கு பெறப்படுகின்றது. இலங்கையின் மற்றெல்லாப் பிரதேசங்களிலும் பார்க்க இங்குதான் குறைந்த மழை வீழ்ச்சியுண்டு. இங்கு வசிக்கும் 46000 மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளாவர். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வேளாண்மை செய்யப்படுகின்றது. இதில் 12,124 ஏக்கர் வயல் நிலம் கட்டுக்கரைக் குளத்திலிருந்தும், அகத்திமுறிப்புக் குளத்திலிருந்தும் நீரைப் பெறுகின்றது. 3687 ஏக்கர் நிலம் கிராமங்களிலுள்ள குளங்களிலிருந்து நீரையும் 2,000 ஏக்கர் காணி மழை நீரையும் பெறுகின்றன. மேலே குறிப்பிட்ட காணி முழுவதும் பெரும் போக விளைச்சலைப் பெற்ற போதிலும், கட்டுக்கரைக் குளத்தினால் நீர்ப்பாய்ச்சப்படும் 3,000 ஏக்கர் வயல் நிலம் மாத்திரமே சிறு போக விளைச்சலைப் பெறுகின்றது. மன்னார்ப் பிரதேசம் மோதரகம் ஆறு, கல்லாறு, நாயாறு, அருவிஆறு, பறங்கிஆறு ஆகிய ஐந்து ஆற்றுப் பள்ளத்தாக்குகளாலாயது. தற்பொழுது பயிர்ச்செய்கைக்கு அருவி ஆற்றிலிருந்து மாத்திரமே நீர் பெறப்படுகின்றது. மற்ற நாலு ஆறுகளின் நீர் வீணே பாய்கின்றது. பொது மக்களின் பிரயோசனம் கருதி இவ்வாறுகளின் நீரைத் தேக்குவது மிகவும் அவசியமாகும். தற்பொழுது அரசாங்கம் மோதரகம் ஆற்றினதும், பறங்கி ஆற்றினதும் நீரைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றது.

மோதரகம் திட்டத்தின்கீழ் ஆற்றை மறித்து அணைகட்டுவதும், பிரதான கால்வாயை வெட்டுவதும் அடங்கும். இக்கால்வாயின் மூலமாக வியாதிகுளத்திற்கும், மறிச்சுக்கட்டிப் பிரதேசத்திலிருக்கும் மற்றக்குளங்களுக்கும் நீர் கொண்டு செல்லப்படும். இக்கால்வாய் மூலமாக நீரைப்பல விடங்களுக்கும் கொண்டு செல்வதன் பயனாக இக்குளங்களால் நீர்ப்பாய்ச்சப்படும் வயல் விளைச்சல் பாதிக்கப்படாதிருப்பதோடு, மேலதிகமாக ஆயிரம் ஏக்கர் காணியை விளை நிலமாக்கவும் வசதியேற்படும். இத்திட்டத்திற்கு ஒன்பது லட்ச ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது திட்டத்தில் குறைக்குளத்தைப் புனருத்தாரணஞ் செய்யும் வேலை இடம் பெறுகின்றது. பறங்கி ஆற்று நீரைப் பயன் படுத்த ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு எட்டுலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்படும். குறைக்குளத்தைத் திருத்திக் கட்டுவதனால் இக்குளத்தைச் சுற்றிவர உள்ள கிராமங்களின் வயல் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைப்பது மல்லாமல், மேலதிகமாக 500 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தவும் வசதியேற்படும். ஆற்றின் தொடக்கத்தில் இன்னுமொரு விசாலமான குளத்தைச் சீர்திருத்திக்கட்டுவது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது. இது தவிர தற்பொழுது 106 ஏக்கர் நிலத்திற்கு நீரளிக்கும் பணன்காமக் குளத்தையும் புனருத்தாரணஞ் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவழியும். இதைத் திருத்தினால் 200 ஏக்கர் நிலத்திற்கு நீர் பெறலாம்.

இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட விருக்கும் மன்னார்ப் பிரதேச அபிவிருத்தி வேலைக்கு 20 லட்சம் ரூபா அரசாங்கம் செலவழிக்க நேரிடும். இவை மாத்திரமல்லாது பெரியாண்டு விரிச்சன்குளக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் 370 குடும்பங்கள் குடியேற்றப் படவிருக்கின்றன. கல்லாற்றிற்கும், அகத்திமுறிப்புக்கும் இடையிலுள்ள சொரொவ் நீரோடையைச் சீர்திருத்தவும், அருவி ஆற்றுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்தைக் கட்டவும் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது. இந்நீர்த் தேக்கம் சம்பந்தமான பொறி இயற்றுறைப் பரீட்சைகள் இவ்வருடத்திலேயே ஆரம்பிக்கப்படும்.

கட்டுக்கரைக் குளத்தின் விஸ்தீரணம் 26596 ஏக்கர் அடியாகும். மக்கள் வரட்சியால் வருந்தும் அதே நேரத்தில், எவ்வளவு நீர் வீணாகப் போகின்றதென்பது இதிலிருந்து விளங்கும். மல்வத்து ஓயா நீர்த் தேக்கத்தைக் கட்டிமுடித்தும் வீணாக வடிந்து செல்லும் நீரைத் தேக்குவதுடன், தற்போது பயிர் செய்யப்படும் வயல் நிலங்களுக்குத் தவறாது நீரளிக்கவும் முடியும். அத்துடன் மேலதிகமாக 17,000 ஏக்கர் வயல் நிலங்களைப் நீர்பாய்ச்சவும் வசதி ஏற்படும். மல்வத்து ஓயாவும், அதன் பிரதான கிளைநதியான கனதர ஓயாவும் பாய்கின்ற வட மத்திய மாகாணத்தின் நுவரகம் பலாத்தை மக்களுக்கும் இவ்வாற்றிலிருந்து நீரைப் பெறும் உரிமையுண்டு. தேக்கம் அணைக்கட்டிற்கு 43 மைல் தூரத்திற்கப்பாலுள்ள மிகிந்தலை கனதர ஓயாவுக்குக்குறுக்கேயுள்ள மகாகனதரவாவியைப் புனருத்தாரணஞ் செய்வதால் இம்மக்கள் பயன் பெறமுடியும். அதனால் 13,700 ஏக்கர் அடி நீரைத் தேக்கி வைக்கத்தக்கதாக இவ்வாவியின் ஒரு பகுதியை அரசாங்கம் சீர் திருத்தி வருகின்றது. மல்வத்து ஓயா நீர்த்தேக்கம் கட்டிமுடிக்கப்படும்வரை மகாகனதர வாவியின் முழுமையும் திருத்திக்கட்டப்படமாட்டாது. அவ்விதம் கட்டி 52,000 ஏக்கர் அடி நீரை வாவி தேக்குமானால் கட்டுக்கரைக்குளத்திலிருந்து நீரைப் பெறும் குடிமக்களும், மன்னார் வாசிகளும் பாதிக்கப்படுவர்.

மன்னார்ப்பிரதேசத்தில் தற்பொழுது ஆரம்பித்திருக்கும் நீர்ப் பாய்ச்சற்திட்டம், இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அங்குரார்ப்பணஞ் செய்துள்ள தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாகும்.

## வட இலங்கையில் ஒரு வாரம்

(30 ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கினர். இதற்கிடையில் நண்பர் சிவப்பிரகாசம் சோடாப் போத்தல்களுடன் வந்து சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து முற்பக்கம் சிறிது வழுக்கல் தலையும் அகன்ற நெற்றியுமுடைய ஒருவர் விசுக்கோத்துப் பெட்டியைக் கொண்டுவந்து நீட்டினர். இவர்தான் ஆசிரிய சங்கத்தலைவர் திரு. தம்பிரத்னம் என அறிந்தோம். ஆசிரிய சங்கச் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்தாலும் அதனால் எற்றுண்டுபோகாமலும் நிலைகுலையாமலும் இருக்கும் அமைதி அவர் முகத்தில் தோன்றியது. பின்னர் சிறிது நேரம் இலங்கையர் கோன் எழுதிய "மிஸ்டர் குகதாசன்" எனும் நாடகத்தைப்பார்த்து மகிழ்ந்தோம். வாடி வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு மறுபடியும் பொருட் காட்சி விழாவிற் சிறிது நேரம் செலவழித்தோம். அப்பொழுதுதான் கலைப் புலவர் திரு. க. நவரத்னம் அவர்களையும் வட மாகாண அதிபர் அவர்களையும் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. வட இலங்கையில் கலைஞர்கட்குப் போதிய ஆதரவு கிடைப்பதில்லை யென்றார் கலைப்புலவர். கலையை வளர்க்கத்தானே உங்கள் சங்கம் ஏற்பட்டுள்ளது என்று விடைகூறினேன். யாழ் தேவியிற் பிரயாணஞ் செய்த களைப்பும், கலைவிழாவில்பட்ட நெருக்கடியால் விளைந்த இளைப்பும் சேர்ந்து கொண்ட படியால் நித்திராதேவியின் அழைப்பை ஆனந்தத்துடன் ஏற்றோம்.

(வளரும்)

# சிங்களத்தில் தேர்ச்சி பெறுவோருக்கு போனஸ் உபகாரப்பணம்

சிங்களத்தை அரசாங்க பாஷையாக்கும் அரசாங்கத்தின் கொள்கையைத் தொடர்ந்து, 1960 ம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு முன்பு திறமைப் பரீட்சை (உயர்ந்த தரம்) யில் சித்தியெய்தும் அரசாங்க ஊழியருக்கு ஓர் உபகாரப் பணம் (போனஸ்) வழங்க கடந்த வாரம் திறைசேரி அங்கீகாரமளித்துள்ளது.

இந்த உபகாரப் பணம், அரசாங்க சேவையில் எற்கெனவே சேர்ந்தவர்கள் (அதாவது 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி திகதிக்கு முன்பு அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனம் வகித்தவர்கள்) சிங்கள பாஷையில் தேர்ச்சி யடையும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக அளிக்கப்படுகிறது.

இந்த உபகாரப் பணம் பெறத் தகுதியுடையவர்கள் பின்வரும் தொகைகளைப் பெறுவர் :—

(அ) உத்தியோகத்தர் 45 வயதுக்கு மேற்பட்டவரானால், நான்கு வருடாந்த சம்பள உயர்ச்சிப் பணத்துக்குச் சமமான பணம்.

(ஆ) உத்தியோகத்தர் 45 வயதுக்குக் குறைந்தவரானால், மூன்று வருடாந்த சம்பள உயர்ச்சிப் பணத்துக்குச் சமமான பணம்.

(இ) வருடாந்தச் சம்பள உயர்ச்சி வழங்கப்படுதற்குரிய சம்பள விகிதத்தின் ஒரு பகுதியாகாத, வரையறுக்கப்பட்ட ஒரே சம்பளம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள், அவர்களது உத்தியோகத்துடன் ஒப்பிடக் கூடிய தாரதரத்திலுள்ள ஒரு உத்தியோகம் வகிப்பவரும், அவர்களது வரையறுக்கப்பட்ட சம்பளத்துக்குக் கிட்டிய சம்பளத்தை ஆகக் கூடிய சம்பளமாகக் கொண்ட வருடாந்தச் சம்பள உயர்ச்சி வழங்கப்படுதற்குரிய சம்பள விகிதத்திலுள்ளவருமான ஒரு உத்தியோகத்தருக்குச் செலுத்தப்படக்கூடிய உபகாரப் பணத்தை (போனஸ்) பெறுவர்.

(ஈ) மேலே (அ), அல்லது (ஆ) அல்லது (இ) யின் பிரகாரம் கணக்கிடப்படும் தொகை 500 ரூபாவுக்குக் குறைவானதாகவிருப்பின், செலுத்தப்படும் உபகாரப்பணம் 500 ரூபாவாக விருக்கும்.

திறமைப் பரீட்சையில் சித்தியெய்தும்போது உத்தியோகத்தர்கள் 55 வயதுடையவர்களாயிருப்பின், அவர்களுக்கு உபகாரப் பணம் வழங்கப்படமாட்டாது.

உபகாரப்பணம் பெறும் உத்தியோகத்தர்கள், அதைப்பெற்ற பின்பு, உத்தியோகப் பூர்வமான கடிதப் போக்குவரத்துகளைச் சிங்களத்தில் நடாத்தும் படியும், குறிப்புகளைச் சிங்களத்தில் எழுதும் படியும் கேட்கப்படின் அவ்விதம் செய்தல் வேண்டும். உபகாரப் பணம் பெற்றுக்கொண்டு எந்த உத்தியோகத்தராவது மேற்குறிப்பிட்டவாறு செய்யத் தவறினல், அவர் வருடாந்தச் சம்பள உயர்ச்சியை இழக்க அல்லது அதுபோன்ற தண்டனைக் குட்படப் பாத்திரராவர்.

சிங்களத்தில் அடைந்துள்ள திறமையை முன்னிட்டு அரசாங்க சேவையில் சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்—உதாரணமாக, சிங்களத்திலிருந்து அல்லது சிங்களத்துக்கு மொழிபெயர்க்க நியமிக்கப்பட்டுள்ள தொலுக்கு முதலிமார்கள், மொழிபெயர்ப்பாளர்கள் (சிங்களத்திலிருந்து அல்லது சிங்களத்துக்கு மொழி பெயர்ப்போர்), தட்டெழுத்தாளர்கள் (சிங்கள பாஷையில்) சுருக்கெழுத்தாளர்கள் (சிங்கள பாஷையில்), சிங்கள பாஷையில் பரீட்சை எழுதியதன் மூலம் அரசாங்க சேவையில் நியமனம் பெறத் தகுதிபெற்ற அல்லது அரசாங்க சேவையில் சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்—உபகாரப்பணம் (போனஸ்) பெறத் தகுதியுடையோராகார்.

அடுத்த திறமைப் பரீட்சை இவ்வருட இறுதியையடுத்து நடாத்தப்படும்.

---

## புகையிரதப் பகுதியின் முன்னேற்றம்

மற்றெல்லா வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் புகையிரதப் பகுதி அதிக வருமானத்தைப் பெற்றிருக்கின்றது. இவ்வருட வருமானம் எழுகோடி 70 இலட்சத்து 59 ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து ஏழு ரூபாவாகும். இவ்வருடவருமானத்தை முந்தியவருடத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது இவ்வருடம் கடந்தவருடத்திலும் 3,940,484 ரூபா அதிகமாகப் பெற்றிருக்கின்றது. பிரயாணிகள் போக்குவரத்து, சாமான்களை அங்கும் இங்கும் கொண்டு செல்லுதல் போன்ற வேலைகள் மூலமாக இவ்வருமானம் கிடைத்திருக்கிறது.


பிரயாணிகள் மூலமாக 30,372,072 ரூபா கிடைத்தது. புகையிரத—பஸ் சேவைமூலமாக இரண்டு லட்சத்து ஐம்பத்தாறுயிரத்து எழுநூற்று எண்பத்து நாலு ரூபா கிடைத்திருக்கிறது. கடந்த மே மாதம் கிடைத்த வருமானம் ரூபா எட்டுலட்சமாகும்.

---

## கிராமாபிவிருத்தி

உள்நாட்டு விவகார மந்திரிகாரியாலயம் இவ்வருடம் கிராமாபிவிருத்தித்திட்டத்தை மிகவும் விசாலமான முறையில் அமுல் நடத்த நடவடிக்கை யெடுத்து வருகின்றது. இத்திட்டத்திற்கு 13,640,219 ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி அடுத்தவருடம் இவ்வருடத்திலும் பார்க்க 5,106,900 ரூபா கூடச் செலவாகும். இவ்வருடத்தில் கிராமாபிவிருத்திக்காக 8,540,210 ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமாபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக இந்நாட்டு மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு வழிகோலலாமென அமைச்சு கருதுகிறது.

கைத்தொழில் விருத்திக்காக ஒதுக்கப்படும் பணத்தின் அளவும் அடுத்தவருடம் அதிகரித்துள்ளது. இதற்கென 4,516,500 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகையில் 1,288,000 ரூபா குடிசைக் கைத்தொழில் இயந்திர உபகரணங்களைப் பெறவும் 180,000 ரூபா கட்டடங்கள் எழுப்பவும், அடிப்படைப் பொருட்களைப்பெற 801,500 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. வேலையற்றிருக்கும் யுவ, யுவதிகளின் கஷ்டத்தை நீக்கும் நோக்கத்துடன் 460 நெசவுக் கைத்தொழில் நிலையங்கள் இவ்வருடத்தில் திறக்கப்படவிருக்கின்றன. இந்நிலையக் கட்டடங்களை எழுப்ப 6,700,00 ரூபா செலவிடப்படும். குடிசைக் கைத்தொழிற் பகுதி ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கும் 1,000 நிலையங்களுள் மேலே குறிப்பிட்ட 460 நிலையங்களும் அடங்கும். இதன் மூலமாக வேலையற்றிருக்கும் 25,000 யுவ, யுவதிகளுக்கு வேலை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது 540 நிலையங்கள் திறக்கப்பட்டு 13,500 பேருக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.



கல்லோயாக் குடியேற்றத் திட்டம் உருவாகின்றது.

# கல்லோயாவில் புதுவாழ்வு


மெல்வில் பெர்ணண்டோ

சிலகாலத்துக்கு முன்னர் கிழக்குமாகாணத்துக்கு யாராவது போயிருந்தால் வெறும் வனப்பிரதேசத்தைத் தான் அங்கு கண்டிருக்க முடியும். அப்பொழுது எங்கும் அடர்ந்து கிடந்த காட்டின் மத்தியிலே ஆங்காங்கு சிறு கிராமங்கள் காட்சியளித்தன. இக்கிராமங்கள் பெரும்பாலும் குளங்களைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்தன. முன்னொருகாலத்தில் செழிப்புடன் விளங்கிய, கிழக்குமாகாணத்தின் விவசாயச் சிறப்பின் சிதைந்து கிடக்கும் சின்னங்களாக இக்கிராமங்களும் குளங்களும் காட்சியளித்தன. பலநூற்றுண்டுகளாக நடந்துவந்த உள்நாட்டுப் பூசல்களும், வெளிப் புறத்தாக்குதல்களும் கிழக்கிலங்கையின் வளத்தைச் சீர்குலைத்தன. அதன் பயனே இச்சிதைந்து கிடந்த குளங்களும், சீர் குலைந்த கிராமங்களும். அடர்ந்தகாடு கிராமங்களை அழித்தது. சில நூறு குடும்பங்களே பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு இப்பகுதிகளில் வாழ்ந்துவந்தனர். வருடத்தில் மூன்றுமாதம் மாரி காலத்தில் பயிர்ச்செய்கை நடைபெற்றது. எஞ்சிய காலத்தில் பஞ்சமும் நோயும் வாழ்வைப் பாழ்படுத்தி எக்கவாழ்வில் கிடந்தனர் கிராமமக்கள்.

## வற்ருத ஜீவநதி

இக்காடடர்ந்த பிரதேசத்தில் கல்லோயா நதி தவழ்ந்து கொண்டிருந்தது. ஊவாப்பிரதேச மலைகளில் உதித்து, அறுபத்திரண்டு மைல் தூரம் ஆடி அசைந்து, மட்டக்களப்புக் கடலிலே முழுகுவதற்கு இப்பிரதேசத்தினூடாகச் செல்கிறது கல்லோயா நதி. வடகீழ்ப்பருவப்பெயர்ச்சிக்காற்று வீசி மழை பொழிய ஆரம்பித்ததும் கல்லோயா நதி தன் உடல் பருத்து நீர்ததும்பி நிற்கும். ஆனல் வெய்யில் காலம் வந்ததும் வாடி வதங்கி, மேனி மெலிந்து ஒரு சிற்ருறு போல் ஆகிவிடுகிறது நதி. இருப்பினும் முற்ருக வரளுவதில்லைக் கல்லாறு. வற்ருத ஜீவநதி கல்லோயா.

இக்கல்லோயாப்பள்ளத்தாக்கில் 5,000 எக்கர் விஸ்தீரணம் கொண்ட காடு மண்டிக்கிடக்கிறது. இக்காட்டிலே தான் இலங்கையின் பழங்குடிமக்களான வேடர்கள் அதிகமாக வசிக்கின்றனர். சிறியதும் பெரியதுமான குழுக்களாக இவர்கள் ஆங்காங்கு வாழ்கின்றனர். இவ்வேடர்களுக்கு வாழ்க்கை ஒரு பெரும் போராட்டம். நதி ஒன்றே அவர்கள் நண்பன். அந்நண்பனைத் துணைக்கொண்டு வாழ்க்கைப் போரை நடாத்துகின்றனர் அவர்கள்.



குடியேற்ற வாசி தனது குடும்பத்துடன்

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நிறுவப்பட்ட முதலாவது அரசாங்கம் கல்லோயா ஆற்றை மறித்து, அதன் நீரை உபயோகித்து பயிர்ச்செய்கையை அதிகரிக்கலாம் என்று கண்டது. அதுமட்டுமல்ல அதே நீரை உபயோகித்து நீர் மின்சார சக்தியைத் தோற்றுவிக்கலாம் என்றும் அரசாங்கம் கருதியது.

### பழைய நீர்ப்பாய்ச்சல் திட்டம்

கல்லோயா நீரைப்பயன்படுத்தும் திட்டம் புதியதுபோல் தோன்றினும் உண்மையிற் புதியதல்ல.. பண்டைய மன்னர்கள் ஈழநாட்டில் செங்கோ லோச்சிவந்த காலத்திலும் கூட கல்லோயா நதி நீர்ப்பாசனத்துக்குப் பெரிதும் உதவியது. நதியோரத்தில் பல "வில்லுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன. இன்றும் இவ்வில்லுக்கள் பலவற்றைக் காணக் கூடியதாயிருக்கின்றது. இவ்வில்லுக்கள் முற்காலத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கவேண்டும். இலங்கையில் தேசாதிபதியாக இருந்த சேர். ஹென்றி வார்ட் என்பவர் இவ்விஷயமாகப் பின்வருமாறு குறிப்பிட்டார் :

"முற்காலத்திய இவ்வமைப்புகளைப்பற்றி நான் அதிகம் கூற வேண்டியதில்லை. முன்னர் இருந்தவற்றை புதுப்பிக்க வேண்டும். அவ்வளவுதான். பழைய ஒரு திட்டத்தைப் புதுப்பிக்கும் வேலையே இது. புதியதைத் தொடங்குவதல்ல" ("இலங்கையின் புராதன நீர்ப்பாய்ச்சல் அமைப்புகள்"—புரோகியர் எழுதியது).

கல்லோயாப்பள்ளத்தாக்கில் முதலில் நில அளவை உத்தியோகத்தர் தம் வேலையைத் தொடங்கினார்கள். எத்திட்டத்திற்கும் முதல் முதலில் நில அளவை உத்தியோகத்தரே நிலத்தை அளந்து படம் வரைதல் வேண்டும். எனினும் அதற்காக அவர்களுக்குரிய கௌரவத்தைக்கொடுப்பவர் எவருமிலர்.


### அணைக்கட்டு

அவர்கள் தமது வேலையை முடித்துக்கொண்டதும் அணைக்கட்டை அமைக்கும் வேலை ஆரம்பமாயிற்று. இங்கினியாகலையில் இது அமைக்கப்பட்டது. இவ்வணைக்கட்டு 770 அடிநீளங்

வைக்கோற் போர்.



கல்லோயாவில் காட்டு யானை.



கொண்டது. அடித்தளம் 800 அடி அகலம் கொண்டது. மேற்தளம் 30 அடி அகலமானது. அங்கே ஒரு வீதி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வணைக்கட்டு முற்றிலும் மண்ணால் கட்டப்பட்டு சீமெந்தால் வெளியில் பல முறுத்தப்பட்டிருக்கிறது.


51 லட்சம் கனயார் கொண்ட மண் இவ்வணைக்கட்டைக்கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல மண் நன்கு பரிசோதிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டது. இம்மண் அணைக்கட்டு வெளிப்புறத்தில் சீமேந்தால் அரண்செய்யப்பட்டு உறுதியுடன் நிற்கிறது. பண்டைக்காலத்தவர் மண்ணை உபயோகித்தனர். நமது அணைக்கட்டில் மண் பெருமளவில் உபயோகிக்கப்பட்டமை அவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்காது. ஆனால் சீமேந்தை அவர்கள் அறியார்கள். அறிந்திருந்தால் பெரிதும் மெச்சுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. பழைமையும் புதுமையும் கைகோர்த்துநின்று இப்பாரிய அணைக்கட்டை உருவாக்கியிருக்கிறது.

இவ்வணைக்கட்டால் தோற்றுவிக்கப்பட்டுள்ள நீர்த்தடாகம் 11 மைல் நீளம் கொண்டது ; 7½ மைல் அகலங்கொண்டது. இதன் நீரைக்கொண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் எக்கர் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்ய முடியும். 10 ஆயிரம் கிலோவாட் நீர் மின்சார சக்தியையும் இந்நீர்ப்பரப்பின் உதவியால் பெற முடியும். இந்நீர்மின்சாரசக்தியை வீடுகளில் விளக்கேற்ற மட்டுமல்ல, தொழிற் சாலைகளின் சக்கரங்களை முடுக்கவும் நாம் உபயோகிக்கலாம்.

### காடுநாடாயிற்று

நீர்ப்பாய்ச்சலுக்கான நீரை வடிகால் தாங்கிச் செல்கிறது. இவ்வடிகால்களின் மொத்த நீளம் 480 மைலாகும் ! இன்று இவற்றின் மூலம் 50 ஆயிரம் எக்கர் நெல்லுக்கு நீர்பாய்ச்சிப் பயன் பெற முடிகிறது. ஆனால் சிலகாலங்களுக்குமுன்னர் ஜனசஞ்சாரமற்ற காடாய்க்கிடந்த பிரதேசமே இப்பொழுது இன்று இவ்விதம் நெற்காடாய்க் காட்சியளிக்கிறது. முப்பது வருடங்களுக்குமுன்னர் ஒரு சிலர் இப்பள்ளத்தாக்குக்கு விஜயஞ் செய்த போது இங்கு விவசாயத்தைப் பெருக்கலாம் எனக் கண்டனர். அதனைத்தம் வாயாலும் வெளியிட்டனர். அப்பேரவா இப்பொழுது நிறைவேறிவிட்டது. " காட்டின் நடுவே நில அளவை உத்தியோகத்தர் நடமாடுகின்றனர். பண்டையகுளங்களின் அழிபாடுகளின் நடுவே நடமாடுகின்றனர். பண்டைப் பெருமையின் அழியாச்சான்றுகவிளங்கும் இப்பழைய நீர்ப்பாய்ச்சல் முறையால் செழிப்புடன் விளங்கிய இப்பகுதி மீண்டும் ஈழநாட்டின் தானியக்களஞ்சியமாகலாம் என்று எண்ணுகையில் நமது உள்ளம் மலர்ச்சியடைகிறது " (புரோகியர் : " இலங்கையின் புராதன நீர்ப்பாய்ச்சல் அமைப்புகள் ").

குடியேற்றவாசிக்காகக் கட்டப்பட்ட வீடு.



### குடியேற்றத்திட்டம்

கல்லோயாத்திட்டத்தை மேற்பார்வை செய்து நிறைவேற்ற அரசாங்கம் கல்லோயாச் சபையை நிறுவியது. அணைக்கட்டை அமைப்பதோடு அதன் வேலை நின்று விடவில்லை. கல்லோயாக் குளத்தை அமைக்கையில் அதன் அமைப்பால் தம் வீடுவாசலைக்கைவிடவேண்டிவந்தவர் பலர். அவர்களுக்கு வசிப்பிட வசதிகளைச் சிறப்புறச் செய்துகொடுப்பதும், புதிய விவசாயிகளை இத்திட்டத்தில் குடியேற்றுவதும் இச்சபையின் கடனாயிற்று.

300 குடும்பங்கள் குளத்தை அமைத்ததால் தம் வீடுவாசல்களை இழந்தனர். இவர்களே கல்லோயாத்திட்டத்தில் முதலாவதாகக் குடியேற்றப்பட்டவர்கள். பின்னர் இலங்கையின் நாலுபக்கங்களிலிருந்தும் நிலமில்லாத விவசாயிகள் இங்கு அழைத்து வந்து குடியேற்றப்பட்டார்கள்.

அவர்களுக்கு வசிக்கும் அறை, படுக்கையறை, சமையல் அறை, மலகூடம் என்பவற்றோடு கூடிய ஓர் இல்லம் அளிக்கப்படுகிறது. ஆறாயிரம் வீடுகளோடு கூடிய நிலங்கள் இவ்வாறு பங்கிட்டளிக்கப்பட்டது. 50,000 பேர் இவற்றில் குடியேறிவசிக்கிறார்கள்.

இவ்விவசாயிகளுக்கு உறு துணையாகக் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் விவசாயிகளுக்கு உத்தரவாதவிலைகள் கிடைக்கின்றன. அதாவது அவர்களின் பொருட்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாத ஒரு விலையை நிர்ணயித்து அவ்விலைக்கு விளைபொருட்கள் அவர்களிடமிருந்து வாங்கப்படுகிறது. இத்திட்டம் விவசாயிக்கு நல்ல வருமானத்தை ஸ்திரமாகக் கொண்டு வருவதோடு தரகர்களின் தேவையையும் குறைத்துவிடுகிறது. வருடமொன்றுக்கு 80 லட்சம் ரூபா பெறுமதியான நெல் இவற்றால் வாங்கி விற்கப்படுகிறது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலிய வசதிகளும் படிப்படியே அதிகரித்து வருகின்றன.

### இலங்கையின் மிகப் பெரியகுளம்

இத்திட்டத்தின் முக்கிய வேலைகள் யாவும் முடிந்துவிட்டன. வறிதே கடலில் பாய்ந்ததண்ணீர் இப்பொழுது மனிதனுக்குப் பேருதவியாகிவிட்டது. காடழிந்து வருகிறது ; நிலமற்ற விவசாயிகளின் வாழ்க்கையில் புதுமலர்ச்சி உண்டாகிவருகிறது. பட்டினிகிடந்தோர் இப்பொழுது பசிதீர்ந்து வாழவழி கிடைத்திருக்கிறது.

இங்கினியாகலை மலையின் நிழலிலே ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு காட்சியளிக்கிறது. அணைக்கட்டுக்கு அணித்தே மின்சார நிலையம் காட்சியளிக்கிறது. ஒரு புறத்தில் பச்சைப்பசும் வயல் பல மைல் தூரம் பரந்துகிடக்கிறது. இன்னோர் புறம் எண்பது மைல் கரை யோரங்கொண்ட நீர்ப்பரப்பு, இலங்கையின் சரித்திரத்திலேயே மிகப் பெரிய குளம் காட்சியளிக்கிறது. இலங்கையின் முதற் பிரதமமந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவின் ஞாபகார்த்தமாக " சேன நாயக்கா சமுத்திரம் " என்ற பெயரால் இந் நீர்ப்பரப்பு அழைக்கப்படுகிறது. இலங்கையின் எதிர்காலம் அதன் விவசாயச்செழிப்பிலேயே தங்கியிருக்கிறதென்பதை தெளிவாகக்கண்டு அதற்காகச் சளையாதுழைத்த ஒருவரின் பெயர் அயற்குச் சூட்டப்பட்டிருப்பது மிகவும் பொருத்த மானதே.

[இலங்கைத் தகவல் பகுதியின் சினிமாப் பிரிவு தயாரித்த "கல்லோயாப் பள்ளத்தாக்கில் புதுவாழ்வு" என்ற படத்தின் விளக்கத்தைத் தழுவி இக்கட்டுரை தயாரிக்கப்பட்டது.]



கல்லோயாப் பள்ளத்தாக்கு ஆகாயத்திலிருந்து தோற்றும் விதம்.

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | | தபாற் செலவு ச. |
|---|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 | .. | 10 |
| 2. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. .. .. | 50 | .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. .. .. | 1.20 | .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் | 70 | .. | 15 |
| 5. | இந்துமத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. | 2.00 | . | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. | 5.00 | .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டுப் மொழிகளாக தேசீய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. .. | 1.45 | .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. | 2.00 | .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 1.55 | .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலீக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 60 | .. | 20 |
| 11. | இலங்கை பறவைகள்—சித்திரசகித நூல் .. | 5.00 | .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு, 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.